TIRUVANMIYUR, MADRAS-41.

அன்பளிப்பு

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரதேசிக ரந்தாதி.

## கட்டளைக் கலித்துறை.

பதிபசு பாசத்தைப் பாசம் பசுபதி யாக்கியொரீஇப்
பதிபசு வாகப் பசுபதி யாக்கிப்பின் னும்பயிற்றிப்
பதியெனத் தானாய்ப் பயிலுந் திருவா வடுதுறைசைப்
பதிவளர் பஞ்சாக் கரவனை யென்சொல்லிப் பாடுதுமே. (1)

பாடுதும் பஞ்சாக் கரவனை யென்று படர்தலொடுங்
கூடுவ தன்னவன் பாத மதுவந்து கூடுதலு
நீடுவ தின்ப மனவாக்குக் காய நிகழ்செயலற்
றோடுவ வாளாங் கிருப்பதல் லாற்பின்னை யொன்றில்லையே. (2)

ஒன்றில்லை யாக வுயிருள தாக வுருவங்கொண்டு
தென்றில்லை யாடி துறைசையிற் பஞ்சாக் கரவன்சென்று
நின்றில்லை யாதியென் றானின்ற யான்சென்று நின்றிறனு
நன்றில்லை தீயது மில்லைசொல் லாவொன்று நண்ணியதே. (3)

நண்ணிய பாசஞ் சடமா ணவமறி ஞானமேவ
கண்ணுவ தின்றுயி ரொன்றா யுணர்த்துங் கதியறிவைத்
திண்ணிய பாச வறிவு பசுவறி வென்றுசெப்பி
யெண்ணுவ தென்னை யியம்பாய்பஞ் சாக்கர வின்குருவே. (4)

குருவா யருள லுயிர்க்கின்மை யாருங் குறிக்கொடிய
வருவா யருவுரு வாயுரு வாயவை தானெனநற்
பெருவான் பொருடன் பெருட்பெய ரேபெய ராகவந்த
வொருவாய்மை தன்னை நினையிலு முள்ள முருகுவதே. (5)

உருகுங் கருணைப் பெருந்திற னோக்கி யுளமெழுகாய்ப்
பருகுந் தணப்பற வானந்தத் தேறல் பமரமெனத்
திருகும் வினையின் றிருக்கறத் தாண்டுதன் சேவடிக்கீழ்த்
தருகின்ற பஞ்சாக் கரவனொ டாடிய தாழ்குழலே. (6)

தாழ்கின்ற கூந்தன் மலர்சூட்டித் தையலர்த் தோயுமின்பத்
தாழ்கின்ற வென்னைத்தன் பாதத்தி லார்வ மளித்துளத்தைப்
போழ்கின்ற வைம்பொறி போழ்ந்துபஞ் சாக்கர பூரணன்மெய்
வாழ்கென்று சென்னி மலர்க்கைகளைத் தானின்ப மல்கியதே (7)

மல்கிய சஞ்சிதக் காட்டை யெரிவாய் மடுத்துடலிற்
புல்கிய வின்பத்துன் பங்களெல் லாம்பின்பு பூப்பதின்றி
யல்கிய பஞ்சாக் கரனே சிகனாரு ளாற்கவர்ந்து
நல்கிய வாய்மைக்குக் கைம்மாறு கண்டில னல்குதற்கே. (8)

நல்குந் தொழிறனக் கேயன்றி யில்லா நலத்தகைசீர்
பல்குந் துறைசைப்பஞ் சாக்கர தேவன் பணித்திடுங்கான்
மெல்குந் திறமெனக் குள்ளது முல்வினை கின்றவெல்லா
மொல்குந் திறமின்று காட்டினன் யானென தோடியதே. (9)

ஓடிய தாணவ முற்றது பாசகன் மங்கவொத்த
வாடின பல்வகைத் தோற்ற மலரயன் மான்முதலோர்
வீடினர் செய்கை விளைந்தது போகம் வியன்றுறைசை
நீடிய பஞ்சாக் கரவன் முகிழ்த்த நிலாநகைக்கே. (10)

நகைக்கின்ற செங்கனி வாயு மெதிர்ந்தோர் நவைமுழுதுந்
துகைக்கின்ற பேரருட் பார்வையு மும்மலத் தொக்குவிடத்
தகைக்கின்ற சின்முத் திரையுந் தனிக்கரப் புத்தகமு
முகைக்கின்ற வாலெனைப் பஞ்சாக் கரவனொண் பூங்கழற்கே. ()

கழற்கா லரவிந்தங் கைகூப்பப் பஞ்சாக் கரவனெங்கோ
னழற்கா லனைவந்து சாரலொட் டான்றனு வைப்படைப்பப்
புழற்கா லரவிந்தப் புத்தேளை நாடலொட் டான்புனவேய்ங்
குழற்கான வாயற் கிடமினி யாதன்ன கொள்கையனே. (12)

ஐயப்பு மூவுல குண்டது கண்பல வொன்றுண்டதா
லையப்பு வேலை யமலன்பஞ் சாக்கர வண்ணல்பொற்று
ணையப்பு பாறயி ராட்டி வணங்கிய நேயமொன்று
மெய்யம் பிறவென வெல்லா மெடுத்து விழுங்கியதே. (13)

விழுங்கிக் கிடந்த வொளியறல் பார்த்து மிடையிருள்போ
லொழுங்கிக் கிடந்தவெ ளுள்ளக் கொதிவுறன் டோங்கி நன
மழுங்கக் கடைக்கணித் தாண்டான்பஞ் சாக்கர வண்ணலினிப்
புழுங்கக் கடவதொன் றில்லையெந் நான்றும் புணர்ப்பன்றியே.()

அன்றிய நீத்த மடித்தான் சடைக்க ணடற்கெழுமா
றொன்றிய வோதை மடித்தான் செவிக்க ணுலகழற்றுங்
கன்றிய வால மடித்தான் களத்துக் கருதியென்னை
வென்றியம் பாத மடித்தான்பஞ் சாக்கர மெய்த்தவனே. (15)

தவமாய்த் தவர்புரி வானுய்த் தவப்பய னாய்க்கொடுக்கு
மவனு மிருக்கும்பஞ் சாக்கர மூர்த்தியை யாரறிவார்
நவமாத் தொழிற்கு வருமுருப் போலருண் ஞானகல்கிப்
பவமாய்க்க வந்த பவப்பரி யானை யிருந்திடினே. (16)

இருந்திடிற் பஞ்சாக் கரவன் பதத்திடை யான்மலமு
மிருந்திடுஞ் சற்றெழி லுய்கே யெழுந்திலி நீயெனக்கு
விருந்தென வாய்ப்பெயு மீட்டு மிராமை விடுப்பினந்தோ
பொருந்திடு மெல்லா மவன்பெயர் பொள்ளென வோதுவதே. ()

ஓதுவ தாகிய பஞ்சாக் கரன்பெய ரொண்மறையின்
மீது வதிவது நட்டோ டிகலை விளக்குவதும்
போதுவ தும்பின் புணர்வது முன்னுய்ப் புணர்மயக்கங்
காதுவ துங்கழன் றுள்ளது மெல்லாங் கருதிடினே. (18)

கருதிடு மென்னைத்தன் னுள்ளே யிருத்துங் கதிப்பின்மலம்
பொருதிடும் போகப் புணர்ப்பா யிருக்கும் புரைதவத்தா
லிருதிடு நாமமெய் தார்க்கிரு ளாயே யிருக்குமருள்
விருதிடும் பஞ்சாக் கரவன் விரைப்பூங் கழற்றுணையே. (19)

MAHAMAHOPADHYAYA.
SWAMINATHAIYAR LIBRARY.

துணைமா முலையுமை காணச் சுடர்மணி யம்பலத்தே
யிணையா வருமின்றி யாடும்பஞ் சாக்கர வெந்தைபிரா
னணையா வெனையணைப் பான்பிற தேகசெல் லுமாருளே
புணையாப் பவக்கட லேற்றிய வாறற் புதநெஞ்சமே. (20)

நெஞ்சே யுறுதி யறிந்திலை போலு நினைப்பினங்கே
யஞ்சே லெனநின் றருளும்பஞ் சாக்கர வண்ணலிரு
செஞ்சே வடியை யிகந்தய லேபுலன் சென்றுபற்றி
நஞ்சே யனைய வினைவழிச் சேற னயந்தனையே. (21)

நயந்தரு நல்லவந் தான்மகிழ் வாய்நல்ல வல்லநெஞ்சே
பயந்தரி னுங்கே பணிப்பா யறிந்தநின் பண்புநன்றே
வியந்துனக் குள்ள தருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருளோ
டியைந்தவை தாக்கா திருக்கறி யாதுட லாயிருந்தே. (22)

இருந்தேன் மனத்தி லளற்றிரை யாய்நல னேதுமிலேன்
பொருந்தே னடியர் குழாத்தைப் பொருந்துவல் புல்லியரைத்
திருந்தேன் றிருந்தும் வகைகளெல் லாஞ்செய்து நிற்கின்றதான்
மருந்தே யனையபஞ் சாக்கர தேவன் மலர்ப்பதமே. (23)

பதமலர் கண்டோ ரொறுப்பக நேர்கி பதிதுறுகா
ரிதமருள் செங்கைகண் டோர்பிர மன்கை யெழுதப்படார்
கதமலை யிருரி போர்த்தருள் பஞ்சாக் கரவனுதன்
மதவிழி கண்டோர் துரப்பர் மதவேள் மலர்க்கணையே. (24)

கணையுண்ட தேரு மிருளென் றுமாழியு மக்கணையும்
பிணையுண்ட தேரைப் பரிந்து சிலையும் பிறங்கவெல்லா
மணைவொன்ற வாக்கும் வலவனு மேங்க வசித்ததென்ப
விணையொன்று மில்லாத் துறைசையிற் பஞ்சாக் கரவின்பமே. ()

இன்ப மிதுவெனப் பஞ்சாக் கரவ னிணைப்பதத்தி
லன்பிற் பிணைந்த வடியரல் லான்மற்றை யாரறிவார்
துன்பிற் பிணைவது கண்டுந் தொடர்ச்சியெல் லாஞ்சுகமா
வன்பிற் பிணைந்திடு மாலாதி யோரு மதித்தனரே. (26)

மதிப்பிக்கு மென்னைத்தன் பாதத்தை யாங்கே வயங்கிநிற்கு
முதிப்பிக்கு மன்னை யுறுசுவைத் தெள்ளமு தாயுகக்குங்
கதிப்பிக்கு மாணவ மாயைகன் மங்களின் கட்டறுக்கும்
பதிப்பிக்கும் பஞ்சாக் கரவன்றன் பாலெனைப் பாதங்கொண்டே.

கொண்டலங் கண்டமுங் கொக்கரைக் கூத்துங் குறுநகையு
மண்டிலங் கொண்டவிர் செஞ்சடைக் கற்றையும் வாண்பிறையுந்
தண்டளிர்ப் பாதமும் பஞ்சாக் கரவன் றயங்கநருளு
முண்டன கண்டவன் றேயெனை மீட்டு முமிழ்வின்றியே. (28)

இன்றேயெஞ் ஞான்று மொழியாத வின்பத் துறைபடிய
நன்றே யருளும்பஞ் சாக்கர நாத னளினபதத்
தன்றே விரவு நிலையறி யாதது போலழுந்தி
வென்றே விரவு மலமறி யாமை விடுத்தனமே. (29)

விடுத்தன மென்று பகர்ந்தத னல்விடு மோமலமு
மடுத்தன மென்று பகர்ந்தத னலண்மு மோவருளு
மடுத்தருள் பஞ்சாக் கரவன் மலர்ப்பதத் தேயழுந்திக்
கெடுத்தென தியானெனுஞ் சேட்டைப் பகுப்புங் கெடினல்லதே.

அல்லவிர் கண்டனெண் டோளன்முக் கண்ணன ழற்சரத்த
னெல்லுமிழ் மேனியன் பஞ்சாக் கரவனெனக்கிரங்கிச்
சொல்லிய ஞானந் துவந்துவம் பாற்றித்தொக் காருயிராய்ப்
புல்லிய ஞான மிரண்டுமல் லாற்புக லொன்றில்லையே. (31)

இல்லை யிறைவனென் பார்க்கு மிறையென்ற மாத்திரையா
னல்ல வருளும்பஞ் சாக்கர நாத னளினபதஞ்
சொல்லி நினைய விறைஞ்சப்பெற் றார்க்குத் துகட்கிழங்கைக்
கல்வி யருள்வதி னையுறல் வேண்டுங்கொல் காசினிக்கே. (32)

காசினி மீது பிறந்தவர் தம்புளுங் காவிரிசூழ்ந்
தாசிறு நாட்டிற் பவித்தவர் தூய ரவர்களுள்ளு
மாசறு பஞ்சாக் கரவன் வதியா சூரினுற்றோர்
தேசுறு தூய ரவருளுந் தூயர்சென் றேத்துநரே. (33)

ஏத்துநர் தம்மு ளிருந்துதன் பாதத்தை யேத்துவிக்குஞ்
சாத்துநர் தம்மு ளிருந்துதண் போதலர் சாத்துவிக்கும்
பாத்துநர் தம்மு ளிருந்துநட் போடிசல் பாத்துவிக்கு
மாத்தன்பஞ் சாக்கர வண்ண லருளு மருளிதுவே. (34)

இதுபுரி வேனென வொன்றனை மேற்கொண் டிடைவிடிக்கு
மதுபுரி வேனென் றசிக்கு மயர்க்குமற் றுயிரிற்
கதுவிய தன்மை கரிசறுத் தாண்டபஞ் சாக்கரவன்
முதுநல முற்றுமுற் றுதுமுற் றின்புந் திளைத்திடுமே. (35)

திளைத்திடுந் தன்மையிற் றுனு யிருக்குந் திசமுவருள்
விளைத்துமற் றேனை யிடங்களில் வேறு யிருக்குர் விண்ணவின்
மூளைத்தெழு வெண்மதிக் கண்ணியன் பஞ்சாக்கரவன் முன்னோன்
வளைத்தழும் பாளன்மெய் மாதவர் போற்றிய மாதவனே. (36)

மாதவம் யாதும் புரிந்தறி யேன்வண் மலர்ப்பதத்துப்
போதலர் நீருப் பொழிந்தறி யேனெதிர் போதலுமே
வீதனை சோலை விரைசூழ் துறைசைப்பஞ் சாக்கரவன்
றீதற வாண்ட விரகினை யென்னென்று செப்புவதே. (37)

செப்பற் கரியன சிந்தைக் கரியன சேர்பொருளோன்
றெப்பற் கரியன வுள்ளே விரவியொண் மாமதிபோற்
பப்புற்ற வாணவம் பாற்றி வருவன பண்பினர்க்கு
வைப்பிற் பொலிவன பஞ்சாக் கரவன் மலரடியே. (38)

அடியோ ரிரண்டி னுலகொரு மூன்று மடக்கியதால்
வடிவாளி வார்கிலை வையகந் தாங்கு மதுகையதான்
முடியா முதல்வன்பஞ் சாக்கர மீளி முழுமணித்தேர்ப்
படியோ ரிறையு முருளிட மில்லாப் பரப்பினதே. (39)

பரப்புற்ற தேர்க்கமை பாகனும் பாகற் பயந்தவனு
மிரப்புற்று நாடவெட் டாதிறந் தோங்கின வின்பவெள்ளம்
விருப்புற்ற வன்பர்க் கருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருடன்
குருப்பெற்ற வேணி முடியுங் குரைகழற் பாதமுமே. (40)

பாதங்க ளைந்துள்வைத் தானவை நல்கும் பதங்கள்வைத்தான்
வேதங்க ளைந்துள்வைத் தான்விரை யாக்கலி விறவைத்தான்
பூதங்க ளாதிவைத் தான்புரை யாத புகர்மலத்தி
னேதங்கள் பாறவைத் தானெழிற் பஞ்சாக் கரவிறையே. (41)

இறைவிற் றிருத்துபஞ் சாக்கர நாத னிறைசெலுத்து
முறைநாடி னேனை முறைமுறை யாங்கொண் முகிழ்ப்பவற்றுண்
மறையா யிருப்பதொன் றின்றாக வெங்கும் வதிந்தறிந்து
பெறயா வருக்கு மவையவ ராலுய்க்கும் பெற்றியனே. (42)

பெற்றி யொருவர்க் கறிவரி யான்பெரு வள்ளன்மையை
யுற்றறிந் தான்மற் றைவள்ளன்மை வள்ளன்மை யாயுறுமே
பற்றிக லின்றிப் பயன்விழை யாதுபஞ் சாக்கரன்போன்
முற்று மளிப்பவர் யார்முடி வானவர் தம்முளுமே. (43)

உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியர் தாமுலகி
னுள்ளும் பரிசின ரேனும் வினைவழி நண்ணகிலார்
தெள்ளும் பெரும்புகழ்ப் பஞ்சாக் கரவன் றிருவடியை
விள்ளும் பரிசின ரெல்லாம் விடுத்தும் விடுக்கலரே. (44)

விடுக்கலர் பற்றினொ டார்வங் கதியை விரும்புகிலார்
தொடுக்கலர் பஞ்சாக் கரவன் பதத்துச்சொன் மாமலர்கள்
கொடுக்கல ராவி யுடல்பொரு ளாங்குக் கொழுஞ்சுவைத்தேன்
மடுக்கல ரன்பரைப் போனடிப் பார்க்கென் வருவதுவே. (45)

வருவதும் போவது மாயுழல் வீர்வம்மின் வந்தனிரேற்
றருநிதி சிந்தா மணிகாம தேனுவுந் தந்தருளும்
பொருவறு போக மெலாந்தரும் போக மெலாம்வெறுத்தா
லொருவரு முத்தியு நல்கும்பஞ் சாக்கர வொள்ளொளியே. (46)

ஒளிக்கு முயிர்களுக் குள்ளே மலத்தி னொளித்தவுயிர்க்
களிக்குந் தனுகர ணாதி யளித்த வவற்றொடிருள்
விளிக்கு முளைத்த வுயிரினைப் பஞ்சாக் கரவிமலன்
றெளிக்கும் பளிக்கி னிழல்போ லுடலுக் [illegible]மே. (47)

MAHAMA...ADHYAYA,
... V. SWAMINATHAIYAR LIBRARY.
...ADRAS-41.

விக்கு ளிருமன் முயலகன் குட்டம்வெப் புப்பெருநோய்
தொக்கு வயிற்றுறு நோய்சூலை நோயொடு சூழ்ந்தடினு
நக்கு நலத்தகு பட்சாக் கரவ னளினபதம்
புக்கு விடினங்க னெல்லாமின் பாகப் பொலிதருமே. (48)

பொலிந்தன மன்னோ தணியுந் தணிந்தன வேபொலியுங்
கலந்தன மன்ற தணக்குந் தணந்தன வேகலவுஞ்
சலந்தரு வையத் தியற்கை தனைக்குறித் தாழுன்மினோ
நலந்தரு பஞ்சாக் கரவனை நாடி நயமின்களே. (49)

கள்ளுண்ட வாளிச் சுவைபுண்ட கார்முகக் காளையுடல்
விள்ளுண்ட கண்ணன்பஞ் சாக்கர நாதன் விரைமலர்த்தா
ணள்ளுண்ட நெஞ்சுகண் டவன்பெயர் பூண்டநன் னாவுமுண்டா
லெள்ளுண்ட வல்வினைச் சஞ்சுவ தின்றினி யெய்தினுமே. (50)

எய்தடு முப்புரத் தெண்ணிய மூவ ரெரிபிழைப்பச்
செய்தவன் பஞ்சாக் கரவன் றிருவடித் தாமரைக்கீழ்ப்
பெய்தடச் சூழ்ந்த பெயரா வினையைப் பிழைப்பித்துய்தி
வெய்தரு ளுந்திறத் தென்னினி வேறு விளம்புவதே. (51)

விளம்புவ தென்னினிப் பஞ்சாக் கரவன்வெல் பூங்கழற்கு
ளுளம்புகு வோர்கட் குறுவினை யாது முறுதுமெய்யே
களம்படு செந்தீக் கதுவி னிழுதுடல் காயுங்கொலோ
வளம்படு புற்போ லணைந்துட னீங்கிய தாருயிரே. (52)

உயிர்தா முயிர்க்கு முடலினல் லாதின்பத் துன்பமொன்றும்
பயிலா பிறவுட லெங்கு மிருந்துமப் பண்பினவாற்
செயிர்தீர்ந்து பஞ்சாக் கரவன் றிருவடி சென்றுபற்றின்
மயரா ருடல மிருந்தும் பயனென் மருவுவதே. (53)

மருவுவ தொன்றை யரிதுபஞ் சாக்கர வான்பொருளி
னருள்வழி யன்றி யொருவனு மொன்றை யரிதுமன்ற
வொருவனு மொன்றைமற் றொன்றை யுறலுமெல் லாமவன்றன்
றிருவடி யேயென்று சிந்திகண் டாய்மலந் தேய்ந்தறுமே. (54)

அற்றாலு மென்னை புறத்தே பயில்பொரு ளானவெலாங்
கற்றாலு மென்னை யரிதா கியகல்வி காசில்புகழ்
பெற்றாலு மென்னைபஞ் சாக்கர நாதன் பிறங்கருளி
லுற்றாலும் யானென தென்னுஞ் செருக்கொழி யாவிடினே. (55)

விடுக்குங் கணையெறு மூர்த்தி மனைவி விலங்கலந்தோட்
படுக்குங் கலனு மொருபொரு ளாகொண்ட பண்ணவன்சீர்
கொடுக்குந் துறைசைப்பஞ் சாக்கர நாதன் குலப்புகழைத்
தொடுக்கும் பரிசுபெற் றும்பெறு மாறின்று சூழ்பவமே. (56)

பவம்பல கோடி வருமாறு நாவிற் பயிற்றியிட்ட
வவம்பல கோடியும் பஞ்சாக் கரனைப் புகழ்ந்தறுத்தாந்
தவம்பல கோடிய சிந்தைய தாணினைந் தேதணந்தா
நிவந்தபல் கோடி யுடற்றிங் கிறைஞ்சுபு நீத்தனமே. (57)

நீத்தனங் காணி னிகழுஞ் சுகமென தியானிலவப்
பாத்தனங் காணிற் படுவதொன் றில்லைபஞ் சாக்கரவன்
பூத்தசெந் தாமரைத் தாளுங் கரமும்புன் மூரனிலா
யாத்தசெவ் வாயு முகமுமெல் லாமின்பத் தேயெழுமே. (58)

எழுந்தது பஞ்சாக் கரவன் றிருவரு ளெக்குமதில்
விழுந்ததென் புல்லறி வாங்கே யருளாய் மிளிர்ந்தனவா
லழுந்திய பாசமென் றெண்ணிய மாயை யருவினையுந்
தழுந்தரம் வேறினி யில்லையின் பொன்றே தலைப்பட்டதே. (59)

பட்டது பாசமென் பாரது மாயும் படியறியா
ரொட்டிய தாரரு ளென்பா ரஃதூறு முண்மையெய்யா
ரட்டில கெல்லா மளிக்கும்பஞ் சாக்கர வண்ணலருண்
முட்டறு ஞான முகிழா வுளம்படை மூர்க்கர்களே. (60)

மூர்க்கரைப் போல முதுமா தவர்க்கு முனிவுசெய்து
பார்க்குளெஞ் ஞான்றும் பருவரு வேலையும் பார்த்தருளாய்
கார்க்கதிர் தோகை யெனவடி யார்கள் கலந்தெதிர்நின்
றூர்க்குந் துறைசைப்பஞ் சாக்கர நாத வருட்குருவே. (61)

அருமணி போலிக் கருவன் பிணிக்க கொழுக்கமற்றி
மெருவகைக் கோளைக் கிலெய்த் திசைவி ஞரியோமல்லா
தருள்மணி யாகிய பஞ்சாக் கரவ வழு வெனுமின்
றிருவை நீக்காத் திறப்பாக் கிருப்பினன் செய்தருளே. (62)

அருளுடைப் பாதப் பஞ்சாக் கரவன் முன் னைப்பொதாநிலை சொன்
மருவுடை மாயைப் பவப்பவ வாரண மெனக்குளிக்க
திருவடிக் காவிற் செறிவை விழுங்கித் திசை விழுங்கி
மருவடி மாடவெ ளுள்ளம் விழுங்கி யுகந்தனவே. (63)

உகந்தவை னெல்லாப் பொருட்கும் பஞ்சாக்கர வுத்தமனை
யகத்தனிற் சற்றே யடிப்பிற் சதிகளெல் லாமடிப்ப
நிகழ்திடுஞ் சற்றே மெழுநான்கு கோடி நரகங்களிலே
புகுந்துபல் லூழி பெயர்ந்து மெழாது புழுங்குவரே. (64)

புழுங்கும் பெருப்பழி வந்தாலு மென்னின்பம் போர்த்துளத்தை
விழுங்கும் பெரும்புகழ் வந்தாலு மென்னினைப் பாலென்று
மழுங்கும் படியதன் றேயநட் பஞ்சாக் கரவன்பதத்
தொழுங்கும் பெருநிலைக் குறைவற் றுவில்லை யுற்றுநில்லே. (65)

நில்லென்று செந்தீ திரையி னிறுவினு நீடுசெல்லல்
கல்லென்று தீய திறத்தி னெடுப்பினுங் காய்ந்துகயற்
தல்லொன்றி வாளாங் கலையாது பஞ்சாக் கரவனருள்
புல்லொன்று பாரங் கழிப்பதென் றேயின்பம் பூணுகவே. (66)

பூணுங் கடவுளைப் பஞ்சாக் கரவனைப் பூண்டுகொண்டு
காணுங் கடனல் வருவினை மாய்க்குங் கடனதன்றி
மாணுங் கரிசுடற் சேர்ந்த வினையை மறப்பவுந்
தேணுங் கெடேன்மின் குறுகா தொழியா வெறுமுடைத்தே (67)

உடைத்தைதங் கலையும் பரானந்த வின்ப முறப்பயிற்றி
விடைத்தங்கு மேவு மொழியா வினையின் விறன்முருக்கித்
துடைத்தங் கருளும்பஞ் சாக்கர நாதன் சுடர்ப்பதத்து
ளடைத்தங் கிருப்ப வறியா துளமயல் விட்டனவே. (68)

விட்டனம் யானென தென்னுஞ் செருக்கை விடுத்தலொடுங்
கெட்டன மத்தகு சேட்டினை யேகிளர் வாழ்க்கையெனப்
பட்டனம் பஞ்சாக் கரவன் பதமலர்ப் பூசனையே
தொட்டன மிந்தத் தொடர்பினை யாவர் துளக்குநரே. (69)

துளக்கும் வினையுட னிற்பத் தொகுமுயிர் வாங்கலெவ்வா
றளக்கற் கரியபஞ் சாக்கர நாதனென் றையுறன்மின்
வளக்குஞ் சரந்தன் வயிற்றுட் செறிவினை வாங்கிக்கொண்டு
விளக்கட் கனிதன் புறம்விடல் கண்டன மேதினிக்கே. (70)

மேதினி மீதும் விரவுவ திவ்வினை யென்சிரத்தும்
போதுவ தென்ன வற்புதம் போக்கின் மறைமுடிவு
மாதவர் நெஞ்சு மலையான் மடந்தை வளைக்கரமு
நீதியிற் றைவரும் பஞ்சாக் கரவ னெடும்பதமே. (71)

பதந்தர வல்லவன் பஞ்சாக் கரவன் பசுபதிநல்
விதந்தரு மீச னிறையெட் டுருவத்த னெண்குணத்தான்
சுதந்திர முள்ளவ னென்றுசொன் மாத்திரை சூழ்ந்தவர்க்குஞ்
சதந்தரு வல்வினை சாவத நூறு கடந்திறுமே. (72)

இறுகின்ற மாலைய தாக்கை யிதுதனைப் பேணிக்கொண்டே
தெறுகின்ற வல்வினை வாயழி வேளைச்சென் றேத்துநர்பா
லறுகின்ற பஞ்சாக் கரவனவ் வூழ்வினை தன்னடியா
லறுகின்ற தாக்கியஞ் சேலிங்கண் வாவென் றருளினனே. (73)

அருள்கின்ற காலமெஞ் ஞான்றும்பஞ் சாக்கர வாண்டகைக்கா
மிருள்கின்ற வாணவத் தேகிடந் தெய்த்தின்பத் துன்பந்துய்த்துத்
தெருள்கின் றிலாவுயிர்க் கேசென்று சேரும் பருவங்கண்டாய்
மருள்கின்ற வன்னெஞ்ச மேமதி யாயின்று வாய்த்திடுமே. (74)

வாய்த்த துடலிது பஞ்சாக் கரவன் மலர்ப்பதத்தை
யேத்துத லாலென் றிறுமாந் திருந்தவெ னெண்ணமெல்லாந்
தீத்தெறு பஞ்சாய்ச் சிதையப் பலசதி சென்றுசென்று
பூத்திடு மாறு புரட்டிய தாற்புல் வினையடுத்தே. (75)

அடுத்த வினைக்கினி யஞ்சேன்பஞ் சாக்கர வாரியன்முன்
விடுத்திருண் மூழ்கும் பிழையிற் பருவம் விளைத்துடலங்
கொடுத்தங்கும் விட்டிது காறும் விளைத்தகுற் றங்களுநீத்
தெடுத்தவ னின்னு மெடுப்பனென் றுண்மையை யெண்ணினனே.

எண்ண மெலாந்த னிணையடி யேறவைத் தானியம்பும்
வண்ண மெலாந்தன் பெயராக வைத்தனன் வாரு
பண்ண மெலாந்தன் பணியாக வைத்தனன் பண்ணவர்கு
பூண்ணல்பஞ் சாக்கர வேந்த லருளுமி தற்புதமே. (77)

அற்புத மேனிய னுந்திருச் சிற்றம் பலவனறற்
புற்புதம் போலுருக் கொண்டபஞ் சாக்கர பூரணனைச்
சிற்பர னென்றுள்ள வாறறி யார்செயிர் தீர்தொழிலைந்
துற்பவ மாக்கு முருவத்தி னுண்மையு முன்னலரே. (78)

உன்னிய காலை யுறவா யினிக்குஞ்சற் றேயயர்ப்பி
னன்னிய மாக வகன்றே கவற்று மனனியமாய்
மன்னிய பஞ்சாக் கரவன் வயங்கரு ளோங்கியக்காற்
பொன்னியல் காலைப் புரையிருள் போன்மலம் பொன்றுவதே. ()

பொன்றுஞ்சு முன்றி னுடையவ ராகப் பொலிதரினு
மின்றுஞ்சு வேலரை யஞ்சுவர் வேலர் வெருவுவாற்
கொன்றுஞ்சு தேவரைத் தேவரு மஞ்சுவர் கோகனதத்
தென்றுஞ்சு பஞ்சாக் கரவன் றிருவடித் தேசினர்க்கே. (80)

தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசிநின் றூடிய வம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்மலரைக்
கூசிநின் றேத்திய மாதவத் தார்க்கென் குறையுளதே. (81)

குறையுண்ட நெஞ்சும் பழியுண்ட செய்கையுங் குற்றமெலா
முறையுண்ட வாக்கு மெனக்களித் தானுற் றுளாரெவர்க்கு
நிறையுண்ட வாக்கும் புகழுண்ட செய்கையு நீடுமின்பப்
பொறையுண்ட நெஞ்சு மளித்தான்பஞ் சாக்கர பூரணனே. (82)

பூரணன் பஞ்சாக் கரவனென் செய்யும் புலைநெஞ்சமே
யாரண மார்க்கம் விடுத்தே யரவக லல்குனல்லார்
வாரணி கொங்கை முயக்கே யமர்ந்து வருந்திடும்பைக்
காரண மேதொகுத் தாயது கூட்டுங் கடனவற்கே. (83)

அவனென் றிலகம் புகழும்பஞ் சாக்கர வாண்டகையை
யெவனென்று முன்னி யிகந்தனை யாலெ னிழைதநெஞ்சே
பவன்றவன் சங்கரன் பார்ப்பதி பாகன் பரன்சிவனு
மவனென்று தேறி யொழியா யொழியா வுறுபகையே. (84)

உறுபகை யாளர் துவன்றினு நட்பின ரோங்கினுமென்
முறுகிய வின்ப மடிப்பதுண் டேற்பகை யான்முருக்கப்
பெறுவதொன் றில்லையின் னுங்குள தேற்பெய ராதுறவா
னிறுவவு நீக்கவும் வல்லன்பஞ் சாக்கர நின்மலனே. (85)

நின்மலன் பேரறி வாளன்பஞ் சாக்கர நிர்க்குணன்மற்
றன்மலத் தாழ்புல் லறிவுடை யேனுட னுயமர்ந்து
தன்மலர்ப் பாதந் தலைத்தந்துந் தாழ்விலன் சார்களங்க
வின்மதி வாழும் வெளிக்கென்னை தாழ்வு விரவுவதே. (86)

விரவிய வான்வளி தீவிரி நீர்வியன் பாரவையாய்ப்
பரவிய பான்மதி யாய்க்கதிர் கால்பகல் வானவனாய்ப்
புரவிய லாருயி ராய்நின்ற பஞ்சாக் கரப்பொருளைக்
கரவியல் சீருண் மாருது காணுங் கடனரிதே. (87)

அரிதுதன் பாதத் தடைவா ருயிர்க்கென வன்றுதொட்டுக்
கரிசறு மூர்த்தி தலந்தீர்த்த மாயமர் காரணனை
விரிபுகழ்ப் பஞ்சாக் கரவனை மெய்யன்பி னுளத்தே
பரிபவம் பெற்றார் பெறார்மலந் தான்செய் பரிபவமே. (88)

பவமெழு கோடி யெடுப்பினு மென்னைபஞ் சாக்கரவ
னவநவ மாகப் புணருந் தொறுமின்ப நல்குகின்ற
தவமலி யிப்பவம் போல்வாய்ப் புறினிந்தத் தன்மையின்றி
யவமுறி னிந்தப் பவமுங் கடுக வவிதனன்றே. (89)

நன்றே யடுப்ப தருளிற் கலந்த நலத்தவர்க்கு
மின்றே யிறந்த பவங்களி னீட்டு மிருவினையுட்
சென்றே பயப்ப வெவையவை பஞ்சாக் கரச்செம்மறு
னின்றே புணர்த்தும் புணர்த்தினு மேமறு நிலைவைக்குமே. (90)

வைப்பா யிருக்கும்பஞ் சாக்கர நாதன் மலர்ப்பதமே
துப்பா யழுந்தின் மலைநேர் வினையு மெரித்துருப்ப
வொப்பா யவியும் பதைப்பிற் கடுகு முயர்மலையா
மிப்பா லணைநெஞ்ச மேநினைக் காம்வழி யெய்துகவே. (91)

எய்துவ திங்கிடை யொன்றில்லை பஞ்சாக் கரவிறைவ
னுய்திற நாடிமுன் செய்வினை யூட்டி யொழிக்குங்கண்டாய்
நைதிறந் தீவினைக் கெண்ணறு நல்லதென் றென்றனையே
செய்திற னாடலும் வேண்டா வவனடி சிந்திநெஞ்சே. (92)

நெஞ்சே நினக்கு நெடும்பகை நீயந் நிலையறியா
தஞ்சே லெனவருள் பஞ்சாக் கரவ னவையவரா
லெஞ்சாது நீமுன்ன ரீட்டிய கூட்டி யிடும்பொழுது
நஞ்சே யெனமுன் னிலைபகை யாகவு நாடினையே. (93)

நாடுவ தெல்லா மருளும்பஞ் சாக்கர னற்பதமே
கூடுவ தெல்லா மவனடி யார்தங் குழாத்திடையே
வீடுவ தெல்லா மறிவிலர் சேர்ச்சியென் றுய்விடினே
நீடுறும் வேறின்ப முண்டேனும் வேண்டா நெடுநிலத்தே. (94)

நிலங்கா லகழ்ந்து நெடுமா லறியா நிகரில்பத
மலங்கா லறுக்கும்பஞ் சாக்கர நாதன் மலியருளா
னலங்கா முறுவெனக் கெண்மையின் முற்றுநன் றுய்த்தளித்தான்
சலங்காமை யின்மையின் மற்றதற் கேற்குங் கடனிலனே. (95)

இலம்பட லாவது பஞ்சாக் கரவ னெழிலருளி
னலம்புரி வோர்க்குல கத்துறு செல்வங்க ணண்ணுவதே
குலம்புரி செல்வங்க ளாவன கோதி லடியவர்க்குச்
சலம்புரி வையகத் தாறிலம் பாடு தழைப்பனவே. (96)

தழைக்கின்ற போதி வனமுஞ்செந் தாமொழு காலமிதென்
றழைக்கின்ற வன்பர்கள் சோலையுங் கண்டா ரகமுழுதுங்
குழைக்கின்ற பஞ்சாக் கரவன்மெய்க் கோலமுங் கோதிறவ
மிழைக்கின்ற சூழலு மென்மன நீங்கா திருப்பனவே. (97)

இருப்பன நெஞ்சன்பல் லூழியெல் லாம்பெயர்ந் தாலுமெம்பால்
விருப்பின னாத லரிதெனப் பஞ்சாக் கரவிமலன்
பொருப்பினை வாங்கிற் றெனவென்னை யாண்ட புதுமையினாற்
கருப்பம் மாறினிச் செல்லவொட் டானருட் காப்பிடுமே. (98)

இடுவதெல் லாமவன் றன்குண மென்குண மேற்றல்வினை
யடுவதெல் லாமவன் றன்குண மென்குண மாக்கன்மெய்ம்மை
தொடுவதெல் லாமவன் றன்குண மென்குணந் தோல்வியிலை
படுவன வாயினும் பஞ்சாக் கரவன் பரிவுளனே. (99)

உளநின்று காணி னொளிப்பனங் கேவ னுளமொளிப்பின்
வெளிநின்று காணப் படுவன் விரிகடற் றெள்ளமிழ்துந்
தெளியுண்ட தேறலுங் கைப்பவென் சிந்தை யெலாமினிப்பன்
பளகறுத் தாண்டபஞ் சாக்கர நாத பசுபதியே. (100)

பஞ்சாக்கரதேசிகரந்தாதி முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

## குறிப்புரை.

---

1 பதி பசு பாசத்தை - அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி பசு பாச மென்னும் மூன்றனையும், பாசம் பசு பதி ஆக்கி - ஐந்தொழி லியற்றுங்கால் எய்திய சகலாவஸ்தையில் பாசமும் பசுவும் பதியுமாகிய முறையில் முன்பின்னாக நிற்கச்செய்து, பசு - ஆன்மா, ஒரீஇ - அந்நிலையின் நீங்கி, பதி - பதிநெறியில், ஆக - ஒழுகியவழி, பசு - ஆன்மாவை, பதி ஆக்கி - பதியின் தன்மை எய்தச் செய்து ( தூயதாக்கி ), பின்னும் பயிற்றி - அது சீவன்முத்தி நிலையில் நிற்குங்காறும் அந்நிலையி னழுவாதிருக்கச் செய்து, ( இவ்வகையால் ) தான் - அவ்வான்மா, பதியென ஆய்ப் பயிலும் - பதிபோலச் சிவத்தன்மை முழுதும் விளங்கப் பெற்றுப் பயிலுதற்கு ஏதுவாகிய, திருவாவடுதுறைசைப் பதி - திருவாவடுதுறை என்னும் திருப்பதியில், வளர் - எழுந்தருளியிருக்கின்ற, பஞ்சாக்கரவனை - ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்தியை, என் சொல்லிப் பாடுறும் - எவ் வியல்பினனென்று சொல்லிப் பாடுறும் என்பதாம்.

முன்பின்னாக நிற்கச்செய்தலாவது - பாசம் முற்படப் புலப்பட்டும், பசு அதனால் தொழிற்பட்டும், பதி தொழிற்படுத்தியும் நிற்குமாறு செய்தல். ஆக - காரணப்பொருட்டு. பாசம் பசு பதியாக்குதலாவது கேவலநிலையினின்றும் சகலநிலை யெய்துவித்தல். பதி பசுவாக என்றது ஆன்மாப் பதிநெறியில் ஒழுகிநிற்றலை யுணர்த்திற்று. பசுபதி யாக்கி என்புழி ஆக்கச் சொல் அத்துவ சுத்தியால் ஆன்மாவைத் தூயனாக்கிப் பதியின்றன்மை யெய்துவித்தலை யுணர்த்திற்று. தான் பதி யென ஆய் என்புழி ஆக்கச் சொல் ஆன்மாப் பரமுத்தியில் சிவானந்தானுபவ நிலையில் உறைந்து நிற்றலை உணர்த்திற்று.

ஆக்கி ஆக்கிப் பயிற்றித் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக்கரவனெனவும், ஆய்ப் பயிலும் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக்கரவனெனவும் முடிக்க.

2. படர்தல் - நினைத்தல். அன்னவன் பாதம் கூடுவது என்க. இன்பம் நீடுவது. நிகழ் செயல் - அவற்றிற்கு நிகழும் செயல்கள்.

3. ஒன்று இல்லையாக - தனக்கென உருவம் ஒன்றும் இல்லையாகவும், உயிர் உளதாக - உயிரென்பது ஒன்று இருப்பதை யுத்தேசித்து. தென்றில்லையாடி யாகிய பஞ்சாக்கரவன் உருவங் கொண்டு சென்று நின்று. இல்லையாதி - தற்போத முனைப்பு இல்லையாவாயாக. நின்ற யான் - தற்போத முனைப்புடன் நின்ற யான். சென்று நின்று இறலும் - அவன் உபதேசித்த நெறிவழிச் சென்று நின்று தற்போத முனைப்பு ஒழிதலும். சொல்லா ஒன்று - சிவானந்தம். ஒன்றில்லையாக என்பதற்கு அத்துவிதச் சொற்கு ஒன்றென்னும் பொருளில்லையாம்படி என்று பொருள்கோடலுமாம்.

4. பாசம் சடமானதால், பாசவறிவு என்பது யாது? உயிர் ஆணவம் நீக்கியவழி நானென்று கருதுமாறின்மையின், பசுவறிவு என்பது யாது? என்றும் ஒருநிலையில் நின்று உணர்த்துவது பதியறிவு ஒன்றேயாம். இங்ஙனமாக அப்பதியறிவைப் பாசஞானம் பசுஞானம் என்பவற்றோடு ஒருங்கு சேர்த்துப் பதிஞானமென்பது யாது? அருள வேண்டும் என்பதாம். இந்த ஞானத்தினியல்புகள் சிவஞானபாடியத்திற் கூறப்பட்டன.

5. உயிர்க்கு அநுக்கிரகம் செய்வது சிவமேயன்றி ஏனையுயிர்களல்ல என்பதை யாரும் தெரிந்து பிழைக்க. பெருவான் பொருள் - சிவம். அப்பொருட்கு வாசகம் ஸ்ரீ பஞ்சாக்ஷரம். அருவாயும் அருவுருவாயும் உருவாயும் அவைதானெனவும் வந்ததேயன்றி ஸ்ரீ பஞ்சாக்ஷர தேசிக மூர்த்தியாகவும் எளிவந்த வாய்மை என்க.

6. தாழ்குழல் நோக்கி உலை மெழுகு போல உருகும்: பமரம் - வண்டு: பிரமரமென்னும் வடமொழித்திரிவு. தணப்பற - நீக்கமின்றி. தேறலைப் பருகும். திருக்கு - குற்றம்.

7. ஆர்வம் - பேரன்பு. மெய் - சிவமாக.

8. சஞ்சிதம் - அநுபவிக்க வாராமற் குவிந்து கிடக்கும் கன்மத் தொகுதி. உடலிற் புல்கிய இன்பத் துன்பங்கள் - பிராரப்த கன்ம பலன்கள். சஞ்சித வினைத்தொகுதியைத் தன்திரு நோக்கா லெரித்தலும், பிராரப்தவினைப் பயனைத் தான் ஏற்றுக்கோடலுமாகிய இவற்றின் விரிவைச் சிவஞான மாபாடியத்திற் காண்க. கைம்மாறு நல்குதற்குக் கண்டிலனென்க. பூப்பது தொழின்மேனின்றது.

9. நலத் தகை - அன்மொழித்தொகை. நலத் தகையாகிய பஞ்சாக்கர தேவன். அவன் பணித்திடுங்கால் எனக்கு மெல்குந் திறமுள்ளது. மெல்குதல் - மென்மையாதல். ஒல்குதல் - குழையும். யான் எனது - அகங்கார மமகாரம். ஒடியது தனித்தனி கூட்டுக.

10. உற்றது - சகசமாயுற்றதாகிய. ஆணவம் ஒடியது. பாசமாகிய கன்மங்கள். பல்வகைத் தோற்றம் வாடின - அண்டச முதலாயின ஒழிந்தன. தோற்றம் இன்மையின் அயன் மால் முதலானோர் செய்கை வீடினர். நகைக்கு - உருபுமயக்கம்.

11. எதிர்ந்தோர் - எதிர்ப்பட்டோர். நவை - குற்றம். துகைத்தல் - கெடுத்தல். தொக்கு - சம்பந்தம். நகைத்தல் - தடுத்தல். உகைத்தல் - செலுத்தல். துறைசையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்தியின் திருவுருவை வியந்தவாறு.

12. தமது திருவடித்தாமரைகளைத் தொழுதால் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் இயமனை நம்பாற் சாரவொட்டார். அழற்காலன் - அழலைப்போலுங் காலன். தநு - உடல். புழல் - உட்டுளையுடைய. கால் - நாளம். அரவிந்தப் புத்தேள் - பிரமன். இங்ஙனம் படைப்புக் கடவுட்கும் அழித்தற் கடவுட்கும் தத்தஞ்செயல்செய்ய இடமில்லையாக, திருமாற்கும் தன்செயல் செய்ய இடமில்லையென்பதாம். கானம் - பாட்டு. ஆயன் - கண்ணன். ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் அவ்விதஞ் செய்யும் தன்மையுடையார் என்க.

13. கையம்பு ஈண்டுத் திருமால். அப் பிரான் உலகுண்டது கிருஷ்ணாவதார நிகழ்ச்சி கண்மலர் ஒன்று - நெற்றி விழி. ஐ அம்பு வேளை உண்டது - மன்மதனை உண்டது. அம்பு - நீர். எய்யம் - அறியோம். 'எய்யாமையே அறியாமை' என்பது தொல்காப்பியம். அம்புகள் என்பன ஒவ்வொன்றே யுண்டன: திருவடியோ வணங்கிய அன்பர் பிறவற்றைச் சிறிதுமறியோமென்னுமாறு எல்லாவற்றையும் எடுத்து விழுங்கியதென்க.

14. ஒளி அறல் - ஒளியின் நீக்கம். மிடைதல் - நெருங்குதல். ஒழுங்கி - ஒழுங்குபட்டு. உள்ளத்து ஒழிவு - தற்போத நீக்கம். ஓங்கிருள் - ஆணவம். மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருளாதலின் ஓங்கிருளெனப்பட்டது. மழுங்குதல் - கூரில்லாதொழிதல்: அஃதாவது அது நித்தப்பொருளாயினும் கேடு விளையாதிருத்தல். என்றூன்றும் அவனைப் புணர்தலன்றி வேறு புழுங்கக்கடவது யாதுமில்லை.

15, அன்றுதல் - பகைத்தல். நீத்தம் - கங்கைநீர்ப் பெருக்கு. சடைக்கண் நீத்தமடுத்தான். அடல் - கொல்லுதல். ஓதை - ஓசை. செவிக்கண் மடுத்தான். களத்தில் ஆலத்தை மடுத்தான். அவைபோல என்னையும் கொடியபொருளாகக் கருதித் திருவடிக்கண் மடுத்தானெனச் சமத்காரமாகக் கூறினர்.

16. கொடுக்கும் அவன் - தவப்பயனைக் கொடுக்கும் அவனென்க, 'செய்வாரும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும்' கூறியவாறு. தொழிற்கு வரும் நவமா உரு - நவந்தரு பேதம். பவம் - பிறவி. பவம் - திருவுருத்தோற்றம். அத்திருவுருவினிடத்து அன்பு செலுத்தாதிருப்பின் யாரும் அப்பெருமானை அறியாரென்றவாறு.

17. யான் பஞ்சாக்கரவன் பதத்திடை இருந்திடின் மலமும் சேட்டைபுரியாது இருந்திடும்: சற்றுத் தற்போதமெழின் மலமும் உடனே எழுந்து நீ எனக்கு விருந்தென்று சொல்லித் தன்வாய்ப் பெய்யும். அத்துன்பங்கண்டு மீட்டும் அவனடிக்கீழ் இராமல் ஒழியின், ஐயோ எல்லாத் துன்பங்களும் என்பாற் பொருந்திடும். ஆதலின் அப்பெருமானது திருநாமத்தை ஓதுக. ஓதுவதென்பது 'கொள்ளப்படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே' என்பதுபோல நின்றது.

18. ஓதுவது - ஓதப்படுவது. மறையின்மீது வதிவது - வேதத்தின் நடுநாயகமா யிருப்பது, நட்பையும் இகலையும் விளக்குவது. நீங்குவதும் பின் புணர்வதும் முன்பு சேர்ந்த மயக்கத்தை யொழிப்பதும் அது நீங்கியவழி எஞ்சி நிற்பதுமாகிய வெல்லாம் அவன் பெயரே என்க. இது ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் திருநாமப் பொருளை விளக்கியவாறு.

19. பூங்கழற்றுணை கருதிடும் என்னைத் தன்னுள் இருத்தும்: மலம் கதிப்பின் என்றேனும் பொருதலைச் செய்யும் போகப் புணர்ப்பா யிருக்கும். புரை - சிறப்பு. இருது இடு நாமம் - பருவம். தவத்தால் பருவமடையாதவர்கட்குக் கழற்றுணை இருளாயே இருக்கும். அருள் விருதினையுடைய.

20. அணையா - தன்னைச் சேராத. அணைப்பான் - பானீற்று வினையெச்சம். பிறகே செல்லும் - தன்பின் செல்லுகின்ற. புணை - மரக்கலம். நெஞ்சினை நோக்கிக் கூறியவாறு.

21. அங்கே - நினைத்த அவ்விடத்தே. செஞ்சேவடி - மிகச் சிவந்த திருவடி: 'செஞ்செவ்வே'னென்றாற் போல. இகந்து - நீங்கி.

புலனைச் சென்று பற்றி. சேறல் - செல்லுதல். நயத்தல் - மகிழ்தல், நெஞ்சே நீ யுனக்கு உறுதி யின்னதென்பதனை யறிந்திலை போலும்.

22. நெஞ்சே நல்லன வந்தால் மகிழ்வாய்: நல்லன வல்லாதன வற்றை நின் தீவினைக்குப் பயனாக அவன் கொடுத்தால் நடுங்குவாய் நீ செய்தவினைக் கீடாக உள்ளதை அருள்புரியும் பஞ்சாக்கர மூர்த்தியோடு இயைந்து உடலாயிருந்து வியந்து அவை தாக்காது இருக்க அறியாமல் மகிழவும் பனிக்கவும் அறிந்த நின் பண்பு நன்றாயிருக்கின்றது.

23. அளறு - நரகம். நரகத்திற்கு இரையாய் இருந்தேன். அற்பரைப் பொருந்துவேன். இருந்தேன் - வினைப்பெயர். மருந்து - அமிர்தம்.

24. எறுழ் - வலிமை. பகடூர்தி - இயமன். குறுகார் - அடையார். கதமலை - யானை: அன்மொழித்தொகை. மதவிழி - வலியவிழி. திருவடி இயமனையும், செங்கை பிரமனையும், நுதல்விழி மன்மதனையும் ஒறுத்தமையின் அவற்றைத் தரிசித்தோர் முறையே இயமபுரம் சேராமையும், பிரமன் கையால் எழுதப்படாமையும், மன்மதபாணம் வருத்தாமையும் பெறுவரெனப்பட்டது.

25. கணை - திருமால். அது உண்ட தேர் - கீழும் மேலுமுள்ள உலகங்கள். இருள் உண்ணும் ஆழி - சூரிய சந்திரர். தேரைப் பரிக்கும் சிலை - மகாமேரு. வலவன் - பிரமன். ஏங்க - நம்மால் ஆவது யாதுமில்லையே யென ஏங்குமாறு. அசித்தது - சிரித்தது.

26. வன்பு - வலிமை.

27. மதிப்பிக்கும் - நினைக்கும்படி செய்யும். அன்பை உதிப்பிக்கு மென்க. கதிப்பிக்கும் - கதியிற் செல்லுமாறு செய்யும். என்னைப் பதிப்பிக்கும்.

28. கொண்டல் - மேகம். மண்டலம் - வட்டம். என்னை மீட்டும் உமிழ்வின்றி உண்டன.

29. நளினம் - செந்தாமரை மலர். கேவல நிலையிற் சிவத்தை யறியாது மலத்தில் அழுந்திக் கிடந்தது போலச் சுத்த நிலையின் மலத்தை யறியாது சிவத்தில் அழுந்திக்கிடந்தமை கூறியவாறு.

30. அடுத்தனம் - அடைந்தோம். எனது என்னும் மமகாரத்தைக் கெடுத்து. கெடினல்லது மலமும் விடுமோ அருளும் அண்முமோ.

31. அல் - இருள். எல் - ஒளி. துவந்துவம் - இன்பத் துன்பங்கள். ஞானம் இரண்டு - அபர பர ஞானங்கள்.

32. சொல்ல நினைய இறைஞ்ச - திரிகரணத்தானும் வழிபட. துகட் கிழங்கு - இங்கே ஆணவமாகிய கிழங்கு. கல்லுதல் - தோண்டுதல். நாதன் அருள்வதின் என்க. காசினிக்கு - உருபுமயக்கம்.

33. ஆசு - குற்றம். இறுதல் - ஒழியும். வதிதல் - எழுந்தருளியிருத்தல். அரசூர் - திருவாவடுதுறை.

34. பாத்துநர் - பகுத்துணர்வோர். ஆத்தன் - வடமொழித்திரிவு. அவனன்றி யாதும் நிகழா தென்பது உணர்த்தியவாறு.

35. உயிரின் தன்மை கூறியவாறு. ஒன்றனைச் செய்யத் தொடங்கி இடையில் அதனை விடுத்து வேறொன்றனைச் செய்யத் தொடங்கும்: அதனையும் மறந்துவிடும். இவ்வித வுயிர் ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் முதுநலம் உற்றாலும் முடிவுறக் கொள்ளாது. ஆயினும் பூர்ண வின்பத்தை யனுபவிக்கும். முதுநலம் - ஈண்டு ஆனந்தம்.

36. அருள் விளைத்துத் தானுயிருக்கும் என்க. வளைத் தழும்பாளன் என்பது காஞ்சிப் புராணத்தா லறியப்படுவது.

37. வீ - பூ. ததைதல் - நெருங்குதல். விரகு - உபாயம்.

38. மாமதிபோற் பப்புற்ற வாணவம் பாற்றி என்பதை 'மன்னு மிருளை மதிதுரந்த வாறு' எனவரும் வெண்பாவா னறிக. வைப்பு - நிக்ஷேபநிதி.

39. வடிவாளி அடக்கியது. மதுகை - வலிமை. சிலை - வில்: ஈண்டு மேரு. மீளி - வலியோன். படி - பூமி. தேராகிய படி என்க.

40. பாகன் - பிரமன். பாகற் பயந்தவன் - திருமால். குரு - நிறம். முடியும் பாதமும் அவ்விருவரும் இரப்புற்று நாடவும் எட்டாது கடந்து உயர்ந்தன என்க. அவ்விருவரும் அகங்காரத்தால் நாடத் தொடங்கினராதலின் கண்டிலரென்பது. 'இன்பவெள்ளம் விருப்புற்ற அன்பர்க் கருளும் பஞ்சாக்கர மெய்ப்பொருள்' என்பதனாற் பெறப்படும்.

41. பாதங்கள் நான்கு - சரியாதி. பதங்கள் நான்கு - சாலோகாதி. வேதங்கள் நான்கு - இருக்காதி. விரையாக்கலி - ஆணை. பூதங்

களாதி - பூத முதலாகிய தத்துவங்கள். புரையாத - இழிந்த. புகர் மலம் - குற்றமாகிய ஆணவமலம். ஏதங்கள் - கேடுகள்.

42. இறை - இறைமை. பஞ்சாக்கரநாதன் அரசு செலுத்தும் முறையை நாடின் வினை முறையினைத் தும் முறையாதலில்லை. முகிழ்ப்ப - இனித் தோன்றுவன: அவை பிராரத்தம்.

43. முற்செய்யுளின் இறைமைகூறி இச்செய்யுளின் வள்ளன்மை கூறுகின்றார். பற்று இகல் - விருப்பு வெறுப்பு. விழையாது - விரும்பாமல்.

44. உள்ளும் புறமும் ஒருதன்மைக் காட்சியர் - சிவஞானிகள். உலகில் நள்ளும் - உலகத்திற் பொருந்தியிருக்கும். விள்ளுதல் - நீங்குதல். பரிசு - தன்மை. பஞ்சாக்கரவன் திருவடியை அடைந்த சீவன் முத்தர் உலகியலிற் பொருந்தி நின்றாலும் அவர் வினைவழி நண்ணகிலார்: அவன் திருவடியை அடையாத ஏனையோர் எல்லாம் விடுத்தனராயினும் வினைவழி விடுக்கலர். 'உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியருக், கெள்ளுந் திறமேது மில்' என்பது திருவருட்பயன்.

45. ஆர்வம் - கண்ட பொருள்மேற் செல்லும் பற்றுள்ளம். பொருள் என்பது ஈண்டு வினை.

46. வருதல் - பிறத்தல். போதல் - இறத்தல். இவை இப்பொருட்டாதலைப் 'போக்கு வரவு புரிய' என்பதனான் அறிக. தரு - கற்பதரு. நிதி - சங்கநிதி முதலியன. பொரு - உவமை. ஒருவு அரும் முத்தி - பிரிதல் இல்லாத வீடு.

47. கேவலம் சகலம் சுத்தமென்னும் அவத்தை மூன்றினும் பஞ்சாக்கர விமலன் உயிர்கட்கு அருள்புரியுமாறு கூறுகின்றது இச்செய்யுள். உளைத்த - வருந்திய. தெளிக்கும் - தெளிவிக்கும்.

48. விக்குண் முதலிய நோய்கள் சூழ்ந்து வருத்தினும் நக்குப் பஞ்சாக்கரவன் திருவடி புகின் அவை யெல்லாம் இன்பமாகப் பொலியும்.

49. மன்ற - நிச்சயமாக 'மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்' என்பது தொல்காப்பியம். கலவும் - சேரும். சலம் - வஞ்சம். உலகியல் கூறித் தெருட்டியவாறு.

50. கள்ளுண்ட வாளி - மலர், சுவை யுண்ட கார்முகம் - கரும்பு. அவற்றைக் கைக்கொண்ட காளை - மன்மதன். அவனது உடலை விள்ளுண்ட கண்ணனாகிய பஞ்சாக்கர நாதன். வினைக்கு அஞ்சாமைக்குக் காரணம் கூறியவாறு.

51. எண்ணிய மூவர் - சுபுத்தி, சுசீலன், சுதன்மன். திருவடித் தாமரைக்கீழ் என்னைப் பெய்து என்க. வெய்து - விரைந்து.

52. நிழலுடல் - சாயாசரீரம். அளம் - உப்பளம்.

53. உயிர்கடாம் பயிலா என்க. அப்பண்பின - இன்பத்துன்பம் பயிலாப் பண்பின. செயிர் - குற்றம். மயரார் - மயங்கார்.

54. அருள்வழியன்றி மருவுவது அரிது : ஒருவனும் அரிது.

55. பொருளானவெலாம் அற்றாலும் என்னை? அருளின் உற்று. ஆலும் - பெயரெச்சம்.

56. ஒரு பொருள் - திருமால். பவம் பெறுமாறு இன்று.

57. திரிகரணத்தாலும் செய்த தீங்குகள் நீங்குமாறு கூறுகின்றது. பஞ்சாக்கரனைப் புகழ்ந்து நாவிற் பயிற்றியிட்ட அவம் பலகோடியும் அறுத்தாம்: சிந்தைய - சிந்தையிலுள்ள தீங்குகள்: வினையாலணையும் பெயர். கோடிய - பெயரெச்சம். அவன் தாளை நினைந்து சிந்தையிலுள்ள தீங்குகளைத் தணந்தாம். இறைஞ்சி உடற்றீங்கு நீத்தனம்.

58. நீத்தனம், பாத்தனம் - வினையெச்சமுற்று.

59. எங்கும் எழுந்தது. அதில் புல்லறிவு விழுந்தது. அருளாய் மிளிர்ந்தன. பாசங்களென்று எண்ணப்பட்ட மாயை கன்மங்கள். தழுந்தரம் - தழுவுந்தரம்.

60. மூர்க்கர் என்பார் என்பார்: மாயும்படி அறியார்: அஃதுறும் உண்மை எய்யார். எய்யாமை - அறியாமை.

61. முனிவு - வெறுப்பு: ஆகுபெயர். பருவருதல் - துன்பப்படுதல். கார்க்கு அதிர் - மேகத்தைக் கண்டு ஆரவாரிக்கும்.

62. குரு - நிறம். கிரகங்களனைத்தும் துருவனாற் பிணிக்கப்படுவதென்பது நூற்கொள்கை.

63. இருணடமாடலாவது - ஊனநடம் : செயிர் - குற்றம்.

64. கதி - மேலான நிலை. இகத்தல் - நீங்குதல்.

65. பழியும் புகழும் வினையால் வருவன. அப்புகழும் பழியும் பஞ்சாக்கரவன் பதத்து ஒழுங்குபட்டு நிற்கும் பெருநிலைக்கு ஊறுசெய்யா : ஆதலின் அவன் பதத்துற்று நில் என்க.

66. நீடுசெல் - நெடுந்தூரம் போ. அல்கல் - தங்காதே. இறத்தின் - இறத்தினின்றும். நிறுவிற் காய்ந்தும் எடுப்பின் நயந்தும் : நிரனிறை. புல் - முதனிலைத் தொழிற்பெயர். பாரமாவது வினைப்பயனை நுகர்வித்தல்.

67. மாளும்வினை என்க. பிராரத்தவினை தாக்காதிருத்தற்கு உபாயங் கூறியவாறு.

68. ஐங்கலை - நிவிர்த்தியாதி பஞ்ச கலைகள். உளத்தை மயலில் விட்டனம்.

69. செருக்கை விட்டனம் : அதனால் உலகநிலைபற்றிப் பார்க்குமிடத்துக் கேடு அடைந்தோம் : அக்கேடே சிறந்த வாழ்க்கையாகக் கொண்டோம். ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் திருவடிப்பூசனை தொடங்கினோம் : இந்தத் தொடர்பை எவர் நீக்குவரென்க.

70. குஞ்சரம் - விளம்பழத்திற்கு வருவதோர் நோய் : சிந்தாமணியுரையில் நச்சினார்க்கினியார் இவ்வாறு கூறினர். தன் வயிறு என்பது விளம்பழத்தின் உள்ளிடம். விளக்கட்கனி - விளங்கனி. தன்புறம் என்புழி - தான் உள்ளிருப்ப அந்நோய் புறம். மேதினிக்கு - உருபு மயக்கம்.

71. பஞ்சாக்கரவன் நெடும்பதம் விரவுவ போதுவ ஈதென்ன அற்புதம். போக்கு - குற்றம் : போக்கறு பனுவல் என்றார் பனம்பாரனார்.

72. சொல்மாத்திரையில் வணங்குபவர்க்கும் வல்வினை இறும்.

73. மாலையது - இயல்பினையுடையது. பஞ்சாக்கரவன் ஆழிவேலை ஆக்கி வாவென்றருளினன்.

74. பருவமென்பது உயிர்க்கேயன்றி பஞ்சாக்கர வாண்டகைக்கில்லை. ஆதலின் நீ இப்பொழுது அவனை நினையின் அவனருள் உனக்கு வாய்த்திடும்.

75. கதி - பிறவி. புல்வினை - இழிவான தீவினை; வினைத்தொகையுமாம். அடுத்துப்புரட்டியது.

76. ஆரியன் - ஆசாரியன். கேவல நிலையினும் ஐந்தொழில் செய்து பக்குவப்படுத்திச் சகல நிலைக்குக் கொண்டுவந்து அச்சகல நிலையில் நாம் செய்த குற்றங்களையெல்லாம் நீக்கி நம்மைத் தாங்கும் பஞ்சாக்கரமூர்த்தி இன்னும் நம்மைத் தாங்கி மேனிலையிற் சேர்ப்பனென்னும் உண்மையை உணர்ந்தேன் என்றவாறு.

'பண்டிகந் திருளிற் பட்ட படர்பெரும் பிழையை நீயே
கண்டொரு செயலு மில்லாக் காலத்துக் கருணை வைத்துக்
கொண்டிடும் பருவ நோக்கிக் கோலமெய் யருளிற் றந்த
வண்டனிப் பிழையுள் வையா தளிப்பதின் றரிது போலும்'

என இவ்வாசிரியர் தணிகைப் புராணத்து அருளியதுங் காண்க.

77. பஞ்சாக்கர எந்தல் வைத்தான் வைத்தனன் வைத்தனன் எண்க.

78. உலகினர் சிற்பரமென்று அறியார்; அதுவேயுமன்றி ஐந்தொழிற் பொருட்டுக்கொள்ளும் உருவத்தின் உண்மையும் அறியார்.

79. அநந்யம் - வேறன்மை. பொன் - சூரியன்.

80. துஞ்சுதல் - நிலைபெறுதல்; பெருஞ்செல்வரென்றபடி. வேலர் - அரசர். கொன் - அச்சம். தென் - அழகு. தாமரை மலரின் அழகும் கெடுதற்குக் காரணமாகிய பஞ்சாக்கரவன் திருவடி.

81. கூசுதலாவது அப்பெருமானது உயர்வும் தமது இழிவும் நோக்கியவழி நிகழ்வது.

82. உற்றிலா எனக்குக் குறையுண்டெஞ்சு முதலியன அளித்தான்.

83. ஆரண மார்க்கம் - வேதாகமநெறி. அரவு - ஆகுபெயர். முயக்கு - முயக்கம். இடும்பைக் காரணம் - துன்பம் நுகர்தற்குரிய காரணத்தை.

84. இழுதை - பேதை.

85. இன்னாங்கு - துன்பம். உறவாற் பெயராது. இன்பம் நிற வவும் இன்னாங்கு நீக்கவும் வல்லன் பஞ்சாக்கர நின்மலனே.

86. அல் மலம் - இருண்மலம். இறைவன் மலஞ்சார்ந்த உயிரோடு கலந்திருப்பினும் மலம் அவனைத் தாக்காதென்பது உவமை வாயிலாக விளக்கப்பட்டது.

87. கால் - வினைத்தொகை. அஷ்டமூர்த்தியாய் நிற்குமாறு கூறியது. கரவு இயல் சீர் அருள் - வெளிப்படாது மறைதல் இயலுகின்ற சிறப்பினையுடைய திருவருள்.

88. அடைவு - அடைதல். பரிபவம் - முன்னது வினைத்தொகை; பின்னது வியாகூலம்.

89. இப்பவம்போல் வாய்ப்புறின் பவமெழுகோடி யெடுப்பினும் என்னை என்க.

90. அருளிற் கலந்த நலத்தவர் சீவன்முத்தர். இறந்த - கழிந்த. சென்றே பயப்ப - பிராரத்தம். ஏறு நிலை - ஆகாமியம் சேராதநிலை.

91. துரும்பர் - போலி. அழுந்தின் அவியும் பதைப்பின் மலையாம்.

92. தீவினை நீங்க எண்ணுதலும், நல்வினை செய்ய நாடலும் வேண்டா;

93. நெஞ்சே உனக்குப் பகை நீயே. நீ முன்னர் ஈட்டிய வினைப் பயன்களை அவ்வவர் முன்னிலையாக பஞ்சாக்கரவன் கூட்டும்பொழுது.

94. நாடுவதெல்லாம் நற்பதம், கூடுவதெல்லாம் அடியார்குழாம், வீடுவதெல்லாம் அறிவிலர் சேர்க்கை.

95. கால் அகழ்தல் - கால் யாத்தலென்பதுபோல நின்றது. மல த்தை அடியோடு அறுக்கும். இச்செய்யுட் பொருளை 'என்னாலறியாப் பதந்தந்தா யான தறியா தேகெட்டேன், னுன்னாலொன்றுங் குறையில்லை' என்னுந் திருவாக்கான் அறிக.

96. அடியார்க்கு நல்குரவும் செல்வமும் கூறியவாறு. சலம் - வஞ்சம்.

97. போதி - அரசமரம். சோடை - ஈண்டு ஆசையின்மை.

98. இரும்புபோன்ற மனத்தன் என்று கருதி. மலையை வளைத்தாற்போல. காப்பு - தடை.

99, உயிர்க்கும் இறைவற்குமுள்ள வேறுபாடு கூறுமுகத்தால் பஞ்சாக்கரமூர்த்தியின் பொருள் விளக்கியவாறு.

100. உளநின்று காணலாவது திரிவுகாட்சி. உளமொளித்தலாவது தெளிவுகாட்சி. இக்காட்சியின் இயல்பு சிவஞானமாபாடியத்து நன்கு விளக்கப்பட்டது. பளகு அறுத்தல் - குற்றம் நீக்குதல்.

முற்றிற்று.

# பஞ்சாக்கர தேசிகர்

# அந்தாதி

துறைசை யாதீன வெளியீடு 14.

உ

சிவமயம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துத்

திராவிட மாபாடிய கர்த்தராகிய

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் மாணாக்கர்

ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்

அருளிச்செய்த

# பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி

மேற்படி ஆதீனத்து உ௰-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்

கட்டளைப்படி

அவ்வாதீனத்து வித்துவான்

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை

எழுதிய குறிப்புரையுடன்

கும்பகோணம்

யதார்த்தவசனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1945.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

## கட்டளைக் கலித்துறை.

பதிபசு பாசத்தைப் பாசம் பசுபதி யாக்கியொரீஇப்
பதிபச வாகப் பசுபதி யாக்கிப்பின் னும்பயிற்றிப்
பதியெனத் தானைப் பயிலுந் திருவா வடுதுறைசைப்
பதிவளர் பஞ்சாக் கரவனை யென்சொல்லிப் பாடுதுமே. (1)

பாடுதும் பஞ்சாக் கரவனை யென்று படர்தலொடுங்
கூடுவ தன்னவன் பாத மதுவந்து கூடுதலு
நீடுவ தின்ப மனவாக்குக் காய நிசஞ்செயலற்
றோடுவ வாளாங் கிருப்பதல் லாற்பின்னை யொன்றில்லையே. (2)

ஒன்றில்லை யாக வுயிருள தாக வுருவங்கொண்டு
தென்றில்லை யாடி துறைசையிற் பஞ்சாக் கரவன்சென்று
நின்றில்லை யாதியென் றுனின்ற யான்சென்று நின்றிறலு
நன்றில்லை நீயது மில்லைசொல் லாவொன்று நண்ணியதே. (3)

நண்ணிய பாசஞ் சடமா ணவமறி ஞனெனமே
கண்ணுறுவ தின்றுயி ரொன்று யுணர்த்துங் கதியறிவைத்
திண்ணிய பாச வறிவு பசுவறி வென்றுசெப்பி
யெண்ணுறுவ தென்னை யியம்பாய்பஞ் சாக்கர வின்குருவே. (4)

குருவா யருள வுயிர்க்கின்மை யாருங் குறிக்கொடுய்ய
வருவா யருவுரு வாயுரு வாயவை தானெனநற்
பெருவான் பொருடன் பெருப்பெய ரேபெய ராகவந்த
வொருவாய்மை தன்னை நினையினு முள்ள முருகுவதே. (5)

உருகுங் கருணைப் பெருந்திற நோக்கி யுலைமெழுகாய்ப்
பருகுந் தணப்பற வானந்தத் தேறல் பமமெனத்
திருகும் வினையின் றிருக்கறத் தாண்டுதன் சேவடிக்கீழ்த்
தருகின்ற பஞ்சாக் கரவனொ டாடிய தாழ்குழலே. (6)

தாழ்கின்ற கூந்தன் மலர்சூட்டித் தையலர்த் தோயுமின்பத்
தாழ்கின்ற வெள்ளத்தன் பாதத்தி லார்வ மளித்துளத்தைப்
போழ்கின்ற வைம்பொறி போழ்ந்துபஞ் சாக்கர பூரணன்பெய்
வாழ்கென்று சென்னி மலர்க்கைவைத் தானின்ப பக்கியதே (7)

பக்கிய சஞ்சிதக் காட்டை யெரிவாய் மடுத்துடலிற்
புக்கிய வின்பத்துன் பங்களெல் லாம்பின்பு பூப்பதின்றி
யக்கிய பஞ்சாக் கரதே சிகனரு ளாற்கவர்ந்து
நக்கிய வாய்மைக்குக் கைம்மாறு கண்டில னல்குதற்கே. (8)

நல்குந் தொழிற்றனைச் செயன்றி யில்லா நலத்தகைசீர்
பல்குந் துறைசைப்பஞ் சாக்கர தேவன் பணித்திடுங்கான்
மெல்குந் திறமெனக் குள்ளத வல்வினை கின்றவெல்லா
மொல்குந் திறமின்று காட்டினன் யானென தோடியதே. (9)

ஓடிய தாணவ முற்றது பாசகன் மங்கவொத்த
வாடின பல்வகைத் தோற்ற மலரயன் மான்முதலோர்
வீடினர் செய்கை விளைந்தது போகம் வியன்றுறைசை
நீடிய பஞ்சாக் கரவன் முகிழ்த்த நிலாநகைக்கே. (10)

நகைக்கின்ற செங்கனி வாயு மெதிர்ந்தோர் நவைமுழுதுந்
துகைக்கின்ற பொருட் பார்வையு மும்மலத் தொக்குவிடத்
தகைக்கின்ற சின்முத் திரையுந் தனிக்கரப் புத்தகமு
முகைக்கின்ற வாலெண்ணைப் பஞ்சாக் கரவனொண் பூங்கழற்கே. ()

கழற்கா லரவிந்தங் கைகூப்பப் பஞ்சாக் கரவனெங்கோ
னழற்கா லினைவந்து சாரலொட் டான்றனு வைப்படைப்பப்
புழற்கா லரவிந்தப் புத்தேளை நாடலொட் டான்புனவேய்க்
குழற்கான வாயற் கிடமினி யாதென்ன கொள்கையனே. (12)

ஐயப்பு மூவுல குண்டது கண்பல மொன்றுண்டதா
லையப்பு வேனே யமலன்பஞ் சாக்கர வண்ணல்பொற்று
ணையப்பு பாறயி ராட்டி வணங்கிய நேயமொன்று
பெய்யப் பிறவென வெல்லா மெடுத்து விழுங்கியதே. (13)

விழுங்கிக் கிடந்த வொளியறல் பார்த்து மிடையிருள்போ
லொழுங்கிக் கிடந்தவெ னுள்ளத் தொழிவுராண் டோங்கி நனை
யழுங்கச் சடைக்களித் தாண்டான்பஞ் சாக்கர வண்ணலினிப்
புழுங்கக் கடவதொன் றில்லையென் ஞான்றும் புணர்ப்பன்றியே.()

அன்றிய நீத்த மடுத்தான் சடைக்க ணடற்கெழுமா
றென்றிய மோனதை யடுத்தான் செவிக்க ணுலகமுற்றுஞ்
சன்றிய வால மடுத்தான் களத்துக் கருதியென்னை
வென்றியம் பாத மடுத்தான்பஞ் சாக்கர மெய்த்தவனே. (15)

தவமாய்த் தவப்புரி வானுய்த் தவப்பய னுய்க்கொடுக்கு
மவனு யிருத்துப்பஞ் சாக்கர மூர்த்தியை யாரறிவார்
நவமாத் தொழிற்கு வருமுருப் போலருண் ஞானகல்கிப்
பவமாய்க்க வந்த பவப்பரி யாமை யிருந்திடினே. (16)

இருந்திடிற் பஞ்சாக் கரவன் பதத்திடை யான்மலமு
மிருந்திடுஞ் சற்றெழி னுங்கேத யெழுந்தினி நீயெனக்கு
விருந்தென வாய்ப்பெயு மீட்டு மிராமை விடுப்பினந்தோ
பொருந்திடு மெல்லா மவன்டெயர் பொன்னென வோதுவதே. ()

ஓதுவ தாகிய பஞ்சாக் கரன்பெய ரொண்மறையின்
மீது வதிவது நட்போ டிகலே விளக்குவதும்
போதுவ தும்பின் புணர்வது முன்னுய்ப் புணர்மயக்கங்
காதுவ துங்கமுன் றுள்ளது மெல்லாங் கருதிடினே. (18)

கருதிடு மென்னைத்தன் னுள்ளே யிருத்துங் கதிப்பின்மலம்
பொருதிடும் போகப் புணர்ப்பா யிருக்கும் புரைதவத்தா
லிருதிடு நாமமெய் தார்க்கிரு ளாமெ யிருக்குமருள்
விருதிடும் பஞ்சாக் கரவன் விரைப்பூங் கழற்றுணையே. (19)

துணைமா முலையுமை காணச் சுடர்மணி யம்பலத்தே
யிணையா வருமின்றி யாடும்பஞ் சாக்கர வெந்தைபிரா
னணையா வெளியணைப் பான்பிற தேகசெல்லு மாருளே
புணையாப் பவக்கட லேற்றிய வாறப் புதநெஞ்சமே. (20)

நெஞ்சே யுருகி யறிந்திலை போது நினைப்பினங்கே
யஞ்சே லெனநின் றருளும்பஞ் சாக்கர வண்ணலிரு
செஞ்சே வடியை யிகந்தய லேபுலன் சென்றுபற்றி
நஞ்சே யனைய வினைவழிச் சேற னயந்தனையே. (21)

நயந்தரு நல்லவந் தான்மகிழ் வாய்நல்ல வல்லநெஞ்சே
பயந்தரி னுக்கே பணிப்பா யறிந்தநின் பண்புநன்றே
வியந்துனக் குள்ள தருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருளோ
டியைந்தவை தாக்கா திருக்கறி யாதுட லாயிருந்தே. (22)

இருந்தென் மனத்தி லளற்றிரை யாய்நல னேதுமிலேன்
பொருந்தே னடியர் குழாத்தைப் பொருந்தாவல் புல்லியனைத்
திருந்தென் றிருந்தும் வகைகொள்ள லாஞ்செய்து நிற்கின்றதான்
மருந்தே யனையபஞ் சாக்கர தேவன் மலர்ப்பதமே. (23)

பதமலர் கண்டோ ரெறும்ப்பக ரிர்தி பதிதுறுகா
ரிதமநள் செங்கைகண் டோர்பிர மன்கை யெழுதப்படார்
கதமலை யிருரி போர்த்தருள் பஞ்சாக் கரவனுதன்
மதவிழி கண்டோர் துரப்பர் மதவேண் மலர்க்கணையே. (24)

கணையுண்ட தேரு மிருளுண்ணு மாழியு மக்கணையும்
பிணையுண்ட தேரைப் பரித்துஞ் சிலையும் பிறங்கவெல்லா
மணைவொன்ற வாக்கும் வலவனு மேங்க வசித்தவென்ப
விணையொன்று மில்லாத் துறைசையிற் பஞ்சாக் கரவின்பமே. ()

இன்ப மிதுவெனப் பஞ்சாக் கரவ னிணைப்பதத்தி
லன்பிற் பிணைந்த வடியரல் லான்மற்றை யாரறிவார்
துன்பிற் பிணைவது கண்டுந் தொடர்ச்சியெல் லாஞ்சுகமா
வன்பிற் பிணைந்திடு மாலாதி யோரு மதித்தனரே. (26)

மதிப்பிக்கு மென்னைத்தன் பாதத்தை யாக்கை வயங்கிநிற்கு
முதிப்பிக்கு மண்பை யுறுகளைத் தெள்ளமு தாயுகக்குங்
கதிப்பிக்கு மாணவ மாயைகன் மங்களின் கட்டறுக்கும்
பதிப்பிக்கும் பஞ்சாக் கரவன்றன் பாலெனைப் பாதங்கொண்டே.

கொண்டலங் கண்டமுங் கொக்கரைக் கூத்துங் குறுநகையு
மண்டிலங் கொண்டவிர் செஞ்சடைக் கற்றையும் வான்பிறையுந்
தண்டளிர்ப் பாதமும் பஞ்சாக் கரவன் றயங்கநுது
முண்டன கண்டவன் றேயெனை மீட்டு முமிழ்வின்றியே. (28)

இன்றேயென் ஞான்று மொழியாத வின்பத் துறைபடிய
நன்றே யருளும்பஞ் சாக்கர நாத னளினபதத்
தன்றே விரவு நிலையறி யாதது போலழுந்தி
வென்றே விரவு மலமறி யாமை விடுத்தனமே. (29)

விடுத்தன மென்று பகர்ந்தத னல்விடு மோமலமு
மடுத்தன மென்று பகர்ந்தத னைண்மு மோவருளு
மடுத்தநன் பஞ்சாக் கரவன் மலர்ப்பதத் தேயழுந்திக்
கெடுத்தெனை யியானெனுஞ் சேட்டைப் பகுப்புங் கெடினல்லதே.

அல்லவிர் கண்டனெண் டோளன் முக்கண்ண னழற்கரத்த
னெல்லுமிழ் மேனியன் பஞ்சாக் கரவ னெனக்கிரங்கிச்
சொல்லிய ஞானந் துவந்துவம் பாற்றித் தொக்காருயிராய்ப்
புல்லிய ஞான மிரண்டுமல் லாற்புக லொன்றில்லையே. (31)

இல்லை யிறைவனென் பார்க்கு மிறையென்ற மாத்திரையா
னல்ல வருளும்பஞ் சாக்கர நாத னளினபதஞ்
சொல்ல நினைய விறைஞ்சப்பெற் றார்க்குத் துகட்கிழங்கைக்
கல்லி யருள்வதி னையுறல் வேண்டுங்கொல் காசினிக்கே. (32)

காசினி மீது பிறந்தவர் தம்புளுங் காவிரிசூழ்ந்
தாசிறு நாட்டிற் பவித்தவர் தூய ரவர்களுள்ளு
மாசறு பஞ்சாக் கரவன் வதியா ரூரினுற்றோர்
தேசுறு தூய ரவருளுந் தூயர்சென் றேத்துநரே. (33)

எத்துநர் தம்மு ளிருந்துதன் பாதத்தை யேத்துவிக்குஞ்
சாத்துநர் தம்மு ளிருந்துதண் போதலர் சாத்துவிக்கும்
பாத்துநர் தம்மு ளிருந்துநட் போடிகல் பாத்துவிக்கு
மாத்தன்பஞ் சாக்கர வண்ண லருளு மருளிதுவே. (34)

இதுபுரி வேனென வொன்றனை மேற்கொண் டிடைவிடக்கு
மதுபுரி வேனென் றடுக்கு மயர்க்குமற் றுலுயிரிற்
சதுவிய தன்மை சரிசறுத் தாண்டபஞ் சாக்கரவன்
முதுநல முற்றுமுற் றுதுமுற் றின்புந் திளைத்திடுமே. (35)

திளைத்திடுந் தன்மையிற் றுளு யிருக்குந் திசபுவருள்
விளைத்துமற் றேனை யிடங்களில் வேறு யிருக்கும்விண்ணின்
மூளைத்தெழு வெண்மதிக் கண்ணியன் பஞ்சாக்கரவன்முன் னேனன்
வளைத்தழும் பாளன்மெய்ம் மாதவர் போற்றிய மாதவனே. (36)

மாதவம் யாதும் புரிந்தறி யேன்வண் மலர்ப்பதத்துப்
போதலர் நீருப் பொழிந்தறி யேனெதிர் போதலுமே
வீதனை சோலை விரைகுழ் துறைசைப்பஞ் சாக்கரவன்
றீதற வாண்ட விரகினை யென்னென்று செப்புவதே. (37)

செப்பற் கரியன சிந்தைக் கரியன சேர்பொருளோன்
றெப்பற் கரியன வுள்ளே விரவியொண் மாமதிபோற்
பப்புற்ற வாணவம் பாற்றி வருவன பண்பினர்க்கு
வைப்பிற் பொலிவன பஞ்சாக் கரவன் மலரடியே. (38)

அடியோ ரிரண்டி னுலகொரு மூன்று மடக்கியதால்
வடிவாளி வார்சிலை வையகந் தாங்கு மதுகையதான்
முடியா முதல்வன்பஞ் சாக்கர மீளி முழுமணித்தேர்ப்
படியோ ரிறையு முருளிட மில்லாப் பரப்பினதே. (39)

பரப்புற்ற தேர்க்கமை பாகனும் பாகற் பயந்தவனு
மிரப்புற்று நாடவெட் டாதிறந் தோங்கின வின்பவெள்ளம்
விருப்புற்ற வன்பர்க் கருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருடன்
குருப்பெற்ற வேணி முடியுங் குரைகழற் பாதமுமே. (40)

பாதங்க ணான்கும் வைத் தானவை நல்கும் பதங்கள் வைத்தான்
வேதங்க ணான்கும் வைத் தான்விரை யாக்கலி வீறவைத்தான்
பூதங்க ளாதிவைத் தான்புரை யாத புசர்மலத்தி
னேதங்கள் பாறவைத் தானெழிற் பஞ்சாக் கரவிறையே. (41)

இறையிற் றிருந்துபஞ் சாக்கர நாத னிறைசெறுத்து
முறைநாடி னேனே முறைமுறை யாங்கொண் முகிழ்ப்பவற்றுண்
மறையா யிருப்பதொன் றின்றாக வெங்கும் வதிந்தறிந்து
பெறயா வருக்கு மவையவ ராலுய்க்கும் பெற்றியனே. (42)

பெற்றி யொருவர்க் கறிவரி யான்பெரு வள்ளன்மையை
யுற்றறிந் தான்பற்றை வள்ளன்மை வள்ளன்மை யாயுறுமே
பற்றிக லின்றிப் பயன்விழை யாதுபஞ் சாக்கரன்போன்
முற்று மளிப்பவர் யார்முடி வானவர் தம்முளுமே. (43)

உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியர் தாமுலகி
னெள்ளும் பரிசின ரேனும் வினைவழி நண்ணகிலார்
தெள்ளும் பெரும்புகழ்ப் பஞ்சாக் கரவன் றிருவடியை
விள்ளும் பரிசின ரெல்லாம் விடுத்தும் விடுக்கலரே. (44)

விடுக்கலர் பற்றினொ டார்வங் கதியை விரும்புகிலார்
தொடுக்கலர் பஞ்சாக் கரவன் பதத்துச்சொன் மாமலர்கள்
கொடுக்கல ராவி யுடல்பொரு ளாங்குக் கொழுஞ்சுவைத்தேன்
படுக்கல ரன்பரைப் போனடிப் பார்சகென் வருவதுவே. (45)

வருவதும் போவது மாயுழல் வீர்வம்மின் வந்தணிரேற்
றருநிதி சிந்தா மணிகாம தேனுவுந் தந்தருளும்
பொருவறு போக மெலாந்தரும் போக மெலாம்வெறுத்தா
லொருவரு முத்திபு நல்கும்பஞ் சாக்கர வொள்ளொளியே. (46)

ஒளிக்கு முயிர்களுக் குள்ளே மலத்தி னொளித்தவுயிர்க்
களிக்குந் தனுகர ணாதி யளித்த வவற்றொடு ருள்
விளிக்கு முளைத்த வுயிரினைப் பஞ்சாக் கரவிமலன்
றெளிக்கும் பளிக்கி னிழல்போ லுடலந் திரிவிக்குமே. (47)

விக்கு ளிருமன் முயலகன் குட்டம்வெப் புப்பெருநோய்
தொக்கு வயிற்றுறு நோய்சூலை நோயொடு சூழ்ந்தடினு
நக்கு நலத்தரு பட்சாக் கரவ னிணைபதம்
புக்கு விடினங்க ணெல்லாமின் பாகப் பொலிதருமே. (48)

பொலிந்தன மன்னோ தணியுந் தணிந்தன வேபொலியுங்
கலந்தன மன்ற தணக்குந் தணந்தன வேசலியுஞ்
சலந்தரு மையத் தியற்கை தனைக்குறித் தாழன்மினோ
நலந்தரு பஞ்சாக் கரவனை நாடி நயமின்களே. (49)

கள்ளுண்ட வாளிச் சுவைபுண்ட கார்முகக் காளையுடல்
விள்ளுண்ட கண்ணன்பஞ் சாக்கரநாதன் விரைமலர்த்தா
ணுள்ளுண்ட நெஞ்சுண் டவன்பெயர் பூண்டநன் னாவுமுண்டா
லெள்ளுண்ட வல்வினைக் கஞ்சுவ தின்றினி யெய்தினுமே. (50)

எய்தடு முப்புரத் தெண்ணிய மூவ ரெரிபிழைப்பச்
செய்தவன் பஞ்சாக் கரவன் றிருவடித் தாமரைக்கீழ்ப்
பெய்தடச் சூழ்ந்த பெயரா வினையைப் பிழைப்பித்துய்தி
வெய்தரு ளுந்திறத் தென்னினி வேறு விளம்புவதே. (51)

விளம்புவ தென்னினிப் பஞ்சாக் கரவன்வெல் பூங்கழற்கு
ளுளம்புகு வோர்கட் குறுவினை யாது முறுதுமெய்யே
களம்படு செந்தீக் கதுவி னிழுதுடல் காயுங்கொலோ
வளம்படு புற்போ லணைந்துட னீங்கிய தாருயிரே. (52)

உயிர்தா முயிர்க்கு முடலினல் லாதின்பத் துன்பமொன்றும்
பயிலா பிறவுட லெங்கு மிருந்துமப் பண்பினவாற்
செயிர்தீர்ந்து பஞ்சாக் கரவன் றிருவடி சென்றுபற்றின்
மயரா ருடல மிருந்தும் பயனென் மருவுவதே. (53)

மருவுவ தொன்றை யரிதுபஞ் சாக்கர வான்பொருளி
னருள்வழி யன்றி யொருவனு மொன்றை யரிதுமன்ற
வொருவனு மொன்றைமற் றொன்றை யுறலுமெல் லாமவன்றன்
றிருவடி யேயென்று சிந்திகண் டாய்மலந் தேய்ந்தறுமே. (54)

அற்றாலு மென்னை புறத்தே பயில்பொரு ளானவெலாங்
கற்றாலு மென்னை யரிதா கியகல்வி காசில்புகழ்
பெற்றாலு மென்னைபஞ் சாக்கர நாதன் பிறங்கருளி
லுற்றாலும் யானென தென்னுஞ் செருக்கொழி யாவிடினே. (55)

விடுக்குங் கணையெறு ஊர்தி மனைவி விலங்கலந்தோட்
படுக்குங் கலையு மொருபொரு ளேகொண்ட பண்ணவன்சீர்
கொடுக்குந் துறைசைப்பஞ் சாக்கர நாதன் குலப்புகழைத்
தொடுக்கும் பரிசுபெற் றாம்பெறு மாறின்று சூழ்பவமே. (56)

பவம்பல கோடி வருமாறு நாவிற் பயிற்றியிட்ட
வவம்பல கோடியும் பஞ்சாக் கரனைப் புகழ்ந்தறுத்தாந்
தவம்பல கோடிய சிந்தைய தாணினைந் தேதணந்தா
நிவந்தபல் கோடி யுடற்றீங் கிறைஞ்சுபு நீத்தனமே. (57)

நீத்தனங் காணி னிகழுஞ் சுகமென தியானிலவப்
பாத்தனங் காணிற் படுவதொன் றில்லைபஞ் சாக்கரவன்
பூத்தசெந் தாமரைத் தாளுங் கரமும்புன் மூரனிலா
யாத்தசெவ் வாயு முகமுமெல் லாமின்பத் தேயெழுமே. (58)

எழுந்தது பஞ்சாக் கரவன் றிருவரு ளெங்குமதில்
விழுந்ததென் புல்லறி வாங்கே யருளாய் மிளிர்ந்தனவா
லழுந்திய பாசமென் றெண்ணிய மாயை யருவினையுந்
தழுந்தரம் வேறினி யில்லையின் பொன்றே தலைப்பட்டதே. (59)

பட்டது பாசமென் பாரது மாயும் படியறியா
ரொட்டிய தாரரு ளென்பா ரஃதுறு முண்மையெய்யா
ரட்டில கெல்லா மளிக்கும்பஞ் சாக்கர வண்ணலருண்
முட்டறு ஞான முகிழா வுளப்படை மூர்க்கர்களே. (60)

மூர்க்கரைப் போல முதுமா தவர்க்கு முனிவுசெய்து
பார்க்குளெஞ் ஞான்றும் பருவரு வேனையும் பார்த்தருளாய்
கார்க்கதிர் தோகை யெனவடி யார்கள் கலந்தெதிர்நின்
றார்க்குந் துறைசைப்பஞ் சாக்கர நாத வருட்குருவே. (61)

குருமணி போலித் துருவன் பிணித்த கொழுக்கயிற்றி
றொருவுதல் கோளுக் கிலையத் திசையி னுறினுமவ்வா
றருண்மணி யாகிய பஞ்சாக் கரவ வடியெனுநின்
றிருவடி நீங்காத் திறம்யாங் கிருப்பினுஞ் செய்கருளே. (62)

அருணட மாடிய பஞ்சாக் கரவன் முன் பைந்தொழில்கொண்
டிருணட மாடிய வம்பல வாண னெனக்களித்த
திருநடங் காணிற் செவிரை விழுங்கித் திரை விழுங்கி
யுருநட மாடவெ னுள்ளம் விழுங்கி யுகந்ததுவே. (63)

உகந்தவ னெல்லாப் பொருட்கும்பஞ் சாக்கர வுத்தமனை
யகந்தனிற் சற்றே யடிப்பிற் சதிகளெல் லாமடிப்ப
நிகந்திடிற் சற்றே யெழுநான்கு கோடி நரகும்வல்லே
புகுந்துபல் லூழி பெயர்ந்து பெழாது புழுங்குவரே. (64)

புழுங்கும் பெருப்பழி வந்தாலு மென்னின்பம் போர்த்துளக்கை
விழுங்கும் பெருப்புகழ் வந்தாலு மென்வினைப் பாலதென்று
மழுங்குர் படியதன் றேயருட் பஞ்சாக் கரவன்பதத்
தொழுங்குப் பெருநிலைக் கூறவற் றுவில்லை யுற்றுநில்லே. (65)

நில்லென்று செந்தீ நிரையி னிறுவினு நீடுசெல்லல்
சல்லென்று தீய திறத்தி னெடுப்பினுங் காய்ந்துநயந்
தல்லொன்றி வாளாங் கலையாது பஞ்சாக் கரவனருள்
புல்லொன்று பாரங் கழிப்பதென் றேயின்பம் பூணுகவே. (66)

பூணுங் கடவுளைப் பஞ்சாக் கரவனைப் பூண்டுகொண்டு
காணுங் கடனல் வருவினை மாய்க்குங் கடனதன்றி
மாணுங் கரிசுடற் சென்ற வினையை மறப்பவுழுந்
தேனுங் கெடேன்மின் குறுகா தொழியா வெறுமுடைத்தே (67)

உடைத்தைங் கலையும் பரானந்த வின்ப முறப்பயிற்றி
விடைத்தங்கு மேவு மொழியா வினையின் விறன்முருக்கித்
துடைத்தங் கருளும்பஞ் சாக்கர நாதன் சுடர்ப்பதத்து
ளடைத்தங் கிருப்ப வறியா துளமயல் விட்டனவே. (68)

விட்டனம் யானென தென்றுஞ் செருக்கை விடுத்தலொடுங்
கெட்டன மத்தகு சேட்டினை யேகிளர் வாழ்க்கையெனப்
பட்டனம் பஞ்சாக் கரவன் பதமலர்ப் பூசனையே
தொட்டன மிந்தத் தொடர்பினை யாவர் துளக்குநரே. (69)

துளக்குறும் வினையுட னிற்பத் தொகுப்புயிர் வாங்கலெவ்வா
றளக்கற் கரியான் சாக்கர நாதனென் றையுறன்மின்
வளக்குஞ் சரந்தன் வயிற்றுட் செறிவினை வாங்கிக்கொண்டு
விளக்கட் கனிதன் புறம்விடல் கண்டன மேதினிக்கே. (70)

மேதினி மீதும் விசும்பினுந் தீவினை யென்சிரத்தும்
போதுவ வீதென்ன வற்புதம் போக்கின் மறைமுடிவு
மாதவர் நெஞ்சு மலையான் மடந்தை வளைக்கரமு
நீதியிற் றைவரும் பஞ்சாக் கரவ னெடும்பதமே. (71)

பதந்தர வல்லவன் பஞ்சாக் கரவன் பசுபதிகல்
விதந்தரு மீச னிறையெட் டுருவத்த னெண்குணத்தான்
சுதந்திர முள்ளவ னென்றுசொன் மாத்திரை சூழ்ந்தவர்க்குச்
சதந்தரு வல்வினை காவத நூறு கடந்திடுமே. (72)

இறுகின்ற மாலைய தாக்கை யிதுதனைப் பேணிக்கொண்டே
தெறுகின்ற வல்வினை வாயழி வேலைச்சென் றேத்துநர்பா
லுறுகின்ற பஞ்சாக் கரவனவ் வூழ்வினை தன்னடியா
லறுகின்ற தாக்கியஞ் சேலிங்கண் வாவென் றருளினனே. (73)

அருள்கின்ற காலமெஞ் ஞான்றம்பஞ் சாக்கர வாண்டகைக்கா
மிருள்கின்ற வாணவத் தேகிடந் தெய்த்தின்பத் துன்பந்துய்த்துத்
தெருள்கின் றிலாவுயிர்க் கேசென்ற சேரும் பருவங்கண்டாய்
மருள்கின்ற வன்னெஞ்ச மேமதி யாயின்று வாய்த்திடுமே. (74)

வாய்த்த துடலிது பஞ்சாக் கரவன மலர்ப்பதத்தை
யேத்துத லாலென் றிருமாந் திருந்தவெ னெண்ணமெல்லாந்
தீத்தெறு பஞ்சாய்ச் சிதையப் பலகதி சென்றுசென்று
பூத்திடு மாறு புரட்டிய தாற்புல் வினையடுத்தே. (75)

அடுத்த வினைக்கினி யஞ்சேன்பஞ் சாக்கர வாரியன்முன்
விடுத்திருண் டூழ்கும் பிழையிற் பருவம் விளைத்துடலங்
கொடுத்தக்கும் விட்டிது காறும் விளைத்தகுற் றங்களுநீத்
தெடுத்தவனின் னுமெடுப்பனென் றுண்மையை யெண்ணினனே.

எண்ண மெலாந்த னிணையடி யேறவைத் தானியம்பும்
வண்ண மெலாந்தன் பெயராக வைத்தனன் வாருடலிற்
பண்ண லெலாந்தன் பணியாக வைத்தனன் பண்ணவர்கு
பூண்ணல்டஞ் சாக்கர வேந்த லருளுமி தற்புதமே. (77)

அற்புத மேனிய னுந்திருச் சிற்றம் பலவனறற்
புற்புதம் போனுருக் கொண்டபஞ் சாக்கர பூரணனைச்
சிற்பர மென்றுள்ள வாறறி யார்செயிர் தீர்தொழிலந்
துற்பவ மாக்கு முருவத்தி னுண்மையு முன்னலரே. (78)

உன்னிய காலை யுறவா யினிக்குஞ்சற் றேயயர்ப்பி
னன்னிய மாக வகன்றே கவற்று மனனியமாய்
மன்னிய பஞ்சாக் கரவன் வயங்கரு ளோங்கியக்காற்
பொன்னியல் காலைப் புரையிருள் போன்மலம் பொன்றுவதே. ()

பொன்றஞ்சு முன்றி னுடையவ ராகப் பொலிதரினு
மின்றஞ்சு வேலலை யஞ்சுவர் வேலர் வெருவுவராற்
கொன்றஞ்சு தேவரைத் தேவரு மஞ்சுவர் கோகனதத்
தென்றஞ்சு பஞ்சாக் கரவன் றிருவடித் தேசினர்க்கே. (80)

தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசிநின் றாடிய வம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்பலரைக்
கூசிநின் றேத்திய மாதவத் தார்க்கென் குறையுளதே. (81)

குறையுண்ட நெஞ்சும் பழியுண்ட செய்கையுங் குற்றமெலா
முறையுண்ட வாக்கு மெனக்களித் தானுற் றுளாரெவர்க்கு
நிறையுண்ட வாக்கும் புகழுண்ட செய்கையு நீடுமின்பப்
பொறையுண்ட நெஞ்சு மளித்தான்பஞ் சாக்கர பூரணனே. (82)

பூரணன் பஞ்சாக் கரவனென் செய்யும் புலைநெஞ்சமே
யாரண மார்க்கம் விடுத்தே யரவக லல்குனல்லார்
வாரணி கொங்கை முயக்கே யமர்ந்து வருந்திடும்பைக்
காரண மேதொகுத் தாயது கூட்டுங் கடனவற்கே. (83)

அவனென் றுலகம் புகழும்பஞ் சாக்கர வாண்டகையை
யெவனென்று முன்னி யிகந்தனை யாலெ னிழுதைநெஞ்சே
பவன்றனென் சங்கரன் பார்ப்பதி பாகன் பரன்சிவனு
முவனென்று தேறி யொழியா யொழியா வுறுபகையே. (84)

உறுபகை யாளர் துவன்றினு நட்பின ரோங்கினுமென்
முறுகிய வின்ப மடுப்பதுண் டேற்பகை யான்முருக்கப்
பெறுமதொன் றில்லையின் னுங்குள தேற்பெய ராதுறவா
னிறுவவு நீக்கவும் வல்லன்பஞ் சாக்கர நின்மலனே. (85)

நின்மலன் பேரறி வாளன்பஞ் சாக்கர நிர்க்குணன்மற்
றன்மலத் தாழ்புல் லறிவுடை யேனுட னுயமர்ந்து
தன்மலர்ப் பாதந் தலைத்தந்துந் தாழ்விலன் சார்களங்க
வின்மதி வாழும் வெளிக்கென்னை தாழ்வு விரவுவதே. (86)

விரவிய வான்வளி தீவிரி நீர்வியன் பாரவையாய்ப்
பரவிய பான்மதி யாய்க்கதிர் கால்பகல் வானவனாய்ப்
புரவிய லாருயி ராய்நின்ற பஞ்சாக் கரப்பொருளைக்
கரவியல் சீருண் மாறுது காணுங் கடனரிதே. (87)

அரிதுதன் பாதத் தடைவா ருயிர்க்கென வன்றுதொட்டுக்
கரிசறு மூர்த்தி தலந்தீர்த்த மாயமர் காரணனை
விரிபுகழ்ப் பஞ்சாக் கரவனை மெய்யன்பி னுளத்தே
பரிபவம் பெற்றார் பெறார்மலந் தான்செய் பரிபவமே. (88)

பவமெழு கோடி யெடுப்பினு மென்னைபஞ் சாக்கரவ
னவநவ மாகப் புணருந் தொறுமின்ப நல்குகின்ற
தவமலி யிப்பவம் போல்வாய்ப் புறினிந்தத் தன்மையின்றி
யவமுறி னிந்தப் பவமுங் கடுக வவிதனன்றே. (89)

நன்றே யடிப்ப தருளிற் கலந்த நலத்தவர்க்கு
மின்றே யிறந்த பவங்களி னீட்டு மிருவினையுட்
சென்றே பயப்ப வெவையவை பஞ்சாக் கரச்செம்மரு
னின்றே புணர்த்தும் புணர்த்தினு மேமரு நிலைவைக்குமே. (90)

வைப்பா யிருக்கும்பஞ் சாக்கர நாதன் மலர்ப்பதமே
துப்பா யழுந்தின் மலைநேர் வினையு மெரித்துநுப்ப
வொப்பா யவியும் பதைப்பிற் கடுகு முயர்மலையா
மிப்பா லனநெஞ்ச மேநினக் காம்வழி யெய்துகவே. (91)

எய்துவ திக்கிடை யொன்றில்லை பஞ்சாக் கரவிறைவ
னுய்திற நாடிமுன் செய்வினை யூட்டி யொழிக்குங்கண்டாய்
நைதிறந் தீவினைக் கெண்ணலு நல்லதென் றென்றனையே
செய்திற னாடலும் வேண்டா வவனடி சிந்திநெஞ்சே. (92)

நெஞ்சே நினக்கு நெடும்பகை நீயந் நிலையறியா
தஞ்சே லெனவருள் பஞ்சாக் கரவ னவையவரா
லெஞ்சாது நீமுன்ன மீட்டிய கூட்டி யிடும்பொழுது
நஞ்சே யெனமுன் னிலைபகை யாகவு நாடினையே. (93)

நாடுவ தெல்லா மருளும்பஞ் சாக்கர னற்பதமே
கூடுவ தெல்லா மவனடி யார்தங் குழாத்திடையே
வீடுவ தெல்லா மறிவிலர் சேர்ச்சியென் றுய்விடினே
நீடுறும் வேறின்ப முண்டேனும் வேண்டா நெடுநிலத்தே. (94)

நிலங்கா லகழ்ந்து நெடுமா லறியா நிகரில்பத
மலங்கா லறுக்கும்பஞ் சாக்கர நாதன் மலியருளா
னலங்கா முறுவெனக் கெண்மையின் முற்றுநன் றுய்த்தளித்தான்
சலங்காமை யின்மையின் மற்றதற் கேற்குங் கடனிலனே. (95)

இலம்பட லாவது பஞ்சாக் கரவ னெழிலருளி
னலம்புரி வோர்க்குல கத்துறு செல்வங்க ணண்ணுவதே
குலம்புரி செல்வங்க ளாவன கோதி லடியவர்க்குச்
சலம்புரி வையகத் தாறிலம் பாடு தழைப்பனவே. (96)

தழைக்கின்ற போதி வனமுஞ்செந் தாடொழு காலமிதன்
றழைக்கின்ற வன்பர்கள் சோலையுங் கண்டா ரகமுழுதுங்
குழைக்கின்ற பஞ்சாக் கரவன்மெய்க் கோலமுங் கோதிறவ
மிழைக்கின்ற சூழலு மென்மன நீங்கா திருப்பனவே. (97)

இருப்பன நெஞ்சன்பல் லூழியெல் லாம்பெயர்ந் தாலுமெம்பால்
விருப்பின னைத லரிதெனப் பஞ்சாக் கரவிமலன்
பொருப்பின்னை வாங்கிற் றெனவென்னை யாண்ட புதுமையினாற்
கருப்படு மாறினிச் செல்லவொட் டானருட் காப்பிடுமே. (98)

இடுவைதல் லாமவன் றன்குண மென்குண மேற்றல்வினை
யடுவைதல் லாமவன் றன்குண மென்குண மாக்கன்மெய்ம்மை
தொடுவைதல் லாமவன் றன்குண மென்குணந் தோல்வியினை
படுவன வாயினும் பஞ்சாக் கரவன் பரிவுளனே. (99)

உளநின்று காணி னொளிப்பனக் கேவய னுளமொளிப்பின்
வெளிநின்று காணப் படுவன் விரிகடற் றெள்ளமிழ்துந்
தெளிவுண்ட தேறலுங் கைப்பவென் சிந்தை யெலாமினிப்பன்
பளகறுத் தாண்டபஞ் சாக்கர நாத பசுபதியே. (100)

பஞ்சாக்கரதேசிகரந்தாதி முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

## குறிப்புரை.

1 பதி பசு பாசத்தை - அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி பசு பாச மென்னும் மூன்றனையும், பாசம் பசு பதி ஆக்கி - ஐந்தொழி லியற்றுங்கால் எய்திய சகலாவஸ்தையில் பாசமும் பசுவும் பதியுமாகிய முறையில் முன்பின்னாக நிற்கச்செய்து, பசு - ஆன்மா, ஒரீஇ - அந்த நிலையின் நீங்கி, பதி - பதிநெறியில், ஆக - ஒழுகியவழி, பசு - ஆன்மாவை, பதி ஆக்கி - பதியின் தன்மை எய்தச் செய்து (தூயதாக்கி), பின்னும் பயிற்றி - அது சீவன்முத்தி நிலையில் நிற்குங்காலும் அந்நிலையி னழுவாதிருக்கச் செய்து, (இவ்வகையால்) தான் - அவ்வான்மா, பதி யென ஆய்ப் பயிலும் - பதிபோலச் சிவத்தன்மை முழுதும் விளங்கப் பெற்றுப் பயிலுதற்கு ஏதுவாகிய, திருவாவடுதுறைசைப் பதி - திருவா வடுதுறை என்னும் திருப்பதியில், வளர் - எழுந்தருளியிருக்கின்ற, பஞ்சாக்கரவனை - ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்தியை, என் சொல்லிப் பாடுதும் - எவ் வியல்பினனென்று சொல்லிப் பாடுதும் என்பதாம்.

முன்பின்னாக நிற்கச்செய்தலாவது - பாசம் முற்படப் புலப்பட்டும், பசு அதனால் தொழிற்பட்டும், பதி தொழிற்படுத்தியும் நிற்குமாறு செய்தல். ஆக - காரணப்பொருட்டு. பாசம் பசு பதியாக்குதலாவது கேவலநிலையினின்றும் சகலநிலை யெய்துவித்தல். பதி பசுவாக என்றது ஆன்மாப் பதிநெறியில் ஒழுகிநிற்றலை யுணர்த்திற்று. பசுபதி யாக்கி என் புழி ஆக்கச் சொல் அத்துவ சுத்தியால் ஆன்மாவைத் தூயனாக்கிப் பதி யின்றன்மை யெய்துவித்தலை யுணர்த்திற்று. தான் பதி யென ஆய் என்புழி ஆக்கச் சொல் ஆன்மாப் பரமுத்தியில் சிவானந்தானுபவ நிலையில் உறைத்து நிற்றலை உணர்த்திற்று.

ஆக்கி ஆக்கிப் பயிற்றித் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக் கரவனெனவும், ஆய்ப் பயிலும் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக் கரவனெனவும் முடிக்க.

2. படர்தல் - நினைத்தல். அன்னவன் பாதம் கூடுவது என்க. இன்பம் நீடுவது. நிகழ் செயல் - அவற்றிற்கு நிகழும் செயல்கள்.

3. ஒன்று இல்லையாக - தனக்கென உருவம் ஒன்றும் இல்லையாகவும், உயிர் உளதாக - உயிரென்பது ஒன்று இருப்பதை யுத்தேசித்து. ஒன்றில்லையாடியாகிய பஞ்சாக்கரவன் உருவங் கொண்டு சென்று நின்று. இல்லையாதி - தற்போத முனைப்பு இல்லையாவாயாக. நின்றயான் - தற்போத முனைப்புடன் நின்ற யான். சென்று நின்று இறலும் - அவன் உபதேசித்த நெறிவழிச் சென்று நின்ற தற்போத முனைப்பு ஒழிதலும். சொல்லா ஒன்று - சிவானந்தம். ஒன்றில்லையாக என்பதற்கு அத்துவிதச் சொற்கு ஒன்றென்னும் பொருளில்லையாம்படி என்று பொருள்கோடலுமாம்.

4. பாசம் சடமானதால், பாசவறிவு என்பது யாது? உயிர் ஆணவம் நீங்கியவழி நாமென்று கருதுமாறின்மையின், பசுவறிவு என்பது யாது? என்றும் ஒருநிலையில் நின்று உணர்த்துவது பதியறிவு ஒன்றேயாம். இங்ஙனமாக அப்பதியறிவைப் பாசஞானம் பசுஞானம் என்பவற்றோடு ஒருங்கு சேர்த்துப் பதிஞானமென்பது யாது? அருள வேண்டும் என்பதாம். இந்த ஞானத்தினியல்புகள் சிவஞானபாடியத்திற் கூறப்பட்டன.

5. உயிர்க்கு அநுக்கிரகம் செய்வது சிவமேயன்றி ஏனையுயிர்களல்ல என்பதை யாரும் தெரிந்து பிழைக்க. பெருவான் பொருள் - சிவம். அப்பொருட்கு வாசகம் ஸ்ரீ பஞ்சாக்ஷரம். அருவாயும் அருவுருவாயும் உருவாயும் அவைதாமெனவும் வந்ததேயன்றி ஸ்ரீ பஞ்சாக்ஷர தேசிக மூர்த்தியாகவும் எளிவந்த வாய்மை என்க.

6. தாழ்குழல் நோக்கி உலைமெழுகு போல உருகும்: பமரம் - வண்டு: பிரமரமென்னும் வடமொழித்திரிவு. தணப்பற - நீக்கமின்றி. தேறலைப் பருகும். திருக்கு - குற்றம்.

7. ஆர்வம் - பேரன்பு. மெய் - சிவமாக.

8. சஞ்சிதம் - அநுபவிக்க வாராமற் குவிந்து கிடக்கும் கன்மத் தொகுதி. உடலிற் புல்கிய இன்பத் துன்பங்கள் - பிராரப்த கன்ம பலன்கள். சஞ்சித வினைத்தொகுதியைத் தன்திரு நோக்கா லெரித்தலும், பிராரப்தவினைப் பயனைத் தான் ஏற்றுக்கோடலுமாகிய இவற்றின் விரிவைச் சிவஞான மாபாடியத்திற் காண்க. கைம்மாறு கல்குதற்குக் கண்டிலனென்க. பூப்பது தொழின்மேனின்றது.

9. நலத் தகை - அன்மொழித்தொகை. நலத் தகையாகிய பஞ்சாக்கர தேவன். அவன் பணித்திடுங்கால் எனக்கு மெல்குந் திறமுள்ளது. மெல்குசல் - மென்மையாதல். ஒல்குதல் - குழையும். யான் எனது - அகங்கார மமகாரம். ஒடியது தனித்தனி கூட்டுக.

10. உற்றது - சகசமாயுற்றதாகிய. ஆணவம் ஒடியாது. பாசமாகிய கன்மங்கள். பல்வகைத் தோற்றம் வாடின - அண்டச முதலாயின ஒழிந்தன. தோற்றம இன்மையின் அயன் மால் முதலானோர் செய்கை வீடினர். நகைக்கு - உருபுமயக்கம்.

11. எதிர்ந்தோர் - எதிர்ப்பட்டோர். நவை - குற்றம். துகைத்தல் - கெடுத்தல். தொக்கு - சம்பந்தம். தகைத்தல் - தடுத்தல். உகைத்தல் - செலுத்தல். துறைசையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்தியின் திருவுருவை வியந்தவாறு.

12. தமது திருவடித்தாமரைகளைத் தொழுதால் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் இயமனை நம்பாற் சாரவொட்டார். அழற்காலன் - அழலைப்போலுங் காலன். தநு - உடல். படுல் - உட்டுளையுடைய. கால் - நாளம். அரவிந்தப் புத்தேள் - பிரமன். இங்ஙனம் படைப்புக் கடவுட்கும் அழிக்தற் கடவுட்கும் தத்தஞ்செயல்செய்ய இடமில்லையாக, திருமாற்கும் தன்செயல் செய்ய இடமில்லையென்பதாம். கானம் - பாட்டு. ஆயன் - கண்ணன். ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் அவ்விதஞ் செய்யும் தன்மையுடையார் என்க.

13. கை யம்பு ஈண்டுத் திருமால். அப் பிரான் உலகுண்டது கிருஷ்ணவதார நிகழ்ச்சி கண்மலர் ஒன்று - நெற்றி விழி. ஐ அம்பு வேளை உண்டது - மன்மதனை உண்டது. அம்பு - நீர். எய்யம் - அறியோம். 'எய்யாமையே அறியாமை' என்பது தொல்காப்பியம். அம்புகண் என்பன ஒவ்வொன்றே யுண்டன: திருவடியோ வணங்கிய அன்பர் பிறவற்றைச் சிறிதுமறியோமென்னுமாறு எல்லாவற்றையும் எடுத்து விழுங்கியதென்க.

14. ஒளி அறல் - ஒளியின் நீக்கம். மிடைதல் - நெருங்குதல். ஒழுங்கி - ஒழுங்குபட்டு. உள்ளத்து ஒழிவு - தற்போத நீக்கம். ஓங்கிருள் - ஆணவம். மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருளாதலின் ஓங்கிருளெனப்பட்டது. மழுக்குதல் - கூரில்லாதொழிதல்: அஃதாவது அது நித்தப்பொருளாயினும் கேடு விளையாதிருத்தல். என்றும் அவனைப் புணர்தலன்றி வேறு புழுங்கக்கடவது யாதுமில்லை.

15, அன்றுதல் - பகைத்தல். நீத்தம் - கங்கைநீர்ப் பெருக்கு. சடைக்கண் நீத்தமடுத்தான். அடல் - கொல்லுதல். ஒதை - ஓசை. செவிக்கண் மடுத்தான். களத்தில் ஆலத்தை மடுத்தான். அவைபோல என்னையும் கொடியபொருளாகக் கருதித் திருவடிக்கண் மடுத்தானெனச் சமற்காரமாகக் கூறினர்.

16. கொடுக்கும் அவன் - தவப்பயனைக் கொடுக்கும் அவனென்க, 'செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும்' கூறியவாறு. தொழிற்கு வரும் நவமா உரு - நவந்தரு பேதம். பவம் - பிறவி. பவம் - திருவுருத்தோற்றம். அத்திருவுருவினிடத்து அன்பு செலுத்தாதிருப்பின் யாரும் அப்பெருமானை அறியாரென்றவாறு.

17. யான் பஞ்சாக்கரவன் பதத்திடை இருந்திடின் மலமும் சேட்டைபுரியாது இருந்திடும்: சற்றுத் தற்போதமெழின் மலமும் உடனே எழுந்து நீ எனக்கு விருந்தென்று சொல்லித் தன்வாய்ப் பெய்யும். அத்துன்பங்கண்டு மீட்டும் அவனடிக்கீழ் இராமல் ஒழியின், ஐயோ எல்லாத் துன்பங்களும் என்பாற் பொருந்திடும். ஆதலின் அப்பெருமானது திருநாமத்தை ஓதுக. ஓதுவதென்பது 'கொள்ளப்படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே' என்பதுபோல நின்றது.

18. ஓதுவது - ஓதப்படுவது. மறையின்மீது வதிவது - வேதத்தின் நடுநாயகமா யிருப்பது, நட்டையும் இகலையும் விளக்குவது. நீக்குவதும் பின் புணர்வதும் முன்பு சேர்ந்த மயக்கத்தை யொழிப்பதும் அது நீங்கியவழி எஞ்சி நிற்பதுமாகிய வெல்லாம் அவன் பெயரே என்க. இது ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் திருநாமப் பொருளை விளக்கியவாறு.

19. பூங்கழற்றுணை கருதிடும் என்னைத் தன்னும் இருத்தும்: மலம் கதிப்பின் என்னோடு பொருதலைச் செய்யும் போகப் புணர்ப்பாயிருக்கும். புரை - சிறப்பு. இருது இடு நாமம் - பருவம். தவத்தால் பருவமடையாதவர்கட்குக் கழற்றுணை இருளாயே இருக்கும். அருள் விருதினையுடைய.

20. அணையா - தன்னைச் சேராத. அணைப்பான் - பானீற்று வினையெச்சம். பிறகே செல்லும் - தன்பின் செல்லுகின்ற. புணை - மரக்கலம். நெஞ்சினை நோக்கிக் கூறியவாறு.

21. அங்கே - நினைத்த அவ்விடத்தே. செஞ்சேவடி - மிகச் சிவந்த திருவடி: 'செஞ்செவ்வே'யென்றாற் போல. இகந்து - நீங்கி.

புலனைச் சென்று பற்றி. சேறல் - செல்லுதல். நயத்தல் - மகிழ்தல், நெஞ்சே நீ யுனக்கு உறுதி யின்னதென்பதனை யறிந்திலை போலும்.

22. நெஞ்சே நல்லன வந்தால் மகிழ்வாய்: நல்லன வல்லாதன வற்றை நின் தீவினைக்குப் பயனாக அவன் கொடுத்தால் நடுங்குவாய் நீ செய்தவினைக் கீடாக உள்ளதை அருள்புரியும் பஞ்சாக்கர மூர்த்தி யோடு இயைந்து உடலாயிருந்து வியந்து அவை தாக்காது இருக்க அறி யாமல் மகிழவும் பனிக்கவும் அறிந்த நின் பண்பு நன்றாயிருக்கின்றது.

23. அளறு - நரகம். நரகத்திற்கு இரையாய் இருந்தேன். அற் பரைப் பொருந்துவேன். இருந்தேன் - வினைப்பெயர். மருந்து - அமிர்தம்.

24. எறழ் - வலிமை. பகடூர்தி - இயமன். குறுகார் - அடை யார். கதமலை - யானை: அன்மொழித்தொகை. மதவிழி - வலியவிழி. திருவடி இயமனையும், செங்கை பிரமனையும், நுதல்விழி மன்மதனையும் ஒறுத்தமையின் அவற்றைத் தரிசித்தோர் முறையே இயமபுரம் சேரா மையும், பிரமன் கையால் எழுதப்படாமையும், மன்மதபாணம் வருத்தா மையும் பெறுவரெனப்பட்டது.

25. கணை - திருமால். அது உண்ட தேர் - கீழும் மேலுமுள்ள உலகங்கள். இருள் உண்ணும் ஆழி - சூரிய சந்திரர். தேரைப் பரிக் கும் சிலை - மகாமேரு. வலவன் - பிரமன். ஏங்க - நம்மால் ஆவது யாதுமில்லையே யென ஏங்குமாறு. அசித்தது - சிரித்தது.

26. வன்பு - வலிமை.

27. மதிப்பிக்கும் - நினைக்கும்படி செய்யும். அன்பை உதிப்பிக்கு மென்க. கதிப்பிக்கும் - கதியிற் செல்லுமாறு செய்யும். என்னைப் பதிப்பிக்கும்.

28. கொண்டல் - மேகம். மண்டலம் - வட்டம். என்னை மீட்டும் உமிழ்வின்றி உண்டன.

29. நளினம் - செந்தாமரை மலர். கேவல நிலையிற் சிவத்தை யறி யாது மலத்தில் அழுந்திக் கிடந்தது போலச் சுத்த நிலையின் மலத்தை யறியாது சிவத்தில் அழுந்திக்கிடந்தமை கூறியவாறு.

30. அடுத்தனம் - அடைந்தோம். எனது என்னும் மமகாரத்தைக் கெடுத்து. கெடினல்லது மலமும் விடுமோ அருளும் அண்முமோ.

31. அல் - இருள். எல் - ஒளி. துவந்துவம் - இன்பத் துன்பங்கள். ஞானம் இரண்டு - அபர பர ஞானங்கள்.

32. சொல்ல நினைய இறைஞ்ச - திரிகரணத்தானும் வழிபட. துகட் கிழங்கு - இங்கே ஆணவமாகிய கிழங்கு. கல்லுதல் - தோண்டுதல். நாதன் அருள்வதின் என்க. காசினிக்கு - உருபுமயக்கம்.

33. ஆசு - குற்றம். இறுதல் - ஒழிபும். வதிதல் - எழுந்தருளியிருத்தல். ஆரூர் - திருவாவடுதுறை.

34. பாத்துநர் - பகுத்துணர்வோர். ஆத்தன் - வடமொழித்திரிவு. அவனன்றி யாதும் நிகழாதென்பது உணர்த்தியவாறு.

35. உயிரின் தன்மை கூறியவாறு. ஒன்றனைச் செய்யத் தொடங்கி இடையில் அதனை விடுத்து வேறொன்றனைச் செய்யத் தொடங்கும்: அதனையும் மறந்துவிடும். இவ்வித வுயிர் ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் முதுநலம் உற்றாலும் முடிவுறக் கொள்ளாது. ஆயினும் பூர்ண வின்பத்தை யனுபவிக்கும். முதுநலம் - ஈண்டு ஆனந்தம்.

36. அருள் விளைத்துத் தானுயிருக்கும் என்க. வளைத் தழும்பாளன் என்பது காஞ்சிப் புராணத்தா லறியப்படுவது.

37. வீ - பூ. ததைதல் - நெருங்குதல். விரகு - உபாயம்.

38. மாமதிபோற் பப்புற்ற வாணவம் பாற்றி என்பதை 'மன்னுமிருளை மதிதுரந்த வாறு' எனவரும் வெண்பாவா னறிக. வைப்பு - நிக்ஷேபநிதி.

39. வடிவாளி அடக்கியது. மதுகை - வலிமை. சிலை - வில்: ஈண்டு மேரு. மீளி - வலியோன். படி - பூமி. தேராகிய படி என்க.

40. பாகன் - பிரமன். பாகற் பயந்தவன் - திருமால். குரு - நிறம். முடியும் பாதமும் அவ்விருவரும் இரப்புற்று நாடவும் எட்டாது கடந்து உயர்ந்தன என்க. அவ்விருவரும் அகங்காரத்தால் நாடத் தொடங்கினாராதலின் கண்டிலரென்பது. 'இன்பவெள்ளம் விருப்புற்ற அன்பர்க்கருளும் பஞ்சாக்கர மெய்ப்பொருள்' என்பதனாற் பெறப்படும்.

41. பாதங்கள் நான்கு - சரியாதி. பதங்கள் நான்கு - சாலோகாதி. வேதங்கள் நான்கு - இருக்காதி. விரையாக்கலி - ஆணை. பூதங்

களாதி - பூத முதலாகிய தத்துவங்கள். புரையாத - இழிந்த. புகர் மலம் - குற்றமாகிய ஆணவமலம். ஏதங்கள் - கேடுகள்.

42. இறை - இறைமை. பஞ்சாக்கரநாதன் அரசு செலுத்தும் முறையை நாடின் வினை முறையினைத்தும் முறையாதலில்லை. முகிழ்ப்ப - இனித் தோன்றுவன : அவை பிராரத்தம்.

43. முற்செய்யுளின் இறைமைகூறி இச்செய்யுளின் வள்ளன்மை கூறுகின்றார். பற்று இகல் - விருப்பு வெறுப்பு. விழையாது - விரும்பாமல்.

44. உள்ளும் புறமும் ஒருதன்மைக் காட்சியர் - சிவஞானிகள். உலகில் கள்ளும் - உலகத்திற் பொருந்தியிருக்கும். விள்ளுதல் - நீங்குதல். பரிசு - தன்மை. பஞ்சாக்கரவன் திருவடியை அடைந்த சீவன் முத்தர் உலகியலிற் பொருந்தி நின்றாலும் அவர் வினைவழி நண்ணகிலார் : அவன் திருவடியை அடையாத வினையார் எல்லாம் வித்தகராயினும் வினைவழி விடுக்கலர். 'உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியருக், கெள்ளுந் திறமேது மில்' என்பது திருவருட்பயன்.

45. ஆர்வம் - கண்ட பொருள்மேற் செல்லும் பற்றுள்ளம். பொருள் என்பது ஈண்டு வினை.

46. வருதல் - பிறத்தல். போதல் - இறத்தல். இவை இப்பொருட்டாதலைப் 'போக்கு வரவு புரிய' என்பதனான் அறிக. தரு - கற்பதரு. நிதி - சங்கநிதி முதலியன. பொரு - உவமை. ஒருவு அரும் முத்தி - பிரிதல் இல்லாத வீடு.

47. கேவலம் சகலம் சுத்தமென்னும் அவத்தை மூன்றினும் பஞ்சாக்கர விமலன் உயிர்கட்கு அருள்புரியுமாறு கூறுகின்றது இச்செய்யுள். உனைத்த - வருந்திய. தெளிக்கும் - தெளிவிக்கும்.

48. விக்குண் முதலிய நோய்கள் சூழ்ந்து வருத்தினும் நக்குப் பஞ்சாக்கரவன் திருவடி புகின் அவை யெல்லாம் இன்பமாகப் பொலியும்.

49. மன்ற - நிச்சயமாக 'மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்' என்பது தொல்காப்பியம். கலவும் - சேரும். சலம் - வஞ்சம். உலகியல் கூறித் தெருட்டியவாறு.

50. கள்ளுண்ட வாளி - மலர். சுவை யுண்ட கார்முகம் - கரும்பு. அவற்றைக் கைக்கொண்ட காளை - மன்மதன். அவனது உடலை விள்ளுண்ட கண்ணனாகிய பஞ்சாக்கர நாதன். வினைக்கு அஞ்சாமைக்குக் காரணம் கூறியவாறு.

51. எண்ணிய மூவர் - சுபுத்தி, சுசீலன், சுதன்மன். திருவடித் தாமரைக்கீழ் என்னைப் பெய்து என்க. பெய்து - விரைந்து.

52. நிழலுடல் - சாயாசரீரம். அளம் - உப்பளம்.

53. உயிர்கடாம் பயிலா என்க. அப்பண்பின் - இன்பத்துன்பம் பயிலாப் பண்பினை. செயிர் - குற்றம். மயரார் - மயங்கார்.

54. அருள்வழியன்றி மருவுவது அரிது: ஒருவலும் அரிது.

55. பொருளானவெலாம் அற்றாலும் என்னை? அருளின் உற்று. ஆலும் - பெயரெச்சம்.

56. ஒரு பொருள் - திருமால். பவம் பெறுமாறு இன்று.

57. திரிகரணத்தாலும் செய்த தீங்குகள் நீங்குமாறு கூறுகின்றது. பஞ்சாக்கரனைப் புகழ்ந்து நாவிற் பயிற்றியிட்ட அவம் பலகோடியும் அறுத்தாம்: சிந்தைய - சிந்தையிலுள்ள தீங்குகள்: வினையாலணையும் பெயர். கோடிய - பெயரெச்சம். அவன் தாளை நினைந்து சிந்தையிலுள்ள தீங்குகளைத் தணந்தாம். இறைஞ்சி உடற்றீங்கு நீத்தனம்.

58. நீத்தனம், பாத்தனம் - வினையெச்சமுற்று.

59. எங்கும் எழுந்தது. அதில் புல்லறிவு விழுந்தது. அருளாய் மிளர்ந்தன. பாசங்களென்று எண்ணப்பட்ட மாயை கன்மங்கள். தழுந்தாம் - தழுவுந்தாம்.

60. மூர்க்கர் என்பார் என்பார்: மாயும்படி அறியார்: அஃதுறும் உண்மை எய்யார். எய்யாமை - அறியாமை.

61. முனிவு - வெறுப்பு: ஆகுபெயர். பருவருதல் - துன்பப்படுதல். கார்க்கு அதிர் - மேகத்தைக் கண்டு ஆரவாரிக்கும்.

62. குரு - நிறம். கிரகங்களனைத்தும் துருவனாற் பிணிக்கப்படுவதென்பது நூற்கொள்கை.

63. இருணடமாடலாவது - ஊனநடம் : செயிர் - குற்றம்.

64. கதி - மேலான நிலை. இகத்தல் - நீங்குதல்.

65. பழியும் புகழும் வினையால் வருவன. அப்புகழும் பழியும் பஞ்சாக்கரவன் பதத்து ஒழுங்குபட்டு நிற்கும் பெருநிலைக்கு ஊறுசெய்யா : ஆதலின் அவன் பதத்துற்று நில் என்க.

66. நீடுசெல் - நெடுந்தூரம் போ. அல்கல் - தங்காதே. இறத்தின் - இறத்தினின்றும். நிறவிற் காய்ந்தும் எடுப்பின் நயந்தும் : நிரனிறை. புல் - முதனிலைத் தொழிற்பெயர். பாரமாவது வினைப்பயனை நுகர்வித்தல்.

67. மாணும்வினை என்க. பிராரத்தவினை தாக்காதிருத்தற்கு உபாயங் கூறியவாறு.

68. ஐங்கலை - நிவிர்த்தியாதி பஞ்ச கலைகள். உளத்தை மயலில் விட்டனம்.

69. செருக்கை விட்டனம் : அதனால் உலகநிலைபற்றிப் பார்க்குமிடத்துக் கேடு அடைந்தோம் : அக்கேடே சிறந்த வாழ்க்கையாகக் கொண்டோம். ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் திருவடிப்பூசனை தொடங்கினோம் : இந்தத் தொடர்பை எவர் நீக்குவரென்க.

70. குஞ்சரம் - விளம்பழத்திற்கு வருவதோர் நோய் : சிந்தாமணியுரையில் நச்சினார்க்கினியார் இவ்வாறு கூறினர். தன் வயிறு என்பது விளம்பழத்தின் உள்ளிடம். விளக்கட்கனி - விளங்கனி. தன்புறம் என்புழி - தான் உள்ளிருப்ப அந்நோய் புறம். மேதினிக்கு - உருபு மயக்கம்.

71. பஞ்சாக்கரவன் நெடும்பதம் விரவுவ போதுவ ஈதென்ன அற்புதம். போக்கு - குற்றம் : போக்கறு பனுவல் என்றார் பனம்பாரனர்.

72. சொல்மாத்திரையில் வணங்குபவர்க்கும் வல்வினை இறும்.

73. மாலையது - இயல்பினையுடையது. பஞ்சாக்கரவன் ஆழிவேலை ஆக்கி வாவென்றருளினன்.

74. பருவமென்பது உயிர்க்கேயன்றி பஞ்சாக்கர வாண்டகைக் கில்லை. ஆதலின் நீ இப்பொழுது அவனை நினையின் அவனருள் உனக்கு வாய்த்திடும்.

75. கதி - பிறவி. புல்வினை - இழிவான தீவினை: வினைத்தொகையுமாம். அடுத்துப்புரட்டியது.

76. ஆரியன் - ஆசாரியன். கேவல நிலையினும் ஐந்தொழில் செய்து பக்குவப்படுத்திச் சகல நிலைக்குக் கொண்டுவந்து அச்சகல நிலையில் நாம் செய்த குற்றங்களையெல்லாம் நீக்கி நம்மைத் தாங்கும் பஞ்சாக்கரமூர்த்தி இன்னும் நம்மைத் தாங்கி மேனிலையிற் சேர்ப்பனெனனும் உண்மையை உணர்ந்தேன் என்றவாறு.

'பண்டிகந் திருளிற் பட்ட படர்பெரும் பிழையை நீயே
கண்டொரு செயலு மில்லாக் காலத்துக் கருணை வைத்துக்
கொண்டிடும் பருவ நோக்கிக் கோலமெய் யருளிற் றந்த
வண்டனிப் பிழையுள் வையா தளிப்பதின் றரிது போலும்'

என இவ்வாசிரியர் தணிகைப் புராணத்து அருளியதுங் காண்க.

77. பஞ்சாக்கர எந்தல் வைத்தான் வைத்தனன் வைத்தனன் என்க.

78. உலகினர் சிற்பரமென்று அறியார்: அதுவேயுமன்றி ஐந்தொழிற் பொருட்டுக்கொள்ளும் உருவத்தின் உண்மையும் அறியார்.

79. அநந்யம் - வேறன்மை. பொன் - சூரியன்.

80. துஞ்சதல் - நிலைபெறுதல்: பெருஞ்செல்வரென்றபடி. வேலர் - அரசர். கொன் - அச்சம். தென் - அழகு. தாமரை மலரின் அழகும் கெடுதற்குக் காரணமாகிய பஞ்சாக்கரவன் திருவடி.

81. கூசுதலாவது அப்பெருமானது உயர்வும் தமது இழிவும் நோக்கியவழி நிகழ்வது.

82. உற்றிலா எனக்குக் குறையுண்ட நெஞ்சு முதலியன அளித்தான்.

83. ஆரண மார்க்கம் - வேதாகமநெறி. அரவு - ஆகுபெயர். முயக்கு - முயக்கம். இடும்பைக் காரணம் - துன்பம் நுகர்தற்குரிய காரணத்தை.

84. இழுதை - பேதை.

85. இன்னுக்கு - துன்பம். உறவாற் பெயராது. இன்பம் நிறுவவும் இன்னுக்கு நீக்கவும் வல்லன் பஞ்சாக்கர நின்மலனே.

86. அல் மலம் - இருண்மலம். இறைவன் மலஞ்சார்ந்த உயிரோடு கலந்திருப்பினும் மலம் அவனைத் தாக்காதென்பது உவமை வாயிலாக விளக்கப்பட்டது.

87. கால் - வினைத்தொகை. அஷ்டமூர்த்தியாய் நிற்குமாறு கூறியது. கரவு இயல் சீர் அருள் - வெளிப்படாது மறைதல் இயலுகின்ற சிறப்பினையுடைய திருவருள்.

88. அடைவு - அடைதல். பரிபவம் - முன்னது வினைத்தொகை: பின்னது வியாகூலம்.

89. இப்பவம்போல் வாய்ப்புறின் பவமெழுகோடி யெடுப்பினும் என்னை என்க.

90. அருளிற் கலந்த நலத்தவர் சீவன்முத்தர். இறந்த - கழிந்த. சென்றே பயப்ப - பிராரத்தம். ஏறு நிலை - ஆகாமியம் சேராதநிலை.

91. துரும்பர் - போலி. அழுந்தின் அவியும் பதைப்பின் மலையாம்.

92. தீவினை நீங்க எண்ணுதலும், நல்வினை செய்ய நாடலும் வேண்டா:

93. நெஞ்சே உனக்குப் பகை நீயே. நீ முன்னர் ஈட்டிய வினைப் பயன்களை அவ்வவர் முன்னிலையாக பஞ்சாக்கரவன் கூட்டும்பொழுது.

94. நாடுவதெல்லாம் நற்பதம், கூடுவதெல்லாம் அடியார்குழாம், வீடுவதெல்லாம் அறிவிலர் சேர்க்கை.

95. கால் அகழ்தல் - கால் யாத்தலென்பதுபோல நின்றது. மலத்தை அடியோடு அறுக்கும். இச்செய்யுட் பொருளை 'என்னு லறியாப் பதந்தந்தா யான தறியா தேகெட்டே, னுன்னு லொன்றுங் குறையில்லை' என்னுந் திருவாக்கான் அறிக.

96. அடியார்க்கு நல்குரவும் செல்வமும் கூறியவாறு. சலம் - வஞ்சம்.

97. போதி - அரசமரம். சோடை - ஈண்டு ஆசைமிகுதி.

98. இரும்புபோன்ற மனத்தன் என்று கருதி. மலையை வளைத்தாற்போல. காப்பு - தடை.

99, உயிர்க்கும் இறைவற்குமுள்ள வேறுபாடு கூறுமுகத்தால் பஞ்சாக்கரமூர்த்தியின் பொருள் விளக்கியவாறு.

100. உளநின்று காணலாவது திரிவுகாட்சி. உளமொளித்தலாவது தெளிவுகாட்சி. இக்காட்சியின் இயல்பு சிவஞானமாபாடியத்து நன்கு விளக்கப்பட்டது. பழுது அறுத்தல் - குற்றம் நீக்குதல்.

முற்றிற்று.

ஜ வெளியீடு 14.

# பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி.

கும்பகோணம்
யதார்த்தவசனி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
1945.

துறைசை யாதீன வெளியீடு 14.

உ

சிவமயம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துத்
திராவிட மாபாடிய கர்த்தராகிய
ஸ்ரீ சிவஞான சுவாமிகள் மாணாக்கர்
ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்
அருளிச்செய்த

# பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி

ஷை ஆதீனத்து ௨௰-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்
கட்டளைப்படி

அவ்வாதீனத்து வித்துவான்
வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை
எழுதிய குறிப்புரையுடன்

கும்பகோணம்
யதார்த்தவசனி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
1945.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சாக்கரதேசிக ரந்தாதி.

## கட்டளைக் கலித்துறை.

பதிபசு பாசத்தைப் பாசம் பசுபதி யாக்கியொரீஇப்
பதிபசு வாகப் பசுபதி யாக்கிப்பின் னும்பயிற்றிப்
பதியெனத் தானாய்ப் பயிலுந் திருவா வடுதுறைசைப்
பதிவளர் பஞ்சாக் கரவனை யென்சொல்லிப் பாடுதுமே. (1)

பாடுதும் பஞ்சாக் கரவனை யென்று படர்தலொடுங்
கூடுவ தன்னவன் பாத மதுவந்து கூடுதலு
நீடுவ தின்ப மனவாக்குக் காய நிகழ்செயலற்
றோடுவ வாளாங் கிருப்பதல் லாற்பின்னை யொன்றில்லையே. (2)

ஒன்றில்லை யாக வுயிருள தாக வுருவங்கொண்டு
தென்றில்லை யாடி துறைசையிற் பஞ்சாக் கரவன்சென்று
நின்றில்லை யாதியென் றானின்ற யான்சென்று நின்றிறலு
நன்றில்லை தீயது மில்லைசொல் லாவொன்று நண்ணியதே. (3)

நண்ணிய பாசஞ் சடமா ணவமறி ஞனெனவே
கண்ணுவ தின்றுயி ரொன்று யுணர்த்துங் கதியறிவைத்
திண்ணிய பாச வறிவு பசுவறி வென்றுசெப்பி
யெண்ணுவ தென்னை யியம்பாய்பஞ் சாக்கர வின்குருவே. (4)

குருவா யருள லுயிர்க்கின்மை யாருங் குறிக்கொடிய
வருவா யருவுரு வாயுரு வாயவை தானெனநற்
பெருவான் பொருடன் பெரும்பெய ரேபெய ராகவந்த
வொருவாய்மை தன்னை நினையினு முள்ள முருகுவதே. (5)

உருகுங் கருணைப் பெருந்திற னோக்கி யுலைமெழுகாய்ப்
பருகுந் தணப்பற வானந்தத் தேறல் பமரமெனத்
திருகும் வினையின் றிருக்கறுத் தாண்டுதன் சேவடிக்கீழ்த்
தருகின்ற பஞ்சாக் கரவனொ டாடிய தாழ்குழலே. (6)

தாழ்கின்ற கூந்தன் மலர்சூட்டித் தையலர்த் தோயுமின்பத்
தாழ்கின்ற வென்னைத்தன் பாதத்தி லார்வ மளித்துளத்தைப்
போழ்கின்ற வைம்பொறி போழ்ந்துபஞ் சாக்கர பூரணன்மெய்
வாழ்கென்று சென்னி மலர்க்கைவைத் தானின்ப மல்கியதே (7)

மல்கிய சஞ்சிதக் காட்டை யெரிவாய் மடுத்துடலிற்
புல்கிய வின்பத்துன் பங்களெல் லாம்பின்பு பூப்பதின்றி
யல்கிய பஞ்சாக் கரதே சிகனரு ளாற்கவர்ந்து
நல்கிய வாய்மைக்குக் கைம்மாறு கண்டில னல்குதற்கே. (8)

நல்குந் தொழிறனக் கேயன்றி யில்லா நலத்தகைசேர்
பல்குந் துறைசைப்பஞ் சாக்கர தேவன் பணித்திடுங்கான்
மெல்குந் திறமெனக் குள்ளத னல்வினை கின்றவெல்லா
மொல்குந் திறமின்று காட்டினன் யானென தோடியதே. (9)

ஓடிய தாணவ முற்றது பாசகன் மங்களொத்த
வாடின பல்வகைத் தோற்ற மலரயன் மான்முதலோர்
வீடினர் செய்கை விளைந்தது போகம் வியன்றுறைசை
நீடிய பஞ்சாக் கரவன் முகிழ்த்த நிலாநகைக்கே. (10)

நகைக்கின்ற செங்கனி வாயு மெதிர்ந்தோர் நவைமுழுதுந்
துகைக்கின்ற பேரருட் பார்வையு மும்மலத் தொக்குவிடத்
தகைக்கின்ற சின்முத் திரையுந் தனிக்கரப் புத்தகமு
முகைக்கின்ற வாலென்னைப் பஞ்சாக் கரவனொண் பூங்கழற்கே. ()

கழற்கா லரவிந்தங் கைகூப்பப் பஞ்சாக் கரவனெங்கோ
னழற்கா லனைவந்து சாரலொட் டான்றனு வைப்படைப்பப்
புழற்கா லரவிந்தப் புத்தேளை நாடலொட் டான்புனவேய்ங்
குழற்கான வாயுற் கிடமினி யாதன்ன கொள்கையனே. (12)

கையப்பு மூவுல குண்டது கண்மல ரொன்றுண்டதா
லையப்பு வேலை யமலன்பஞ் சாக்கர வண்ணல்பொற்று
ணெய்யப்பு பாறயி ராட்டி வணங்கிய நேயரொன்று
மெய்யம் பிறவென வெல்லா மெடுத்து விழுங்கியதே. (13)

விழுங்கிக் கிடந்த வொளியறல் பார்த்து மிடையிருள்போ
லொழுங்கிக் கிடந்தவெ னுள்ளத் தொழிவுகண் டோங்கிருளு
மழுங்கக் கடைக்கணித் தாண்டான்பஞ் சாக்கர வண்ணலினிப்
புழுங்கக் கடவதொன் றில்லையெஞ் ஞான்றும் புணர்ப்பன்றியே.()

அன்றிய நீத்த மடுத்தான் சடைக்க ணடற்கெழுமா
னொன்றிய வோதை மடுத்தான் செவிக்க ணுலகமுற்றுங்
கன்றிய வால மடுத்தான் களத்துக் கருதியென்னை
வென்றியம் பாத மடுத்தான்பஞ் சாக்கர மெய்த்தவனே. (15)

தவமாய்த் தவம்புரி வானைத் தவப்பய னாய்க்கொடுக்கு
மவனா யிருக்கப்பஞ் சாக்கர மூர்த்தியை யாரறிவார்
நவமாத் தொழிற்கு வருமுருப் போலருண் ஞானநல்கிப்
பவமாய்க்க வந்த பவம்பரி யாமை யிருந்திடினே. (16)

இருந்திடிற் பஞ்சாக் கரவன் பதத்திடை யான்மலமு
மிருந்திடுஞ் சற்றெழி னாங்கே யெழுந்தினி நீயெனக்கு
விருந்தென வாய்ப்பெயு மீட்டு மிராமை விடுப்பினந்தோ
பொருந்திடு மெல்லா மவன்பெயர் பொள்ளென வோதுவதே. ()

ஒதுவ தாகிய பஞ்சாக் கரன்பெய ரொண்மறையின்
மீது வதிவது நட்போ டிகலை விளக்குவதும்
போதுவ தும்பின் புணர்வது மூன்றாய்ப் புணர்மயக்கங்
காதுவ துங்கழன் றுள்ளது மெல்லாங் கருதிடினே. (18)

கருதிடு மென்னைத்தன் னுள்ளே யிருத்துங் கதிப்பின்மலம்
பொருதிடும் போகப் புணர்ப்பா யிருக்கும் புரைதவத்தா
விருதிடு நாமமெய் தார்க்கிரு ளாயே யிருக்குமருள்
விருதிடும் பஞ்சாக் கரவன் விரைப்பூங் கழற்றுணையே. (19)

துணைமா முலையுமை காணச் சுடர்மணி யம்பலத்தே
யிணையா வருமின்றி யாடும்பஞ் சாக்கர வெந்தைபிரா
னணையா வெனையணைப் பான்பிற கேசெல்லு மாரருளே
புணையாப் பவக்கட லேற்றிய வாறற புதநெஞ்சமே. (20)

நெஞ்சே யுறுதி யறிந்திலை போலு நினைப்பினங்கே
யஞ்சே லெனநின் றருளும்பஞ் சாக்கர வண்ணலிரு
செஞ்சே வடியை யிகந்தய லேபுலன் சென்றுபற்றி
நஞ்சே யனைய வினைவழிச் சேற னயந்தனையே. (21)

நயந்தரு நல்லவன் தான்மகிழ் வாய்நல்ல வல்லநெஞ்சே
பயந்தரி னுங்கே பணிப்பா யறிந்தநின் பண்புநன்றே
வியந்துனக் குள்ள தருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருளோ
டியைந்தவை தாக்கா திருக்கறி யாதுட லாயிருந்தே. (22)

இருந்தேன் மனத்தி லளற்றிரை யாய்நல னேதுமிலேன்
பொருந்தே னடியார் குழாத்தைப் பொருந்துவல் புல்லியரைத்
திருந்தேன் றிருந்தும் வகைகளெல் லாஞ்செய்து நிற்கின்றதான்
மருந்தே யனையபஞ் சாக்கர தேவன் மலர்ப்பதமே. (23)

பதமலர் கண்டோ ரெழும்பக நிர்தி பதிகுறுகா
ரிதமருள் செங்கைகண் டோர்பிர மன்கை யெழுதப்படார்
கதமலை யிருரி போர்த்தருள் பஞ்சாக் கரவனுதன்
மதவிழி கண்டோர் தூரப்பர் மதவேள் மலர்க்கணையே. (24)

கணையுண்ட தேரு மிருளுண்ணு மாழியு மக்கணையும்
பிணையுண்ட தேரைப் பரிக்குஞ் சிலையும் பிறங்கவெல்லா
மணைவொன்ற வாக்கும் வலவனு மேங்க வசித்ததென்ப
னிணையொன்று மில்லாத் துறைசையிற் பஞ்சாக் கரவின்பமே. ()

இன்ப மிதுவெனப் பஞ்சாக் கரவ னிணைப்பதத்தி
லன்பிற் பிணைந்த வடியரல் லான்மற்றை யாரறிவார்
துன்பிற் பிணைவது கண்டுந் தொடர்ச்சியெல் லாஞ்சுகமா
வன்பிற் பிணைந்திடு மாலாகி யோரு மதித்தனரே. (26)

மதிப்பிக்கு மென்னைத்தன் பாதத்தை யாங்கே வயங்கிநிற்கு
முதிப்பிக்கு மன்னை யுறுசுவைத் தெள்ளமு தாயுகக்குங்
கதிப்பிக்கு மாணவ மாயைகன் மங்களின் கட்டறுக்கும்
பதிப்பிக்கும் பஞ்சாக் கரவன்றன் பாலெனைப் பாதங்கொண்டே.

கொண்டலங் கண்டமுங் கொக்கரைக் கூத்துங் குறுநகையு
மண்டிலங் கொண்டவிர் செஞ்சடைக் கற்றையும் வான்பிறையுந்
தண்டளிர்ப் பாதமும் பஞ்சாக் கரவன் றயங்கருளு
முண்டன கண்டவன் றேயெனை மீட்டு முமிழ்வின்றியே. (28)

இன்றேயெஞ் ஞான்று மொழியாத வின்பத் துறைபடிய
நன்றே யருளும்பஞ் சாக்கர நாத னளினபதத்
தன்றே விரவு நிலையறி யாதது போலழுந்தி
வென்றே விரவு மலமறி யாமை விடுத்தனமே. (29)

விடுத்தன மென்று பகர்ந்தத னல்விடு மோமலமு
மடுத்தன மென்று பகர்ந்தத னலன்று மோவருளு
மடுத்தருள் பஞ்சாக் கரவன் மலர்ப்பதத் தேயழுந்திக்
கெடுத்தென தியானெனுஞ் சேட்டைப் பகுப்புங் கெடினல்லதே.

அல்லவிர் கண்டனெண் டோளன் முக் கண்ண னழற்கரத்த
னெல்லுமிழ் மேனியன் பஞ்சாக் கரவ னெனக்கிரங்கிச்
சொல்லிய ஞானந் துவந்துவம் பாற்றித்தொக் காருயிராய்ப்
புல்லிய ஞான மிரண்டுமல் லாற்புக லொன்றில்லையே. (31)

இல்லை யிறைவனென் பார்க்கு மிறையென்ற மாத்திரையா
னல்ல வருளும்பஞ் சாக்கர நாத னளினபதஞ்
சொல்ல நினைய விறைஞ்சப்பெற் றூர்க்குத் துகட்கிழங்கைக்
கல்வி யருள்வதி னையுறல் வேண்டுங்கொல் காசினிக்கே. (32)

காசினி மீது பிறந்தவர் தம்முளுங் காவிரிசூழ்த்
தாசிறு நாட்டுற் பவித்தவர் தூய ரவர்களுள்ளு
மாசறு பஞ்சாக் கரவன் வதியா சூரினுற்றோர்
தேசுறு தூய ரவருளுந் தூயர்சென் றேத்துநரே. (33)

ஏத்துநர் தம்மு ளிருந்துதன் பாதத்தை யேத்துவிக்குஞ்
சாத்துநர் தம்மு ளிருந்துதண் போதலர் சாத்துவிக்கும்
பாத்துநர் தம்மு ளிருந்துநட் போடிசல் பாத்துவிக்கு
மாத்தன்பஞ் சாக்கர வண்ண லருளு மருளிதுவே. (34)

இதுபுரி வேனென வொன்றனை மேற்கொண் டிடைவிடுக்கு
மதுபுரி வேனென் றடுக்கு மயர்க்குமற் றுனுயிரிற்
கதுவிய தன்மை கரிசறுத் தாண்டபஞ் சாக்கரவன்
முதுநல முற்றுமுற் றுதுமுற் றின்புந் திளைத்திடுமே. (35)

திளைத்திடுந் தன்மையிற் றுனு யிருக்குந் திகழவருள்
விளைத்துமற் றேனை யிடங்களில் வேறு யிருக்கும்விண்ணின்
முளைத்தெழு வெண்மதிக் கண்ணியன் பஞ்சாக்கரவன்முன்னோன்
வளைத்தழும் பாளன்மெய்ம் மாதவர் போற்றிய மாதவனே. (36)

மாதவம் யாதும் புரிந்தறி யேன்வண் மலர்ப்பதத்துப்
போதலர் நீரும் பொழிந்தறி யேனெதிர் போதலுமே
வீதனை சோலை விரைசூழ் துறைசைப்பஞ் சாக்கரவன்
றீதற வாண்ட விரகினை யென்னென்று செப்புவதே. (37)

செப்பற் கரியன சிந்தைக் கரியன சேர்பொருளோன்
றெப்பற் கரியன வுள்ளே விரவியொண் மாமதிபோற்
பப்புற்ற வாணவம் பாற்றி வருவன பண்பினர்க்கு
வைப்பிற் பொலிவன பஞ்சாக் கரவன் மலரடியே. (38)

அடியோ ரிரண்டி னுலகொரு மூன்று மடக்கியதால்
வடிவாளி வார்சிலை வையகந் தாங்கு மதுகையதான்
முடியா முதல்வன்பஞ் சாக்கர மீளி முழுமணித்தேர்ப்
படியோ ரிறையு முருளிட மில்லாப் பரப்பினதே. (39)

பரப்புற்ற தேர்க்கமை பாகனும் பாகற் பயந்தவனு
மிரப்புற்று நாடவெட் டாதிறந் தோங்கின வின்பவெள்ளம்
விருப்புற்ற வன்பர்க் கருளும்பஞ் சாக்கர மெய்ப்பொருடன்
குருப்பெற்ற வேணி முடியுங் குரைகழற் பாதமுமே. (40)

பாதங்க ணான்கும்வைத் தானவை நல்கும் பதங்கள் வைத்தான்
வேதங்க ணான்கும்வைத் தான்விரை யாக்கலி வீறவைத்தான்
பூதங்க ளாதிவைத் தான்புரை யாத புகர்மலத்தி
னேதங்கள் பாறவைத் தானெழிற் பஞ்சாக் கரவிறையே. (41)

இறைவிற் றிருந்துபஞ் சாக்கர நாத னிறைசெலுத்து
முறைநாடி னேனை முறைமுறை யாங்கொண் முகிழ்ப்பவற்றுண்
மறையா யிருப்பதொன் றின்றாக வெங்கும் வதிந்தறிந்து
பெறயா வருக்கு மவையவ ராலுய்க்கும் பெற்றியனே. (42)

பெற்றி யொருவர்க் கறிவரி யான்பெரு வள்ளன்மையை
யுற்றறிந் தான்மற்றை வள்ளன்மை வள்ளன்மை யாயுறுமே
பற்றிக லின்றிப் பயன்விழை யாதுபஞ் சாக்கரன்போன்
முற்று மளிப்பவர் யார்முடி வானவர் தம்முளுமே. (43)

உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியர் தாமுலகி
னள்ளும் பரிசின ரேனும் வினைவழி நண்ணகிலார்
தெள்ளும் பெரும்புகழ்ப் பஞ்சாக் கரவன் றிருவடியை
விள்ளும் பரிசின ரெல்லாம் விடுத்தும் விடுக்கலரே. (44)

விடுக்கலர் பற்றினொ டார்வங் கதியை விரும்புகிலார்
தொடுக்கலர் பஞ்சாக் கரவன் பதத்துச்சொன் மாமலர்கள்
கொடுக்கல ராவி யுடல்பொரு ளாங்குக் கொழுஞ்சுவைத்தேன்
மடுக்கல ரன்பரைப் போனடிப் பார்சகென் வருவதுவே. (45)

வருவதும் போவது மாயுழல் வீர்வம்மின் வந்தனிரேற்
றருநிதி சிந்தா மணிகாம தேனுவுந் தந்தருளும்
பொருவறு போக மெலாந்தரும் போக மெலாம்வெறுத்தா
லொருவரு முத்தியு நல்கும்பஞ் சாக்கர வொள்ளொளியே. (46)

ஒளிக்கு முயிர்களுக் குள்ளே மலத்தி னொளித்தவுயிர்க்
களிக்குந் தனுகர ணாதி யளித்த வவற்றொடருள்
விளிக்கு முளைத்த வுயிரினைப் பஞ்சாக் கரவிமலன்
றெளிக்கும் பளிக்கி னிழல்போ லுடலந் திரிவிக்குமே. (47)

விக்கு ளிருமன் முயலகன் குட்டம்வெப் புப்பெருநோய்
தொக்கு வயிற்றுறு நோய்சூலை நோயொடு சூழ்ந்தடினு
நக்கு நலத்தகு பட்சாக் கரவ னளினபதம்
புக்கு விடினங்க ணெல்லாமின் பாகப் பொலிதருமே. (48)

பொலிந்தன மன்னோ தணியுந் தணிந்தன வேபொலியுங்
கலந்தன மன்ற தணக்குந் தணந்தன வேகலவுஞ்
சலந்தரு வையத் தியற்கை தனைக்குறித் தாழன்மினோ
நலந்தரு பஞ்சாக் கரவனை நாடி நயமின்களே. (49)

கள்ளுண்ட வாளிச் சுவைபுண்ட கார்முகக் காளையுடல்
விள்ளுண்ட கண்ணன் பஞ் சாக்கரநாதன் விரைமலர்த்தா
ணள்ளுண்ட நெஞ்சுண் டவன்பெயர் பூண்டநன் னாவுமுண்டா
லெள்ளுண்ட வல்வினைக் கஞ்சுவ தின்றினி யெய்தினுமே. (50)

எய்தடு முப்புரத் தெண்ணிய மூவ ரெரிபிழைப்பச்
செய்தவன் பஞ்சாக் கரவன் றிருவடித் தாமரைக்கீழ்ப்
பெய்தடச் சூழ்ந்த பெயரா வினையைப் பிழைப்பித்துய்தி
வெய்தரு ளுந்திறத் தென்னினி வேறு விளம்புவதே. (51)

விளம்புவ தென்னினிப் பஞ்சாக் கரவன்வெல் பூங்கழற்றா
ளுளம்புகு வோர்கட் குறுவினை யாது முறாதுமெய்யே
களம்படு செந்தீக் கதுவி னிழலுடல் காயுங்கொலோ
வளம்படு புற்போ லணைந்துட னீங்கிய தாருயிரே. (52)

உயிர்தா முயிர்க்கு முடலினல் லாதின்பத் துன்பமொன்றும்
பயிலா பிறவுட லெங்கு மிருந்துமப் பண்பினவாற்
செயிர்தீர்ந்து பஞ்சாக் கரவன் றிருவடி சென்றுபற்றின்
மயரா ருடல மிருந்தும் பயனென் மருவுவதே. (53)

மருவுவ தொன்றை யரிதுபஞ் சாக்கர வான்பொருளி
னருள்வழி யன்றி யொருவனு மொன்றை யரிதுமன்ற
வொருவனு மொன்றைமற் றொன்றை யுறலுமெல் லாமவன்றன்
றிருவடி யேயென்று சிந்திகண் டாய்மலந் தேய்ந்தறுமே. (54)

அற்றாலு மென்னை புறத்தே பயில்பொரு ளானவெலாங்
கற்றாலு மென்னை யரிதா கியகல்வி காசில்புகழ்
பெற்றாலு மென்னைபஞ் சாக்கர நாதன் பிறங்கருளி
னுற்றாலும் யானென தென்னுஞ் செருக்கொழி யாவிடினே. (55)

விடுக்குங் கணையெறு மூர்த்தி மனைவி விலங்கலந்தோட்
படுக்குங் கலையு மொருபொரு ளைகொண்ட பண்ணவன்சீர்
கொடுக்குந் துறைசைப்பஞ் சாக்கர நாதன் குலப்புகழைத்
தொடுக்கும் பரிசுபெற் றாம்பெறு மாறின்று சூழ்பவமே. (56)

பவம்பல கோடி வருமாறு நாளிற் பயிற்றியிட்ட
வவம்பல கோடியும் பஞ்சாக் கரனைப் புகழ்ந்தறுத்தாந்
தவம்பல கோடிய சிந்தையா தாணினைந் தேதணந்தா
நிவந்தபல் கோடி யுடற்றீங் கிறைஞ்சுபு நீத்தனமே. (57)

நீத்தனங் காணி னிகழுஞ் சுகமென தியானிலவப்
பாத்தனங் காணிற் படுவதொன் றில்லைபஞ் சாக்கரவன்
பூத்தசெந் தாமரைத் தாளுங் கரமும்புன் மூரனிலா
யாத்தசெவ் வாயு முகமுமெல் லாமின்பத் தேயெழுமே. (58)

எழுந்தது பஞ்சாக் கரவன் றிருவரு ளெங்குமதில்
விழுந்ததென் புல்லறி வாங்கே யருளாய் மிளிர்ந்தனவா
லழுந்திய பாசமென் றெண்ணிய மாயை யருவினையுந்
தழுந்தாம் வேறினி யில்லையின் பொன்றே தலைப்பட்டதே. (59)

பட்டது பாசமென் பாரது மாயும் படியறியா
ரொட்டிய தாரரு ளென்பா ரஃதுறு முண்மையெய்யா
ரட்டில கெல்லா மளிக்கும்பஞ் சாக்கர வண்ணலருண்
முட்டறு ஞான முகிழா வுளம்படை மூர்க்கர்களே. (60)

மூர்க்கரைப் போல முதுமா தவர்க்கு முனிவுசெய்து
பார்க்குளெஞ் ஞான்றும் பருவரு வேலையும் பார்த்தருளாய்
கார்க்கதிர் தோகை யெனவடி யார்கள் கலந்தெதிர்நின்
றார்க்குந் துறைசைப்பஞ் சாக்கர நாத வருட்குருவே. (61)

குருமணி மோலித் தருவன் பிணித்த கொழுங்கயிற்றி
னொருவுதல் கோளுக் கிலையெத் திசையி னுறினுமவ்வா
றருண்மணி யாகிய பஞ்சாக் கரவ வடியெனுநின்
றிருவடி நீங்காத் திறம்யாங் கிருப்பினுஞ் செய்தருளே. (62)

அருணட மாடிய பஞ்சாக் கரவன் முன் னைந்தொழில்கொண்
டிருணட மாடிய வம்பல வாண னெனக்களித்த
திருநடங் காணிற் செயிரை விழுங்கித் திசைவிழுங்கி
யுருநட மாடவெ னுள்ளம் விழுங்கி யுகந்ததுவே. (63)

உகந்தவ னெல்லாப் பொருட்டும்பஞ் சாக்கர வுத்தமனை
யகந்தனிற் சற்றே யடுப்பிற் கதிகளெல் லாமடுப்ப
ரிகந்திடிற் சற்றே யெழுநான்கு கோடி நரகும்வல்லே
புகுந்துபல் லூழி பெயர்ந்து மெழாது புழுங்குவரே. (64)

புழுங்கும் பெரும்பழி வந்தாலு மென்னின்பம் போர்த்துளத்தை
விழுங்கும் பெரும்புகழ் வந்தாலு மென்வினைப் பாலதென்று
மழுங்கும் படியதன் றேயருட் பஞ்சாக் கரவன்பதத்
தொழுங்குப் பெருநிலைக் கூறதெற் றுலின்லை யுற்றுநில்லே. (65)

நில்லென்று செந்தீ நிரையி னிறுவினு நீடுசெல்லல்
சல்லென்று தீய திறத்தி னெடுப்பினுங் காய்ந்துநயந்
தல்லொன்றி வாளாங் கலையாது பஞ்சாக் கரவனருள்
புல்லொன்று பாரங் கழிப்பதென் றேயின்பம் பூணுகவே. (66)

பூணுங் கடவுளைப் பஞ்சாக் கரவனைப் பூண்டுகொண்டு
காணுங் கடனால் வருவினை மாய்க்குங் கடனதன்றி
மாணுங் கரிசுடற் சேண்ற வினையை மறுப்பவுழுந்
தேணுங் கெடேன்மின் குறுகா தொழியா வெறுழுடைத்தே (67)

உடைத்தைதங் சலையும் பரானந்த வின்ப முறப்பயிற்றி
விடைத்தங்கு மேவு மொழியா வினையின் விறன்முருக்கித்
துடைத்தங் கருளும்பஞ் சாக்கர நாதன் சுடர்ப்பதத்து
ளடைத்தங் கிருப்ப வறியா துளமயல் விட்டனவே. (68)

விட்டனம் யானென தென்னுஞ் செருக்கை விடுத்தலொடுங்
கெட்டன மத்தகு சேட்டினை யேகிளர் வாழ்க்கையெனைப்
பட்டனம் பஞ்சாக் கரவன் பதமலர்ப் பூசனையே
தொட்டன மிந்தத் தொடர்பினை யாவர் துளக்குநரே. (69)

துளக்கும் வினையுட னிற்பத் தொகுமுயிர் வாங்கலெவ்வா
றளக்கற் கரியபஞ் சாக்கர நாதனென் றையுறன்மின்
வளக்குஞ் சரந்தன் வயிற்றுட் செறிவினை வாங்கிக்கொண்டு
விளக்கட் கனிதன் புறம்விடல் கண்டன மேதினிக்கே. (70)

மேதினி மீதும் விரவுவ தீவினை யென்சிரத்தும்
போதுவ வீதென்ன வற்புதம் போக்கின் மறைமுடிவு
மாதவர் நெஞ்சு மலையான் மடந்தை வளைக்கரமு
நீதியிற் றைவரும் பஞ்சாக் கரவ னெடும்பதமே. (71)

பதந்தர வல்லவன் பஞ்சாக் கரவன் பசுபதிநல்
விதந்தரு மீச னிறையெட் டுருவத்த னெண்குணத்தான்
சுதந்திர முள்ளவ னென்றுசொன் மாத்திரை சூழ்ந்தவர்க்குங்
கதந்தரு வல்வினை காவத நூறு கடந்திறுமே. (72)

இறுகின்ற மாலைய தாக்கை யிதுதனைப் பேணிக்கொண்டே
தெறுகின்ற வல்வினை வாயழி வேனைச்சென் றேத்துநர்பா
லுறுகின்ற பஞ்சாக் கரவனவ் வூழ்வினை தன்னடியா
லறுகின்ற தாக்கியஞ் சேலிங்கண் வாவென் றருளினனே. (73)

அருள்கின்ற காலமெஞ் ஞான்றும்பஞ் சாக்கர வாண்டகைக்கா
மிருள்கின்ற வாணவத் தேகிடந் தெய்த்தின்பத் துன்பந்துய்த்துத்
தெருள்கின் றிலாவுயிர்க் கேசென்று சேரும் பருவங்கண்டாய்
மருள்கின்ற வன்னெஞ்ச மேமதி யாயின்று வாய்த்திடுமே. (74)

வாய்த்த துடலிது பஞ்சாக் கரவன் மலர்ப்பதத்தை
யேத்துத லாலென் றிறுமாந் திருந்தவெ னெண்ணமெல்லாந்
தீத்தெறு பஞ்சாய்ச் சிதையப் பலகதி சென்றுசென்று
பூத்திடு மாறு புரட்டிய தாற்புல் வினையடுத்தே. (75)

அடுத்த வினைக்கினி யஞ்சேன்பஞ் சாக்கர வாரியன்முன்
விடுத்திருண் மூழ்கும் பிழையிற் பருவம் விளைத்துடலங்
கொடுத்தக்கும் விட்டிது காறும் விளைத்தகுற் றங்களுநீத்
தெடுத்தவ னின்னு மெடுப்பனென் றுண்மையை யெண்ணினனே.

எண்ண மெலாந்த னிணையடி யேறவைத் தானியம்பும்
வண்ண மெலாந்தன் பெயராக வைத்தனன் வாருடலிற்
பண்ண லெலாந்தன் பணியாக வைத்தனன் பண்ணவர்க்கு
பூண்ணல்டஞ் சாக்கர வேந்த லருளுமி தற்புதமே. (77)

அற்புத மேனிய னுந்திருச் சிற்றம் பலவனறற்
புற்புதம் போலுருக் கொண்டபஞ் சாக்கர பூரணனைச்
சிற்பர மென்றுள்ள வாறறி யார்செயிர் தீர்தொழிலைந்
துற்பவ மாக்கு முருவத்தி னுண்மையு முன்னலரே. (78)

உன்னிய காலை யுறவா யினிக்குஞ்சற் றேயயர்ப்பி
னன்னிய மாக வகன்றே கவற்று மனனியமாய்
மன்னிய பஞ்சாக் கரவன் வயங்கரு ளோங்கியக்காற்
பொன்னியல் காலைப் புரையிருள் போன்மலம் பொன்றுவதே. ()

பொன்றஞ்சு முன்றி னுடையவ ராகப் பொலிதரினு
மின்றுஞ்சு வேலரை யஞ்சுவர் வேலர் வெருவுவராற்
கொன்றஞ்சு தேவரைத் தேவரு மஞ்சுவர் கோகனதத்
தென்றஞ்சு பஞ்சாக் கரவன் றிருவடித் தேசினர்க்கே. (80)

தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசிநின் றாடிய வம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்பலரைக்
கூசிநின் றேத்திய மாதவத் தார்க்கென் குறையுளதே. (81)

குறையுண்ட நெஞ்சும் பழியுண்ட செய்கையுங் குற்றமெலா
முறையுண்ட வாக்கு மெனக்களித் தானுற் றுளாரெவர்க்கு
நிறையுண்ட வாக்கும் புகழுண்ட செய்கையு நீடுமின்பப்
பொறையுண்ட நெஞ்சு மளித்தான்பஞ் சாக்கர பூரணனே. (82)

பூரணன் பஞ்சாக் கரவனென் செய்யும் புலைநெஞ்சமே
யாரண மார்க்கம் விடுத்தே யரவக லல்குனல்லார்
வாரணி கொங்கை முயக்கே யமர்ந்து வருந்திடும்பைக்
காரண மேதொகுத் தாயது கூட்டுங் கடனவற்கே. (83)

அவனென் றுலகம் புகழும்பஞ் சாக்கர வாண்டகையை
யெவனென்று முன்னி யிகந்தனை யாலெ னிழுதைநெஞ்சே
பவன்றவன் சங்கரன் பார்ப்பதி பாகன் பரன்சிவனு
முவனென்று தேறி யொழியா யொழியா வுறுபகையே. (84)

உறுபகை யாளர் துவன்றினு நட்பின ரோங்கினுமென்
முறுகிய வின்ப மடுப்பதுண் டேற்பகை யான்முருக்கப்
பெறுவதொன் றில்லையின் னுங்குள தேற்பெய ராதுறவா
னிறுவவு நீக்கவும் வல்லன்பஞ் சாக்கர நின்மலனே. (85)

நின்மலன் பேரறி வாளன்பஞ் சாக்கர நிர்க்குணன்மற்
றன்மலத் தாழ்புல் லறிவுடை யேனுட னுயமர்ந்து
தன்மலர்ப் பாதந் தலைத்தந்துந் தாழ்விலன் சார்களங்க
வின்மதி வாழும் வெளிக்கென்னை தாழ்வு விரவுவதே. (86)

விரவிய வான்வளி தீவிரி நீர்வியன் பாரவையாய்ப்
பரவிய பான்மதி யாய்க்கதிர் கால்பகல் வானவனாய்ப்
புரவிய லாருயி ராய்நின்ற பஞ்சாக் கரப்பொருளைக்
கரவியல் சிரருண் மாருது காணுங் கடனரிதே. (87)

அரிதுதன் பாதத் தடைவா ருயிர்க்கென வன்றுதொட்டுக்
கரிசறு மூர்த்தி தலந்தீர்த்த மாயமர் காரணனை
விரிபுகழ்ப் பஞ்சாக் கரவனை மெய்யன்பி னுளத்தே
பரிபவம் பெற்றார் பெறார்மலந் தான்செய் பரிபவமே. (88)

பவமெழு கோடி யெடுப்பினு மென்னைபஞ் சாக்கரவ
னவநவ மாகப் புணருந் தொறுமின்ப நல்குநின்ற
தவமலி யிப்பவம் போல்வாய்ப் புறினிந்தத் தன்மையின்றி
யவமுறி னிந்தப் பவமுங் கடுக வவிதனன்றே. (89)

நன்றே யடுப்ப தருளிற் கலந்த நலத்தவர்க்கு
மின்றே யிறந்த பவங்களி னீட்டு மிருவினையுட்
சென்றே பயப்ப வெவையவை பஞ்சாக் கரச்செம்மரு
னின்றே புணர்த்தும் புணர்த்தினு மேரு நிலைவைக்குமே. (90)

வைப்பா யிருக்கும்பஞ் சாக்கர நாதன் மலர்ப்பதமே
துப்பா யழுந்தின் மலைநேர் வினையு மெரித்துருப்ப
ரொப்பா யவியும் பதைப்பிற் கடுகு முயர்மலையா
மிப்பா லனநெஞ்ச மேநினக் காம்வழி யெய்துகவே. (91)

எய்துவ திங்கிடை யொன்றில்லை பஞ்சாக் கரவிறைவ
னுய்திற நாடிமுன் செய்வினை யூட்டி யொழிக்குங்கண்டாய்
னைதிறந் தீவினைக் கெண்ணு நல்லதென் றென்றனையே
செய்திற நாடலும் வேண்டா வவனடி சிந்திநெஞ்சே. (92)

நெஞ்சே நினக்கு நெடும்பகை நீயந் நிலையறியா
தஞ்சே லெனவருள் பஞ்சாக் கரவ னவையவரா
லெஞ்சாது நீமுன்ன ரீட்டிய கூட்டி யிடும்பொழுது
நஞ்சே யெனமுன் னிலைபகை யாகவு நாடினையே. (93)

நாடுவ தெல்லா மருளும்பஞ் சாக்கர னற்பதமே
கூடுவ தெல்லா மவனடி யார்தங் குழாத்திடையே
வீடுவ தெல்லா மறிவிலர் சேர்ச்சியென் றுய்விடினே
நீடுறும் வேறின்ப முண்டேனும் வேண்டா நெடுநிலத்தே. (94)

நிலங்கா லகழ்ந்து நெடுமா லறியா நிகரில்பத
மலங்கா லறுக்கும்பஞ் சாக்கர நாதன் மலியருளா
னலங்கா முறுவெனக் கெண்மையின் முற்றுநன் றுய்த்தளித்தான்
கலங்காமை யின்மையின் மற்றதற் கேற்குங் கடனிலனே. (95)

இலம்பட லாவது பஞ்சாக் கரவ னெழிலருளி
னலம்புரி வோர்க்குல கத்துறு செல்வங்க ணண்ணுவதே
குலம்புரி செல்வங்க ளாவன கோதி லடியவர்க்குச்
சலம்புரி வையகத் தாறிலம் பாடு தழைப்பனவே. (96)

தழைக்கின்ற போதி வனமுஞ்செந் தாடொழு காலமிதென்
றழைக்கின்ற வன்பர்கள் சோடையுங் கண்டா ரகமுழுதுங்
குழைக்கின்ற பஞ்சாக் கரவன்மெய்க் கோலமுங் கோதிறவ
மிழைக்கின்ற சூழலு மென்மன நீங்கா திருப்பனவே. (97)

இருப்பன நெஞ்சன்பல் லூழியெல் லாம்பெயர்ந் தாலுமெம்பால்
விருப்பின னாத லரிதெனப் பஞ்சாக் கரவிமலன்
பொருப்பினை வாங்கிற் றெனவெனை யாண்ட புதுமையினாற்
கருப்படு மாறினிச் செல்லவொட் டானருட் காப்பிடுமே. (98)

இடுவதெல் லாமவன் றன்குண மென்குண மேற்றல்வினை
யடுவதெல் லாமவன் றன்குண மென்குண மாக்கன்மெய்ம்மை
தொடுவதெல் லாமவன் றன்குண மென்குணந் தோல்வியிவை
படுவன வாயினும் பஞ்சாக் கரவன் பரிவுளனே. (99)

உளநின்று காணி னொளிப்பனங் கேய னுளமொளிப்பின்
வெளிநின்று காணப் படுவன் விரிகடற் றெள்ளமிழ்துந்
தெளிவுண்ட தேறலுங் கைப்பவன் சிந்தை யெலாமினிப்பன்
பளகறுத் தாண்டபஞ் சாக்கர நாத பசுபதியே. (100)

பஞ்சாக்கரதேசிகரந்தாதி முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# பஞ்சாக்கரதேசிகரந்தாதி.

## குறிப்புரை.

---

1 பதி பசு பாசத்தை - அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி பசு பாசமென்னும் மூன்றனையும், பாசம் பசு பதி ஆக்கி - ஐந்தொழிலியற்றுங்கால் எய்திய சகலாவஸ்தையில் பாசமும் பசுவும் பதியுமாகிய முறையில் முன்பின்னாக நிற்கச்செய்து, பசு - ஆன்மா, ஒரீஇ - அந்நிலையின் நீங்கி, பதி - பதிநெறியில், ஆக - ஒழுகியவழி, பசு - ஆன்மாவை, பதி ஆக்கி - பதியின் தன்மை எய்தச் செய்து (தூயதாக்கி), பின்னும் பயிற்றி - அந்த சீவன்முத்தி நிலையில் நிற்குங்காலும் அந்நிலையினழுவாதிருக்கச் செய்து, (இவ்வகையால்) தான் - அவ்வான்மா, பதியென ஆய்ப் பயிலும் - பதிபோலச் சிவத்தன்மை முழுதும் விளங்கப் பெற்றுப் பயிலுதற்கு ஏதுவாகிய, திருவாவடுதுறைசைப் பதி - திருவாவடுதுறை என்னும் திருப்பதியில், வளர் - எழுந்தருளியிருக்கின்ற, பஞ்சாக்கரவனை - ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்தியை, என் சொல்லிப் பாடுதும் - எவ்வியல்பினனென்று சொல்லிப் பாடுதும் என்பதாம்.

முன்பின்னாக நிற்கச்செய்தலாவது - பாசம் முற்படப் புலப்பட்டும், பசு அதனால் தொழிற்பட்டும், பதி தொழிற்படுத்தியும் நிற்குமாறு செய்தல். ஆக - காரணப்பொருட்டு. பாசம் பசு பதியாக்குதலாவது கேவலநிலையினின்றும் சகலநிலை யெய்துவித்தல். பதி பசுவாக என்றது ஆன்மாப் பதிநெறியில் ஒழுகிநிற்றலை யுணர்த்திற்று. பசுபதி யாக்கி என்புழி ஆக்கச்சொல் அத்துவ சத்தியால் ஆன்மாவைத் தூயனாக்கிப் பதியின்றன்மை யெய்துவித்தலை யுணர்த்திற்று. தான் பதி யென ஆய் என்புழி ஆக்கச் சொல் ஆன்மாப் பரமுத்தியில் சிவானந்தானுபவ நிலையில் உறைந்து நிற்றலை உணர்த்திற்று.

ஆக்கி ஆக்கிப் பயிற்றித் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக்கரவனெனவும், ஆய்ப் பயிலும் திருவாவடுதுறைசைப் பதிவளர் பஞ்சாக்கரவனெனவும் முடிக்க.

2. படர்தல் - நினைத்தல். அன்னவன் பாதம் கூடுவது என்க. இன்பம் நீடுவது. நிகழ் செயல் - அவற்றிற்கு நிகழும் செயல்கள்.

3. ஒன்று இல்லையாக - தனக்கென உருவம் ஒன்றும் இல்லையாகவும், உயிர் உளதாக - உயிரென்பது ஒன்று இருப்பதை யுதேசித்து. ஒன்றில்லையாதி யாகிய பஞ்சாக்கரவன் உருவங் கொண்டு சென்று நின்று. இல்லையாதி - தற்போத முனைப்பு இல்லையாவாயாக. நின்றயான் - தற்போத முனைப்புடன் நின்ற யான். சென்று நின்று இறலும் - அவன் உபதேசித்த நெறிவழிச் சென்று நின்ற தற்போத முனைப்பு ஒழிதலும். சொல்லா ஒன்று - சிவானந்தம். ஒன்றில்லையாக என்பதற்கு அகதுவிதச் சொற்கு ஒன்றென்றும் பொருளில்லையாம்படி என்று பொருள் கோடலுமாம்.

4. பாசம் சடமானதால், பாசவறிவு என்பது யாது? உயிர் ஆணவம் நீங்கியவழி நானென்று கருதுமாறின்மையின், பசுவறிவு என்பது யாது? என்றும் ஒருநிலையில் நின்று உணர்த்துவது பதியறிவு ஒன்றேயாம். இங்ஙனமாக அப்பதியறிவைப் பாசஞானம் பசுஞானம் என்பவற்றோடு ஒருங்கு சேர்த்துப் பதிஞானமென்பது யாது? அருளே வேண்டும் என்பதாம். இந்த ஞானத்தினியல்புகள் சிவஞானபாடியத்திற் கூறப்பட்டன.

5. உயிர்க்கு அநுக்கிரகம் செய்வது சிவமேயன்றி ஏனையுயிர்களல்ல என்பதை யாரும் தெரிந்து பிழைக்க. பெருவான் பொருள் - சிவம். அப்பொருட்கு வாசகம் ஸ்ரீ பஞ்சாக்ஷரம். அருவாயும் அருவுருவாயும் உருவாயும அவைதாமெனவும் வந்தேயன்றி ஸ்ரீ பஞ்சாக்ஷர தேசிக மூர்த்தியாகவும் எளிவந்த வாய்மை காண்க.

6. தாழ்ந்துழல் நோக்கி உலை மெழுகு போல உருகும்: பமரம் - வண்டு: பிரமரமென்னும் வடமொழித்திரிவு. தணப்பற - நீக்கமின்றி. தேறலைப் பருகும். திருக்கு - குற்றம்.

7. ஆர்வம் - பேரன்பு. மெய் - சிவமாக.

8. சஞ்சிதம் - அநுபவிக்க வாராமற் குவிந்து கிடக்கும் கன்மத் தொகுதி. உடலிற் புல்கிய இன்பத் துன்பங்கள் - பிராரப்த கன்ம பலன்கள். சஞ்சித வினைத்தொகுதியைத் தன்திரு நோக்கா லெரித்தலும், பிராரப்தவினைப் பயனைத் தான் ஏற்றுக்கோடலுமாகிய இவற்றின் விரிவைச் சிவஞான மாபாடியத்திற் காண்க. கைம்மாறு நல்குதற்குக் கண்டிலனென்க. பூப்பது தொழின்மேனின்றது.

9. நலத் தகை - அன்மொழித்தொகை. நலத் தகையாகிய பஞ்சாக்கர தேவன். அவன் பணித்திடுங்கால் எனக்கு மெல்குந் திறமுள்ளது. மெல்குதல் - மென்மையாதல். ஒல்குதல் - குழையும். யான் எனது - அகங்கார மமகாரம். ஒழியாது தனித்தனி கூட்டுக.

10. உற்றது - சகசமாயுற்றதாகிய. ஆணவம் ஒழியாது. பாசமாகிய கன்மங்கள். பல்வகைத் தோற்றம் வாடின - அண்டச முதலாயின ஒழிந்தன. தோற்றம் இன்மையின் அயன் மால் முதலானோர் செய்கை வீடினர். நகைக்கு - உருபுமயக்கம்.

11. எதிர்ந்தோர் - எதிர்ப்பட்டோர். நவை - குற்றம். துகைத்தல் - கெடுத்தல். தொக்கு - சம்பந்தம். தகைத்தல் - தடுத்தல். உகைத்தல் - செலுத்தல். துறைசையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்தியின் திருவருளை வியந்தவாறு.

12. தமது திருவடித்தாமரைகளைத் தொழுதால் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் இயமனை நம்பாற் சாரவொட்டார். அழற்காலன் - அழலைப்போலுங் காலன். தநு - உடல். பழல் - உட்டுளையுடைய. கால் - நாளம். அரவிந்தப் புத்தேள் - பிரமன். இங்ஙனம் படைப்புக் கடவுட்கும் அழிக்கற் கடவுட்கும் தத்தஞ்செயல்செய்ய இடமில்லையாக, திருமாற்கும் தன்செயல் செய்ய இடமில்லையென்பதாம். காணம் - பாட்டு. ஆயன் - கண்ணன். ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் அவ்விதஞ் செய்யும் தன்மையுடையார் என்க.

13. கையம்பு ஈண்டுத் திருமால். அப் பிரான் உலகுண்டது கிருஷ்ணாவதார நிகழ்ச்சி. கண்மலர் ஒன்று - நெற்றி விழி. ஐ அம்பு வேளை உண்டது - மன்மதனை உண்டது. அம்பு - நீர். எய்யம் - அறியோம். 'எய்யாமையே அறியாமை' என்பது தொல்காப்பியம். அம்புகண் என்பன ஒவ்வொன்றே யுண்டன: திருவடியோ வணங்கிய அன்பர் பிறவற்றைச் சிறிதுமறியோமென்னுமாறு எல்லாவற்றையும் எடுத்து விழுங்கியதென்க.

14. ஒளி அறல் - ஒளியின் நீக்கம். மிடைதல் - நெருங்குதல். ஒழுங்கி - ஒழுங்குபட்டு. உள்ளத்து ஒழிவு - தற்போத நீக்கம். ஓங்கிருள் - ஆணவம். மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருளாதலின் ஓங்கிருளெனப்பட்டது. மழுங்குதல் - கூறில்லாதொழிதல்: அஃதாவது அது நித்தப்பொருளாயினும் கேடு விளையாதிருத்தல். என்ஞான்றும் அவனைப் புணர்தலன்றி வேறு புழுங்கக்கடவது யாதுமில்லை.

15, அன்றுதல் - பகைத்தல். நீத்தம் - கங்கைநீர்ப் பெருக்கு. சடைக்கண் நீத்தமடுத்தான். அடல் - கொல்லுதல். ஓதை - ஓசை. செவிக்கண் மடுத்தான். களத்தில் ஆலத்தை மடுத்தான். அவைபோல என்னையும் கொடிய பொருளாகக் கருதித் திருவடிக்கண் மடுத்தானெனச் சமற்காரமாகக் கூறினர்.

16. கொடுக்கும் அவன் - தவப்பயனைக் கொடுக்கும் அவனென்க, 'செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பானும்' கூறியவாறு. தொழிற்கு வரும் நவமா உரு - நவந்தரு பேதம். பவம் - பிறவி. பவம் - திருவுருத்தோற்றம். அத்திருவுருவினிடத்து அன்பு செலுத்தாதிருப்பின் யாரும் அப்பெருமானை அறியாரென்றவாறு.

17. யான் பஞ்சாக்கரவன் பதத்திடை இருந்திடின் மலமும் சேட்டைபுரியாது இருந்திடும்: சற்றுத் தற்போதமெழின் மலமும் உடனே எழுந்து நீ எனக்கு விருந்தென்று சொல்லித் தன்வாய்ப் பெய்யும். அத்துன்பங்கண்டு மீட்டும் அவனடிக்கீழ் இராமல் ஒழியின், ஐயோ எல்லாத் துன்பங்களும் என்பாற் பொருந்திடும். ஆதலின் அப்பெருமானது திருநாமத்தை ஓதுக. ஓதுகவென்பது 'கொள்ளப்படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே' என்பதுபோல நின்றது.

18. ஓதுவது - ஓதப்படுவது. மறையின்மீது வதிவது - வேதத்தின் நடுநாயகமா யிருப்பது, நட்டையும் இகலையும் விளக்குவது. நீங்குவதும் பின் புணர்வதும் முன்பு சேர்ந்த மயக்கத்தை யொழிப்பதும் அது நீங்கியவழி எஞ்சி நிற்பதுமாகிய வெல்லாம் அவன் பெயரே என்க. இது ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் திருநாமப் பொருளை விளக்கியவாறு.

19. பூங்கழற்றுணை கருதிடும் என்னைத் தன்னுள் இருத்தும்: மலம் கதிப்பின் என்னோடு பொருதலைச் செய்யும் போகப் புணர்ப்பாயிருக்கும். புரை - சிறப்பு. இருது இடு நாமம் - பருவம். தவத்தால் பருவமடையாதவர்கட்குக் கழற்றுணை இருளாயே இருக்கும். அருள் விருதினையுடைய.

20. அணையா - தன்னைச் சேராத. அணைப்பான் - பானீற்று வினையெச்சம். பிறகே செல்லும் - தன்பின் செல்லுகின்ற. புணை - மரக்கலம். நெஞ்சினை நோக்கிக் கூறியவாறு.

21. அங்கே - நினைத்த அவ்விடத்தே. செஞ்சேவடி - மிகச் சிவந்த திருவடி: 'செஞ்செவ்வே'னென்றாற் போல. இகந்து - நீங்கி.

புலனைச் சென்று பற்றி. சேறல் - செல்லுதல். நயத்தல் - மகிழ்தல், நெஞ்சே நீ யுனக்கு உறுதி யின்னதென்பதனை யறிந்திலை போலும்.

22. நெஞ்சே நல்லன வந்தால் மகிழ்வாய்: நல்லன வல்லாதன வற்றை நின் றீவினைக்குப் பயனாக அவன் கொடுத்தால் நடுங்குவாய் நீ செய்தவினைக் கீடாக உள்ளதை அருள்புரியும் பஞ்சாக்கர மூர்த்தி யோடு இயைந்து உடலாயிருந்து வியந்து அவை தாக்காது இருக்க அறி யாமல் மகிழவும் பனிக்கவும் அறிந்த நின் பண்பு நன்றாயிருக்கின்றது.

23. அளறு - நரகம். நரகத்திற்கு இரையாய் இருந்தேன். அற் பரைப் பொருந்துவேன். இருந்தேன் - வினைப்பெயர். மருந்து - அமிர்தம்.

24. எறழ் - வலிமை. பகட்டூர்தி - இயமன். குறுகார் - அடை யார். கதமலை - யானை: அன்மொழித்தொகை. மதவிழி - வலியவிழி. திருவடி இயமனையும், செங்கை பிரமனையும், நுதல்விழி மன்மதனையும் ஒறுத்தமையின் அவற்றைத் தரிசித்தோர் முறையே இயமபுரம் சேரா மையும், பிரமன் கையால் எழுதப்படாமையும், மன்மதபாணம் வருத்தா மையும் பெறுவரெனப்பட்டது.

25. கணை - திருமால். அது உண்ட தேர் - கீழும் மேலுமுள்ள உலகங்கள். இருள் உண்ணும் ஆழி - சூரிய சந்திரர். தேரைப் பரிக் கும் சிலை - மகாமேரு. வலவன் - பிரமன். ஏங்க - நம்மால் ஆவது யாதுமில்லையே யென ஏங்குமாறு. அசித்தது - சிரித்தது.

26. வன்பு - வலிமை.

27. மதிப்பிக்கும் - நினைத்தற்படி செய்யும். அன்பை உதிப்பிக்கு மென்க. கதிப்பிக்கும் - கதியிற் செல்லுமாறு செய்யும். என்னைப் பதிப்பிக்கும்.

28. கொண்டல் - மேகம். மண்டலம் - வட்டம். என்னை மீட்டும் உமிழ்வின்றி உண்டன.

29. நளினம் - செந்தாமரை மலர். கேவல நிலையிற் சிவத்தை யறி யாது மலத்தில் அழுந்திக் கிடந்தது போலச் சுத்த நிலையின் மலத்தை யறியாது சிவத்தில் அழுந்திக்கிடந்தமை கூறியவாறு.

30. அடுத்தனம் - அடைந்தோம். எனது என்னும் மமகாரத்தைக் கெடுத்து. கெடினல்லது மலமும் விடுமோ அருளும் அண்முமோ.

31. அல் - இருள். எல் - ஒளி. துவந்துவம் - இன்பத் துன்பங்கள். ஞானம் இரண்டு - அபர பர ஞானங்கள்.

32. சொல்ல நினைய இறைஞ்ச - திரிகரணத்தாலும் வழிபட. துகட் கிழங்கு - இங்கே ஆணவமாகிய கிழங்கு. கல்லுதல் - தோண்டுதல். நாதன் அருள்வதின் என்க. காசினிக்கு - உருபுமயக்கம்.

33. ஆசு - குற்றம். இறுதல் - ஒழியும். வதிதல் - எழுந்தருளியிருத்தல். ஆரூர் - திருவாவடுதுறை.

34. பாத்துநர் - பகுத்துணர்வோர். ஆத்தன் - வடமொழித்திரிவு. அவனன்றி யாதும் நிகழா தென்பது உணர்த்தியவாறு.

35. உயிரின் தன்மை கூறியவாறு. ஒன்றனைச் செய்யத் தொடங்கி இடையில் அதனை விடுத்து வேறொன்றனைச் செய்யத் தொடங்கும்; அதனையும் மறந்துவிடும். இவ்வித வுயிர் ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் முதுநலம் உற்றாலும் முடிவுறக் கொள்ளாது. ஆயினும் பூர்ண வின்பத்தை யனுபவிக்கும். முதுநலம் - ஈண்டு ஆனந்தம்.

36. அருள் விளைத்துத் தானுயிருக்கும் என்க. வளைத் தழும்பாளன் என்பது காஞ்சிப் புராணத்தா லறியப்படுவது.

37. வீ - பூ. ததைதல் - நெருங்குதல். விரகு - உபாயம்.

38. மாமதிபோற் பப்புற்ற வாணவம் பாற்றி என்பதை 'மன்னுமிருளை மதிதுரந்த வாறு' எனவரும் வெண்பாவா னறிக. வைப்பு - நிக்ஷேபநிதி.

39. வடிவாளி அடக்கியது. மதுகை - வலிமை. சிலை - வில்: ஈண்டு மேரு. மீளி - வலியோன். படி - பூமி. தேராகிய படி என்க.

40. பாகன் - பிரமன். பாகற் பயந்தவன் - திருமால். குருநிறம். முடியும் பாதமும் அவ்விருவரும் இரப்புற்று நாடவும் எட்டாது கடந்து உயர்ந்தன என்க. அவ்விருவரும் அகங்காரத்தால் நாடத் தொடங்கினாராதலின் கண்டிலரென்பது. 'இன்பவெள்ளம் விருப்புற்ற அன்பர்க் கருளும் பஞ்சாக்கர மெய்ப்பொருள்' என்பதனாற் பெறப்படும்.

41. பாதங்கள் நான்கு - சரியாதி. பதங்கள் நான்கு - சாலோகாதி. வேதங்கள் நான்கு - இருக்காதி. விரையாக்கலி - ஆணை. பூதங்

களாதி - பூத முதலாகிய தத்துவங்கள். புரையாத - இழிந்த. புகர் மலம் - குற்றமாகிய ஆணவமலம். ஏதங்கள் - கேடுகள்.

42. இறை - இறைமை. பஞ்சாக்கரநாதன் அரசு செலுத்தும் முறையை நாடின் வினை முறையினைத்தும் முறையாதலில்லை. முகிழ்ப்ப - இனித் தோன்றுவன: அவை பிராரத்தம்.

43. முற்செய்யுளின் இறைமைகூறி இச்செய்யுளின் வள்ளன்மை கூறுகின்றார். பற்று இகல் - விருப்பு வெறுப்பு. விழையாது - விரும்பாமல்.

44. உள்ளும் புறமும் ஒருதன்மைக் காட்சியர் - சிவஞானிகள். உலகில் நள்ளும் - உலகத்திற் பொருந்தியிருக்கும். விள்ளுதல் - நீங்குதல். பரிசு - தன்மை. பஞ்சாக்கரவன் திருவடியை அடைந்த சீவன் முத்தர் உலகியலிற் பொருந்தி நின்றாலும் அவர் வினைவழி நண்ணகிலார்: அவன் திருவடியை அடையாத ஏனையோர் எல்லாம் விடுத்தனராயினும் வினைவழி விடுக்கலர். 'உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியருக், கெள்ளுந் திறமேது மில்' என்பது திருவருட்பயன்.

45. ஆர்வம் - கண்ட பொருள்மேற் செல்லும் பற்றுள்ளம். பொருள் என்பது ஈண்டு வினை.

46. வருதல் - பிறத்தல். போதல் - இறத்தல். இவை இப்பொருட்டாதலைப் 'போக்கு வரவு புரிய' என்பதனுன் அறிக. தரு - கற்பதரு. நிதி - சங்கநிதி முதலியன. பொரு - உவமை. ஒருவு அரும் முத்தி - பிரிதல் இல்லாத வீடு.

47. கேவலம் சகலம் சுத்தமென்னும் அவத்தை மூன்றினும் பஞ்சாக்கர விமலன் உயிர்கட்கு அருள்புரியுமாறு கூறுகின்றது இச்செய்யுள். உளைத்த - வருந்திய. தெளிக்கும் - தெளிவிக்கும்.

48. விக்குண் முதலிய நோய்கள் சூழ்ந்து வருத்தினும் நக்குப் பஞ்சாக்கரவன் திருவடி புகின் அவை யெல்லாம் இன்பமாகப் பொலியும்.

49. மன்ற - நிச்சயமாக 'மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்' என்பது தொல்காப்பியம். கலவும் - சேரும். சலம் - வஞ்சம். உலகியல் கூறித் தெருட்டியவாறு.

50. கள்ளுண்ட வாளி - மலர். சுவை யுண்ட கார்முகம் - கரும்பு. அவற்றைக் கைக்கொண்ட காளை - மன்மதன். அவனது உடலை விள்ளுண்ட கண்ணனாகிய பஞ்சாக்கர நாதன். வினைக்கு அஞ்சாமைக்குக் காரணம் கூறியவாறு.

51. எண்ணிய மூவர் - சுபுத்தி, சுசீலன், சுதன்மன். திருவடித் தாமரைக்கீழ் என்னைப் பெய்து என்க. வெய்து - விரைந்து.

52. நிழலுடல் - சாயாசரீரம். அளம் - உப்பளம்.

53. உயிர்கடாம் பயிலா என்க. அப்பண்பின - இன்பத்துன்பம் பயிலாப் பண்பின. செயிர் - குற்றம். மயரார் - மயங்கார்.

54. அருள்வழியன்றி மருவுவது அரிது : ஒருவனாலும் அரிது.

55. பொருளானவெலாம் அற்றாலும் என்னை? அருளின் உற்று. ஆலும் - பெயரெச்சம்.

56. ஒரு பொருள் - திருமால். பவம் பெறுமாறு இன்று.

57. திரிகரணத்தாலும் செய்த தீங்குகள் நீங்குமாறு கூறுகின்றது. பஞ்சாக்கரனைப் புகழ்ந்து நாவிற் பயிற்றியிட்ட அவம் பலகோடியும் அறத் தாம்: சிந்தைய - சிந்தையிலுள்ள தீங்குகள் : வினையாலணையும் பெயர். கோடிய - பெயரெச்சம். அவன் தாளை நினைந்து சிந்தையிலுள்ள தீங்குகளைத் தணந்தாம். இறைஞ்சி உடற்றீங்கு நீத்தனம்.

58. நீத்தனம், பாத்தனம் - வினையெச்சமுற்று.

59. எங்கும் எழுந்தது. அதில் புல்லறிவு விழுந்தது. அருளாய் மிளர்ந்தன. பாசங்களென்று எண்ணப்பட்ட மாயை கன்மங்கள். தழுந்தாம் - தழுவுந்தாம்.

60. மூர்க்கர் என்பார் என்பார் : மாயும்படி அறியார் : அஃதுறும் உண்மை எய்யார். எய்யாமை - அறியாமை.

61. முனிவு - வெறுப்பு: ஆகுபெயர். பருவருதல் - துன்பப்படுதல். கார்க்கு அதிர் - மேகத்தைக் கண்டு ஆரவாரிக்கும்.

62. குரு - நிறம். கிரகங்களனைத்தும் துருவனாற் பிணிக்கப்படுவதென்பது நூற்கொள்கை.

63. இருணடமாடலாவது - ஊனநடம் : செயிர் - குற்றம்.

64. கதி - மேலான நிலை. இகத்தல் - நீங்குதல்.

65. பழியும் புகழும் வினையால் வருவன. அப்புகழும் பழியும் பஞ்சாக்கரவன் பதத்து ஒழுங்குபட்டு நிற்கும் பெருநிலைக்கு ஊறுசெய்யா : ஆதலின் அவன் பதத்துற்று நில் என்க.

66. நீடுசெல் - நெடுந்தூரம் போ. அல்கல் - தங்காதே. திறத்தின் - திறத்தினின்றும். நிறவிற் காய்ந்தும் எடுப்பின் நயந்தும் : நிரனிறை. புல் - முதனிலைத் தொழிற்பெயர். பாரமாவது வினைப்பயனை நுகர்வித்தல்.

67. மாணும்வினை என்க. பிராரத்தவினை தாக்காதிருத்தற்கு உபாயங் கூறியவாறு.

68. ஐங்கலை - நிவிர்த்தியாதி பஞ்ச கலைகள். உளத்தை மயலில் விட்டனம்.

69. செருக்கை விட்டனம் : அதனால் உலகநிலைபற்றிப் பார்க்குமிடத்துக் கேடு அடைந்தோம் : அக்கேடே சிறந்த வாழ்க்கையாகக் கொண்டோம். ஸ்ரீ பஞ்சாக்கரநாதன் திருவடிப்பூசனை தொடங்கினோம் : இந்தத் தொடர்பை எவர் நீக்குவரென்க.

70. குஞ்சரம் - விளம்பழத்திற்கு வருவதோர் நோய் : சிந்தாமணியுரையில் நச்சினார்க்கினியார் இவ்வாறு கூறினர். தன் வயிறு என்பது விளம்பழத்தின் உள்ளிடம். விளக்கட்கனி - விளங்கனி. தன்புறம் என்புழி - தான் உள்ளிருப்ப அந்நோய் புறம். மேதினிக்கு - உருபு மயக்கம்.

71. பஞ்சாக்கரவன் நெடும்பதம் விரவுவ போதுவ ஈதென்ன அற்புதம். போக்கு - குற்றம் : போக்கறு பனுவல் என்றார் பனம்பாரனார்.

72. சொல்மாத்திரையில் வணங்குபவர்க்கும் வல்வினை இறும்.

73. மாலையது - இயல்பினையுடையது. பஞ்சாக்கரவன் அழிவேலை ஆக்கி வாவென்றருளினன்.

74. பருவமென்பது உயிர்க்கேயன்றி பஞ்சாக்கர வாண்டகைக் கில்லை. ஆதலின் நீ இப்பொழுது அவனை நினையின் அவனருள் உனக்கு வாய்த்திடும்.

75. கதி - பிறவி. புல்வினை - இழிவான தீவினை: வினைத்தொகையுமாம். அடுத்துப்புரட்டியது.

76. ஆரியன் - ஆசாரியன். கேவல நிலையினும் ஐந்தொழில் செய்து பக்குவப்படுத்திச் சகல நிலைக்குக் கொண்டுவந்து அச்சகல நிலையில் நாம் செய்த குற்றங்களையெல்லாம் நீக்கி நம்மைத் தாங்கும் பஞ்சாக்கரமூர்த்தி இன்னும் நம்மைத் தாங்கி மேனிலையிற் சேர்ப்பனெனலும் உண்மையை உணர்ந்தேன் என்றவாறு.

‘பண்டிகந் திருளிற் பட்ட படர்பெரும் பிழையை நீயே
கண்டொரு செயலு மில்லாக் காலத்துக் கருணை வைத்துக்
கொண்டிடும் பருவ நோக்கிக் கோலமெய் யருளிற் றந்த
வண்டனிப் பிழையுள் வையா தளிப்பதின் றரிது போலும்’

என இவ்வாசிரியர் தணிகைப் புராணத்து அருளியதுங் காண்க.

77. பஞ்சாக்கர ஏந்தல் வைத்தான் வைத்தனன் வைத்தனன் என்க.

78. உலகினர் சிற்பரமென்று அறியார்: அதுவேயுமன்றி ஐந்தொழிற் பொருட்டுக்கொள்ளும் உருவத்தின் உண்மையும் அறியார்.

79. அநந்யம் - வேறன்மை. பொன் - சூரியன்.

80. துஞ்சுதல் - நிலைபெறுதல்: பெருஞ்செல்வமொன்றபடி. வேலர் - அரசர். கொன் - அச்சம். தென் - அழகு. தாமரை மலரின் அழகும் கெடுதற்குக் காரணமாகிய பஞ்சாக்கரவன் திருவடி.

81. கூசுதலாவது அப்பெருமானது உயர்வும் தமது இழிவும் நோக்கியவழி நிகழ்வது.

82. உற்றிலா எனக்குக் குறையுண்ட நெஞ்சு முதலியன அளித்தான்.

83. ஆரண மார்க்கம் - வேதாகமநெறி. அரவு - ஆகுபெயர். மூயக்கு - மூயக்கம். இடும்பைக் காரணம் - துன்பம் நுகர்தற்குரிய காரணத்தை.

84. இழுதை - பேதை.

85. இன்னாங்கு - துன்பம். உறவாற் பெயராது. இன்பம் தரு வவும் இன்னாங்கு நீக்கவும் வல்லன் பஞ்சாக்கர நின்மலனே.

86. அல் மலம் - இருண்மலம். இறைவன் மலஞ்சார்ந்த உயிரோடு கலந்திருப்பினும் மலம் அவனைத் தாக்காதென்பது உவமை வாயிலாக விளக்கப்பட்டது.

87. கால் - வினைத்தொகை. அஷ்டமூர்த்தியாய் நிற்குமாறு கூறியது. கரவு இயல் சீர் அருள் - வெளிப்படாது மறைதல் இயலுகின்ற சிறப்பினையுடைய திருவருள்.

88. அடைவு - அடைதல். பரிபவம் - முன்னது வினைத்தொகை : பின்னது வியாகூலம்.

89. இப்பவம்போல் வாய்ப்புறின் பலவெழுகோடி யெடுப்பினும் என்னை என்க.

90. அருளிற் கலந்த நலத்தவர் சீவன்முத்தர். இறந்த - கழிந்த. சென்றே பயப்ப - பிராரத்தம். ஏறு நிலை - ஆகாமியம் சேராதநிலை.

91. துரும்பர் - போலி. அழுக்கின் அவியும் பதைப்பின் மலையாம்.

92. தீவினை நீங்க எண்ணுதலும், நல்வினை செய்ய நாடலும் வேண்டா:

93. நெஞ்சே உனக்குப் பகை நீயே. நீ முன்னர் ஈட்டிய வினைப் பயன்களை அவ்வவர் முன்னிலையாக பஞ்சாக்கரவன் கூட்டும்பொழுது.

94. நாடுவதெல்லாம் நற்பதம், கூடுவதெல்லாம் அடியார்குழாம், வீடுவதெல்லாம் அறிவிலர் சேர்க்கை.

95. கால் அகழ்தல் - கால் யாத்தலென்பதுபோல நின்றது. மல த்தை அடியேயாடு அறுக்கும். இச்செய்யுட் பொருளை 'என்னு லறியாப் பதந்தந்தா யான தறியா தேகெட்டே, னுன்னு லொன்றுங் குறையில்லை' என்னுந் திருவாக்கான் அறிக.

96. அடியார்க்கு நல்குரவும் செல்வமும் கூறியவாறு. சலம் - வஞ்சம்.

97. போதி - அரசமரம். சோடை - ஈன்ற ஆசையிருள்.

98. இரும்புபோன்ற மனத்தன் என்று கருதி. மலையை வளை, தாற்போல. காப்பு - தடை.

99, உயிர்க்கும் இறைவற்குமுள்ள வேறுபாடு கூறுமுகத்தால் பஞ்சாக்கரமூர்த்தியின் பொருள் விளக்கியவாறு.

100. உளநின்று காணலாவது திரிவுகாட்சி. உளமொளித்தலாவது தெளிவு காட்சி. இக்காட்சியின் இயல்பு சிவஞானமாபாடியத்து நன்கு விளக்கப்பட்டது. பளகு அறுத்தல் - குற்றம் நீக்குதல்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

யாழ்ப்பாணத்து

மயில்வாகனப்புலவர்

இயற்றிய

# புலியூர்யமகவந்தாதி.

இது

சுன்னாகம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை

செய்த

உரையுடன்,

மயிலிட்டி,

சு. நல்லையாபிள்ளையால்

தமது

வச்சிர யந்திரசாலையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபானு ௵ ஆனி ௴.

இதன் விலை சதம் ௨௫.

## ஆக்கியோன்பெயர்.

நெய்யார்ந்த வாட்கைப் பரராச சேகரன் பேர்சிறுவி
மெய்யாக நல்ல கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த
வையாவின் கோத்திரத் தான்மயில் வாகனன் மாதவங்கள்
பொய்யாத வாய்மைப் புலியூரந் தாதி புகன்றனனே.

---

## முகவுரை.

இந்த யமகவந்தாதி சிதம்பரம் என்னுந் திவ்விய சேஷத்திரத்தின்மேற் செய்யப்பட்டதாதலினாலும். இது வரையும் ஒருவராலும் அச்சிடப்படாமற் காலந்தோறுங் கரலிகிதங்களால் வழுப்பட்டுப் பெரும்பான்மையோர்க்குப் பிரயோசனப்படாமையாலும். சைவ* பாடசாலை மாணாக்கர்கள் அவசியம் படித்தற்குரிய ஒரு புராதன நூலாதலினாலும், இந்நூலை யாம் அச்சிடத் தொடங்கினோம். இதனை அறிந்த இங்குள்ள பாடசாலை உபாத்தியாயர்களுள்ளே சிலர் "உரையோடு அச்சிட்டாலன்றி இந்நூல் எவர்க்கும் பயன்படாது" என்று எம்மைத் தடுத்து உரையோடு அச்சிடும்படி வேண்டிக்கொண்டார்கள். நாமும் அவர் வேண்டுகோளுக்குடன்பட்டு, ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயராகிய ஸ்ரீமத். குமாரசுவாமிப்பிள்ளை அவர்களைக்கொண்டு அதி விரைவில் உரை எழுதுவித்து மூலத்துடன் அதனையுஞ் சேர்த்து அச்சிட்டோம். அவசியத்தில் எழுதி அச்சிட்டமையாற் சாவதானமாக ஆராய்ந்து கொள்ளச் சமயம் வாய்க்கவில்லை. யாவராயினும் வழுக் காண்பவர்கள், அவ்வழுக்களை எமக்குக் குறித்து அனுப்புவாராயின், இரண்டாம் பதிப்பிலே திருத்தி வெளிப்படுத்துவோம்.

மூ. ந.

சித்திரபானு ௵
ஆனி ௴ ௪௩௨

கணபதிதுணை.

# புலியூர்யமகவந்தாதி.

## மூலமும் உரையும்.

---

காப்பு.

கற்பகங் காக்குங் கவுரிபங் காளன் கருதரிய
கற்பகங் காளன் புலியூரந் தாதி கதிதருசங்
கற்பகங் காநதி செம்மல்செம் முக்கட் கயமுகத்துக்
கற்பகங் காணெமைக்கொண்டேபுகல்வித்துககாப்பதுவே.

இதன்பொருள். கற்பு அகம் காக்கும் கவுரி பங்காளன் - கற்பினைத்தன்னுள்ளே சாக்கின்ற பார்ப்பதி பங்கரும்,— கருத அரிய கற்பகங்காளன் - எண்ணரிய கற்பகால வெல்லையிலே [அழிந்த பிரமவிட்டுணுக்களுடைய] உடலின் முழுவெலும்பினையுடையருமாகிய நடேசருக்குரியதாகிய,— புலியூர் அந்தாதி - [நான்பாடத்தொடங்கும்] புலியூரந்தாதி என்னுமிப் பிரபந்தத்தை,— கதி தரு சங்கற்ப கங்காநதி செம்மல் - [தன்னிடத்தேமூழ்கிய ஆன்மாக்களுக்கு] மோக்ஷத்தைக் கொடுக்கும் நியமத்தையுடைய கங்காநதிக்குப்பிள்ளையும்,— செம் முக்கண் கயமுகத்து கற்பகம் - செம்மையாகிய மூன்றுகண்களையும் யானை முகத்தையுமுடைய [விநாயகருமாகிய] கற்பகமே,— எமை கொண்டு புகல்வித்து - எம்மைக்கொண்டு பாடுவித்து,— காப்பது - காப்பதுவாகும் என்றவாறு. காண் - அசை.

நூல்.

[டையார்
பூவா ரலங்கலம் பொற்கொன்றை வேணியர் பொன்னு
பூவா ரலங்கலந் தாரெனு மேற்றினர் போதமன்றிப்
பூவா ரலங்கல மந்தமைக் கண்டார் பொருகணிச்சிப்
பூவா ரலங்கலங் கைப்புலி யூரர் புகலெமக்கே

இ-ள். பூ ஆர் அலங்கல் அம் பொன் கொன்றை வேணியர் - பொலிவையுடைய ஆத்திமாலையையும் அழகிய பொன்போன்ற கொன்றைமாலையையுந் தரித்த சடையை யுடையரும்,— பொன்னுடையார் பூவார் அலம் கலந்தார் எனும் ஏற்றினர் - இலக்குமியையுடையரும் பூமிதேவியையுடையரும் [பலராமாவதார

த்திலே] கலப்பைப்படையைப்பொருந்தினவருமாகிய விட்டு ணு என்னும் இடபத்தையுடையரும்,— போதமன்றிப்பூவார்- ஞானத்தையன்றி [அஞ்ஞானத்தைப்] பூவாதவரும்,— அல் அங்கு அலமந்த மை கண்டர் - இருளும் அவ்விடத்துத் [ஒவ் வாதுதோற்றுச்] சுழலப்பெற்ற கருமையாகிய கழுத்தையு டையவரும்,— பொரு பூ ஆர் அலங்கல் கனிச்சி கை பு லியூரர் - பொருகின்ற கூர்மையையும் நிறைந்த பிரகாசஞ் செய்தலையுமுடைய மழுவைத்தரித்த கையையுடைய புலியூ ரருமாகிய சிவபெருமான்,— எமக்கு புகல் - எமக்குப் புகலி டம் [ஆவர்] எ-று. அம் - சாரியை. (க)

புகமந் தரங்கொடு வேலையி னூட்டும் புலவரைவெம்
புகமந் தரங்கொடு வந்தநஞ் சுண்ட புனிதனைச்சம்
புகமந் தரங்கொ ளரங்கஞ் செயும்புலி யூரனைநம்
புகமந்த ரங்கொடுங் காவினை போலப் புரியனெஞ்சே.

இ-ள். மந்தரம் கொடு வேலையில் புக நாட்டும் புலவரை- மந்தரமலையை வலைவாகிய சமுத்திரத்தில் [மத்தாகப்] புகு ம்படி நாட்டிய தேவர்களை,— வெம்புகமம் தரம் கொடு வ ந்த நஞ்சு உண்ட புனிதனை - கோபிக்கின்ற நிறைவுதானே வாயாகக் கொண்டுவந்த நஞ்சினையுண்ட அநாதி மலமுத்த ரும்,— சம்புகம் அந்தரம் கொள் அரங்கம் செயும் புலியூ ரனை - நரிகளை [வாதவூரருக்காக] ஆகாயத்திற்பாய்கின்றகுதி ரைகளாகச்செய்த புலியூருமாகிய சிவனை,— நம்புக - நம் பக்கடவை,— மந்தர் அங்கு ஒடுங்காவினைபோல புரியல்- மந்தர்களுடைய அவ்விடத்தே ஒடுக்கம் பெறாத வினைகளைப் போல [உள்ளவினைகளைச்] செய்யாதொழிக,— நெஞ்சே - ம னமே எ-று. (உ)

புரியாத வன்பிற் பிரியா வவுணர் புகுந்திருக்கும்
புரியாத வன்பற் பொடிபடுத் தோனுர பூதரமுப்
புரியாத வன்றொழு தென்புலி யூர்புக ழாரையருள்
புரியாத வன்பத மெய்யன்பி னூற்புணர்ப் பாய்மனமே.

இ-ள். புரியாத வன்பின் பிரியா அவுணர் புகுந்திருக்கும் புரி- [நல்லவர்களால்] விரும்பப்படாத வன்றொழிலினின்றும் நீங்காத அசுரர்கள் புகுந்திருக்கின்ற முப்புரங்களையும்,— ஆதவன் பல் - சூரியனுடைய பற்களையும்,— பொடிபடுத் தோன் - பொடியாக்கினவரும்,— உரம் பூதரம் முப்புரி யா தவன் தொழு - மார்பாகிய மலையிலே முப்புரிநூலையுடைய

யதுகுலத்தவராகிய விஷ்டுணுவும் வணங்குகின்ற,— தென் புலியூர் புகழாரை அருள் புரியாதவன் - [தம்முடைய] அழகிய புலியூரைப்புகழ்ந்து பேசாதவருக்குக் கிருபைசெய்யாதவருமாகியசிவனுடைய,— பதம் மெய் அன்பினால் புணர்ப்பாய் மனமே - பாதங்களை மெய்யன்பினாலே [நின்னிடத்திற்] புணர்த்தக்கடவாய் மனமே எ-று. (௩)

பாயசங் கண்டு பரியாக்கி யத்தபத் தர்க்கினிய
பாயசங் கண்டு நிகர்புலி யூர பகையைவெல்லு
பாயசங் கண்டு கரத்தாற் கரியவ பாழ்வினைக்குப்
பாயசங் கண்டொடா தென்னை யாள்க பராபரனே.

இ-ள். பாய் அசம் கண்டு பரி ஆக்கி அத்த - பாய்கின்ற ஆட்டுக்கடாவைக்கண்டு வாகனமாக்கிய முருகக்கடவுளுக்கு பிதாவே,— பத்தர்க்கு இனிய பாயசம் கண்டு நிகர் புலி யூர - அடியவர்களுக்கு இனிய பாற்சோற்றினையும் கற்கண்டினையும் நிகர்த்திருக்கின்ற புலியூரரே,— பகையை வெல் உபாய - பகைகளை வெல்லும் உபாயத்தை யுடையவரே,— சங்கு அண்டு கரத்தாற்கு அரியவ - சங்குபொருந்திய கையையுடைய விஷ்டுணுவுக் கரியவரே,— பராபரனே - பராபரரே,— பாழ் வினை குப்பாயம் சம் கண் தொடாது எனை ஆள்க - பாழாகிய தீவினை என்னும் போர்வையைக்கொண்டு தோற்றுகின்ற பிறவியிற் சம்பந்தப்படாமல் என்னை ஆளக்கடவீர் எ-று. (௪)

பரசெம் மலைநிக ரும்புலி யூர பராபரதா
பரசெம்ம லைம்முக நாரிபங் காள பரிக்குமங்கைப்
பரசெம் மலவினை யுந்தெறு சூலப் படையவெனப்
பரசெம் மலமன மேகதி யேயும் பலமதற்கே.

இ-ள். பர - பரரே,— செம் மலை நிகரும் புலியூர - செம்மையாகிய [மாணிக்க]மலையை நிகர்த்த புலியூரரே,— பராபர - பராபரரே,— தாபர - நிலையாயுள்ளவரே,— செம்மல் - எப்பொருட்குந்தலைவரே,— ஐம்முக - ஐந்துமுகத்தையுடையவரே,— நாரிபங்காள - உமாதேவியங்கரே,— அங்கை பரிக்கும் பரசு எ மலவினையும் தெறு சூலப்படைய - அழகியகையிலேதாங்கிய மழுப்படையையும் எப்படிப்பட்ட மலகின்ற வினைகளையும் அழிக்கின்ற சூலப்படையையுமுடையவரே,— என - என்று எம் அலை மனமே பரசு - எம்முடைய அலைகி

ஈ:றமுணமே வணங்கு,— அதற்கு கதியே அம் பலம் - அவ்வா று நிற்றற்கு மோக்ஷமே அழகியபிரயோசனமாகும் எ-று. (௫)

அம்பல வாவிம லாவென் றிடார்க்கரு ளாதபங்கக
யம்பல வாவி யலர்புலி யூரனுக் காகநல
மம்பல வாவி யடர்ப்பதிவ் வூரல ராகுமந்த
மம்பல வாவி மொழிவாருக் கேயது வாகவின்றே.

இ-ள். அம்பலவா - சபையையுடையவரே,— விமலா - மல ரகிதரே,— என்றிடார்க்கு - என்று சொல்லித்துதியாதவர் களுக்கு,— அருளாத - கிருபைசெய்யாத,— பங்கயம் பல வாவி அலர் புலியூரனுக்கு நலம் ஆக - தாமரைப்பூக்கள் பல வாவியிலே மலருகின்ற புலியூரருக்கு [எமது] இன்பநலம் ஆ குக,— ஆவி அடர்ப்பது - (எம்முடைய) உயிரை வருத்துவ து,— அம்பு அல - (மன்மதனுடைய) அம்புகள் அல்ல,— இ வ்வூர் அலர் ஆகும் - இவ்வூரவர்களுடைய பழிச்சொல்லாத ம்,— அந்த அம்பல் அவாவி மொழிவாருக்கே - அந்தப் பழி மொழியை விரும்பிப் பேசும் அவர்களுக்குத்தானே,— இன் றே அது ஆக - இன்றைக்கே அப்பழிமொழி ஆகக்கடவது எ-று. (௬)

கவின்றிருந் தும்பையுங் கொன்றையுஞ் சூடிய கண்ணுதலே
கவின்றிருந் தும்புலி யூர்நட ராசகங் காதரவென்
கவின்றிருந் தும்பின் முடிதன்மெய் யேநர கங்களிலே
கவின்றிருந் தும்வெளி றும்வினை தீர்ந்திடக் காண்மனமே.

இ-ள். மனமே - (எனது)மனமே,— இன்று இருந்தும் பின்முடிதல் மெய்யே -(இவ்வுடம்பு) இன்றைக்கு இருந்தும் பின்னர் இறத்தல் சத்தியமே,— நரகங்களில் ஏக இன்று - (இறந்தபின்) நரகங்களிலே செல்வது இன்றி,— இருந்து உம் வெளிறும் வினைதீர்ந்திட - கரியும் வெளிறும்படி [இருண்ட] தீவினையானது நீங்க,— கவின்று இரும் தும்பையுங் கொ ன்றையும் சூடிய கண்ணுதல் - அழகுபெறும்படி பெரிய தும்பைமாலையையுங் கொன்றை மாலையையும்தரித்த நெற்றி க்கண்ணரே,— ஏக - ஏகரே,— இன் திருந்தும் புலியூர் நடரா ச - இனிய திருந்திய புலியூரிலுள்ள நடராசரே,— கங்காதர - கங்கையைத்தரித்தவரே,— என்க - என்றுசொல்லித்துதிக்கக் கடவை எ-று. காண் - அசை. (௭)

மனந்தனங் கந்தரு சொல்லாற் றிருப்பணி வாய்த்துவிடா
மனந்தனங் கந்தரஞ் சேர்புலி யூரனை வந்திப்பர்வா
மனந்தனங் கந்தர மென்னடை யார்கண் வலையிற்படா
மனந்தனங் கந்தலென் பார்பவ சாகர மாய்ப்பவரே.

இ-ள். மனம் அகம் தரு சொல்லால் திருப்பணி வாய்த்து - மனத்தினாலும் காயத்தினாலும் பேசுகின்ற வாக்கினாலும் திருத்தொண்டுகளைச் செய்யப்பெற்று,— விடாமல் - இடைவிடாமல்,— நந்தனம் கந்தரம் சேர் புலியூரனை வந்திப்பர் - சோலைகள் [உயர்ச்சியினாலே] மேகமண்டலத்தைச் சேருகின்ற சிதம்பரத்திலுள்ள நடேசரை வழிபடுபவர்கள்,— வாமம் அனம் தனம் கந்தரம் மென் நடையார் கண் வலையில் படாமல் - அழகிய தனங்களையும் அன்னத்தின் நடையையும் [மேகத்தையொத்த] கூந்தலையும் மெல்லிய நடையையும் உடைய பெண்களது கண்கள் என்னும் வலையில் அகப்படாமல்,— நம் தனம் கந்தல் என்பார் - நம்முடைய திரவியமுங் கெடுதலையுடையது என்பராகி,— பவசாகரம் மாய்ப்பவரே - பிறவியாகிய சமுத்திரத்தை மாய்ப்பவர் [ஆவர்] எ-று. தன்-சாரியை. (அ)

கரமா யருந்துதிக் கைமலை யாய்ப்பிற வாய்க்கருஞ்சூ
கரமா யருந்துதி யென்று விடாதெனைக் காத்தருள்சக்
கரமாய ருந்து திரணிரை மேய்க்குங் கழிபொருந்து
கரமாய ருந்துதிக் கும்புலி யூரகங் காதரனே.

இ-ள். சக்கரம் - சக்கரப்படையும்,— ஆயர் உந்து திரள் நிரை மேய்க்கும் கழி பொருந்து கரம் மாயரும் துதிக்கும் - இடையர்கள் செலுத்துகின்ற கூட்டமாகிய பசுக்களை மேய்க்கின்ற கோலும் பொருந்திய கரத்தையுடைய விட்டுணுவுந் துதிக்கின்ற,— புலியூர - புலியூரரே,— கங்காதரனே - கங்கையைத் தரித்தவரே,— கரமாய் - கழுதையாயும்,— அருந் துதிக்கைமலையாய் - அரிய யானையாயும்,— கரு சூகரமாய் - கரிய பன்றியாயும்,— பிறவாய் - ஒழிந்தனவாயும்,— உற்று அருந்து என்று - பிறந்து [வினைப்பயன்களை] அநுபவி என்று,— விடாது எனை காத்தருள் - விடாமல் என்னைக் காத்தருளும் எ-று.

கங்கா தரன்புலி யூர்நகர் காவலன் காருண்யமே
கங்கா தரநற் கவுரிபங் காளன் கருதருமோ
கங்கா தரன்பர னென்றுபுத் தேளினங் கைதொழுசங்
கங்கா தரன்பர்க் கினியரல் லார்க்குக் கசந்தவரே.

இ-ள். கங்காதரன் [என்று]— கங்கையைத் தரித்தவரென்றும்,— புலியூர் நகர் காவலன் [என்று] - புலியூரென்னு நகரத்திற்குக் காவலரென்றும்,— காருண்யமேகம் [என்று] - கிருபையென்னும் மழையைப் பெய்கின்ற மேகமென்றும்,— காதரம் நல் கவுரி பங்காளன் [என்று] - அச்சமென்னுங் குணத்தையுடைய நல்ல பார்ப்பதி பங்கரென்றும்,— கருத அரு மோசம் காது அரன் [என்று] — நினைத்தற்கரிய மயக்கத்தை [தமது அடியவர்களுக்கு] அழிக்கின்ற சங்கார கடவுளென்றும்,— பரன் என்று - மேலானவரென்றும்,— புத்தேள் இனம் - தேவகூட்டம்,— கை தொழு சங்கம் காதர் - கை குவித்து வணங்குகின்ற சங்கக் குண்டலத்தை அணிந்த காதையுடையராகிய நடராசர்,— அன்பர்க்கு இனியர் - [தம்மிடத்தே] அன்புடையவர்களுக் கினியவராகவும்,— அல்லார்க்கு கசந்தவர் - [அன்புடையர்] அல்லாதவருக்கு இனியாதவராகவும் [இருப்பார்] எ-று. (௰)

சந்தங் கமழுங் கலாவகை யன்பர்க்குத் தானடந்தோர்
சந்தங் கமழும் புலியூரர் வெற்பினிற் சார்ந்தணிவா
சந்தங் கமழுந் தணிமூலை தோய்மைந் தரைமறந்த
சந்தங் கமழும் படிகொய்தென் மைய றணிவதின்றே.

இ-ள். அன்பர்க்கு - [தமது] அடியவராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்காக,— அங்கம் அழுங்கலாவகை - [தம்முடைய] திருமேனி ஒளி மழுங்காவண்ணம்,— சந்து நடந்தோர் - [பரவையிடத்தே] தூதுசென்றவரும்,— சந்தம் கமழும் புலியூரர் வெற்பினில் - சந்தனமரங்கள் பரிமளிக்கின்ற புலியூரையுடையவருமாகிய நடராசருடைய மலையினிடத்தே,— சாந்து அணி வாசம் தங்கம் அழுந்து அணி - கலவைச்சாந்தினது பெரிய வாசனையையும் பொன்னழுந்தப் பெற்ற ஆபரணத்தையுமுடைய,— மூலை தோய் மைந்தரை மறந்து - மூலையினிடத்தே கலந்த நாயகரை மறந்து,— அசம் கம் அழும்படி கொய்து - ஆட்டினது தலையை அஃதழும்படி கொய்தலால்,— என் மையல் தணிவது இன்று - என்து மயக்கந் தணிவது இல்லை எ-று. தம்—சாரியை. (௪௧)

மையலங் காரம் பயில்கண்டர் வண்புலி யூரர்வைத்த
மையலங் காரம்ப மாகிப் பெருகி வரக்குனிரா
மையலங் காரம் பனைத்திட வாடை வருத்திடத்தின்
மையலங் காரம் படரவெவ் வாறுயிர் வாழ்பரிதே.

இ-ள். மை அலங்காரம் பயில் கண்டர் - கரிய அலங்காரம் பொருந்திய கழுத்தை யுடையவராகிய,— வண் புலியூரர் வைத்த மையல் - அழகிய புலியூரர் [எம்மிடத்தில்] வைத்த மயக்கமானது,— அங்கு ஆரம்பமாகி பெருகி வர - அங்கே தொடங்கிப் பெருகி வரவும்,— அலங்கு ஆரம் குளிராமை பகைத்திட - விளங்குகின்ற முத்துக்கள் [இயற்கையாகிய] குளிரைச் செய்யாமல் [வெம்மையைச் செய்து] பகைக்கவும்,— வாடை வருத்திட - வாடைக்காற்று வருத்திடவும்,— கார் அம்பு அடர - கரிய சமுத்திரமானது பொரவும்,— திண்மை அலம் - [இவற்றையெல்லாந்தாங்குதற்கு] வலிமையுடையே மல்லேம்,— உயிர் வாழ் பரிசு எவ்வாறு - [ஆதலின்] எம்முடைய உயிர் நிலைபெறும விதம் எப்படி? எ-று. (௧௨)

பரிசன வேதியர் சூழ்புலி யூரர்பத் தர்க்கினிய
பரிசன வேதி பயில்கிரி மேவு மனோபவனும்
பரிசன வேதி படைமன்னர் நின்முலைப் பாரவிலைப்
பரிசந வேதிணி பொன்கொடு வந்தனர் பான்மொழியே.

இ-ள், பரிசனம் வேதியர் சூழ் புலியூரர் - [தம்முடைய] சுற்றமாகிய பிராமணர்சூழ்ந்த புலியூரரும்,— பத்தர்க்கு இனிய பரிசனவேதி - அடியவருக்கினிய இரத குளிகைபோன்றவரும் ஆகிய நடராசர்,— பயில் கிரி மேவும் - பயிலுகின்ற மலையிற் பொருந்திய,— மனோபவன் ஆம் பரிசு அனமன் மரனுந்தம்படி ஒத்த,— ஏதி படை மன்னர் - ஆயுதங்களையுஞ் சேனைகளையு முடைய தலைவர்,— பான் மொழியே - பாலைநிகர்த்த வார்த்தையையுடைய தலைவியே,— நின் முலை பாரம் விலை பரிசம் - நினது முலையின் பெரிய விலையாகிய பரிசமாக,— நவ்வு திணி பொன் கொடுவந்தனர் - மரக்கலத்திலே நிறைவாகிய திரவியத்தை கொண்டு வந்தார் எ-று. (௧௩)

பானகந் தந்தம் வலிகெட வோங்கிப் பணைத்சிரும்
பானகந் தந்தம் பயில்கரித் தோலினன் பாவவிடாய்ப்
பானகந் தந்தன சேரிடை பங்கினன் பத்தரவைப்
பானகந் தந்த புலியூ ரெனிற்கெடும் பாசமன்றே.

இ-ள். பால் நகம் தந்தம் வலிகெட - பக்கங்களில் [திக்குகளில்] உள்ள மலைகள் தங்கள் தங்கள் வலிகுறைய,— ஓங்கி பணைத்து அதிரும் - உயர்ந்து பருத்து ஒலிக்கின்ற,— பால் நகம் தந்தம் பயில் கரித்தோலினன் - வெண்மையா

அவரஞ்சி வந்தயி னாகாரி வாகன ராகத்தில்வா
ழவரஞ்சி வந்தடி போற்றுமை பாக னகக்கருமை
யவரஞ் சிவந்தகு மம்புலி யூர னெனக்கருளி
யவரஞ் சிவந்த பதம்பெறற் காகுமைந் தக்கரமே.

இ-ள். அவரஞ்சி-யொன்னென்னும்பெயர்பெற்ற,— வந்து அயில் நாகாரி வாகனர் ஆகத்தில் வாழ் அவர்-காற்றினையுண்ணுகின்ற பாம்புக்குப் பகையாகிய கருடவாகனத்தையுடைய விட்டுணுவின் மார்பிலிருக்கின்ற அவ்விலக்குமியார்,— அஞ்சி வந்து அடி போற்று உமைபாகன்-பயந்து வந்து பாதத்தை வணங்குகின்ற உமாதேவிபாகரும்,— அசம் கரு அயம் அரம்- பாவமாகிய கரிய இரும்பிற்கு அரம் போல்பவரும்,— சிவம் தகும் அம் புலியூரன்-நன்மைதக்க அழகிய புலியூரை யுடையவருமாகிய நடராசர்,— எனக்கு அருளிய வரம்-எனக்கருளிச்செய்த வரமாவது,— சிவந்த பதம் பெறற்கு ஆகும் ஐந்து அக்கரமே-சிவந்த[தம்முடைய]திருவடியைப் பெறுதற்குக் காரணமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரமே எ-று.(கக)

கரமஞ் சரிதரு வென்னற்க நீசரைக் கட்டுகட்சீ
கரமஞ் சரிதரு மப்புலி யூரற்கி யமன்கடிந
கரமஞ் சரிதரு மாயைநெஞ் சேநங் கருவினையக்
கரமஞ் சரிதரு மென்றே மொழிக கனவிலுமே.

இ-ள். நெஞ்சே-[எனது]மனமே,— நீசரை கரம் மஞ்சு அரி தரு என்னற்க-கீழ்மக்களுடைய கையை மேகமென்றும் இந்திரனுடைய [கற்பக]விருக்ஷமென்றும் புகழ்ந்து பாடாதொழிக,— தருமம் புலியூரற்கு கள் சீகரம் மஞ்சரி கட்டு-தருமம் பொருந்திய புலியூரிற் கடவுளுக்கு [அணியும்படி] தேனின் றுளிபொருந்திய மாலைகளைக் கட்டுக,— யமன் கடி நகரம் அஞ்சு-இயமனுடைய காவல்பொருந்திய நகரத்திற்போதற்குப் பயப்படு,— அரு மாயை அரிது-[இப்படிச்செய்யின்] அருவாகிய மாயை நம்மைச் சேர்தல் இல்லை,— அக்கரம் அஞ்சு நம் கருவினை அரிதரும்-[இதுவன்றி மந்திரமாகிய]எழுத்தைந்தும் நமது பிறவியை அரியும்;— என்றே கனவிலும் மொழிக-என்றே கனவிலுஞ் சொல்லுக எ-று. (உ0)

கன்னவைப் படைத்தண்ணத் தார்மூவர் பாடல் களித்திரண்டு
கனவைப் படைத்தவர் தென்புலி யூர்வரைக் காதலரைக்
கன்னவைப் படைத்தணையத்துயில் காண்கிலன் கங்குலும்புக்
கன்னவைப் படைத்த மலர்க்கோலிற் பாங்கியெற் கண்டிக்கவே

இ-ள். கனம் வை படை தண்ணத்தார் - மிகுந்த கூரிய படையாகிய மழுவையுடையரும்,—மூவர் பாடல் களித்து இரண்டு கனம் வைப்பு அடைத்தவர் - மூவருஞ் சொன்ன தேவாரப் பாடல்களையுங் களிப்புக் கொண்டு இரண்டு காதினிடத்தே அடைத்து வைத்தவருமாகிய நடராசரது,—தென் புலியூர் வரை காதலரை - அழகிய புலியூரில் உள்ள மலையிற்றலைவரை,—கனவை படைத்து அணைய துயில் காண்கிலன் - கனவைக் காணப்பெற்று [அதன்வாயிலாகவாவது] சேரும்படி நித்திரையையுங் காண்கிலேன்,—கங்குலும் புக்கன - இராக்காலமும் புகுந்தன,—பாங்கி என் கண்டிக்க தைத்த மலர் கோலில் வைப்பள் - தோழி என்னைக் கண்டிக்கும் பொருட்டுத் தைத்த புட்ப பாணத்தின்மேல் வைப்பாள் எ-று (உக)

கண்டல ராக முடிபுனை யானைக் கருதினரா
கண்டல ராகவைக் கும்புலி யூரனைக் காதைமுகங்
கண்டல ராகம தாடக மாமெழிற் காரிகையாள்
கண்டல ராக மிருந்தனள் கேட்டக் கணத்தினிலே.

இ-ள். காதை முகம் கண்டு அலர் ஆகமது ஆடகமாம் எழில் காரிகையாள் - வார்த்தையும் முகமும் [முறையே] கற்கண்டும் தாமரைப்பூவும் மேனி பொன்னும் ஆகிய அழகையுடைய தலைவியானவள்,—கண்டல் அராகம் முடி புனையானை - தாழம்பூவைச் சிவந்த முடியிலே தரியாதவரும்,—கருதினர் ஆகண்டலராக வைக்கும் புலியூரனை - [தம்மை] நினைத்தவர்களை இந்திரராகவைக்கும் புலியூரருமாகிய நடராசரை,—கண்டு அல்ல - தெரிசனஞ்செய்து அல்ல,—கேட்ட அக்கணத்தினிலே - கேள்விப்பட்ட அக்கணப்பொழுதினிற்றானே,—இராகம் இருந்தனள் - [அவரிடத்தே] ஆசையிருந்தாள் எ-று.(உஉ)

கணத்தினி லேற்றுநல் லன்பினைச் செய்யிற் கருதுசிவ
கணத்தினி லேற்று நினைமன மேநற் கழனிவயற்
கணத்தினி லேற்றுக் கயல்பாய் கவின்புலி யூரனைப்போக்
கணத்தினி லேற்றுத் திரிந்தானை நீதியிற் காதலித்தே.

இ-ள். கணத்தினில் ஏற்று நல் அன்பினை செய்யின் கருது சிவ கணத்தினில் ஏற்றும் - கணப்பொழுதாயினும் இயைந்து நல்ல அன்பினைச் செய்தால் நினைக்கின்ற சிவகணங்களுள்ளே ஏற்றுவார் [ஆதலின்],—மனமே - [எனது] மனமே,—நல் கழனி வயல் கண் நத்தினில் ஏறு கயல் பாய் கவின் புலியூரனை - நல்ல வயலின் கண்ணுள்ள சங்கினில் ஆண்கயல்கள் பாய்த

வா லுண்டாகின்ற சிறப்பையுடைய புலியூராரும்,—பொக்கணத்தினில் ஏற்று திரிந்தானை – பொக்கணத்தினில் யாசித்துத் திரிந்தவருமாகிய நடேசரை,— நீதியிற் காதலித்து நினை – நீதியுடனே விரும்பி நினைக்கக் கடவாய் எ-று. (உந)

திரியும் பணியு மிதழியு மாருஞ் சிறந்திடுபா
திரியும் பணியும் புனைபுலி யூரிற் சிவார்ச்சனபத்
திரியும் பணியுந் தொழிலும் விடார்க்குச் சிறந்தநெய்தோய்
திரியும் பணியுந் தியவிளக் காஞ்சிவ ஞானமதே.

இ-ள். திரியும் பணியும் இதழியும் ஆரும் சிறந்திடு பாதிரியும் பணியும் புனை – திரிகின்ற பாம்பினையும் கொன்றை மலரையும் ஆத்திமலரையும் சிறந்த பாதிரிமலரையும் தரிக்கின்ற,— புலியூரில் சிவார்ச்சன பத்திரியும் – புலியூரில் [இருக்கின்ற] சிவனைப் பூசைசெய்தற்குரிய பத்திரத்தையும்,—பணியுந் தொழிலும் – [அவரை] வணங்குந் தொழிலையும்,— விடார்க்கு – கைவிடாதவருக்கு,—சிவஞானமது – சிவஞானமானது,— சிறந்த நெய் தோய் திரியும் பண்ணி – சிறந்த நெய்யை [வார்தது அதன் மாட்டுத்] தோயுந் திரியையு முண்டாக்கி,— உந்திய விளக்காம் – தூண்டிய விளக்குப்போலப் பிரகாசிக்கும் எ-று. (உச)

அதரங் கரங்க ளிலவமங் காந்த ளழகுறத்தோ
யதரங் கரங்கவர் பூங்குழன் மாதுரு வாய்மருவி
யதரங்க ரங்கன் பணிபுலி யூரனென் றுற்பிறவி
யதரங் கரங்க வடைத்த முதாக்கு மருள்வருமே.

இ-ள். அதரம் கரங்கள் இலவம் அம் காந்தள் அழகுற – அதரமுங் கைகளும் இலவம்பூவையும் காந்தட்பூவையும் [நிகர்த்து] அழகைப்பொருந்த,— தோயதரம் கரம் கவர் பூகுழல் மாதுருவாய் மருவிய – மேகத்தைவென்று [அதனிடத்தே] இறைப்பொருள் கவருகின்ற அழகிய கூந்தலையுடைய மோகினி என்னும் பெண்வடிவாய்ப் பொருந்திய,— தரங்க ரங்கன் பணி புலியூரன் என்றால் – ஆற்றினையுடைய ஸ்ரீ ரங்கத்திலிருக்கும் விட்டுணுவும் வணங்குகின்ற புலியூரர் என்று சொல்லித் துதித்தால்,— பிறவி அதர் அங்கு அரங்க அடைத்து அமுது ஆக்கும் அருள் வரும் – பிறவியாகிய வழியை அங்கே அழிய அடைத்து மோக்ஷத்தை உண்டாக்குகின்ற திருவருள் கைகூடும் எ-று.

(உரு)

வரவந்த காரம் பயில்கண்டர் பூமகண் மார்பிடங்க
வரவந்த காரம்பு கொண்டிகல் வாட்டி மகிழ்ந்தபுங்க
வரவந்த காரம் புலியூரர் மன்னினர் மற்றென்றன்மேல்
வரவந்த காரம்ய மின்றுனக் கேவரி லந்தரமே.

இ-ள். வரம் அந்தகாரம் பயில் கண்டர் - வரத்தை உடைய இருளைநிகர்த்த கண்டத்தை உடையரும்,— பூமகள் மார்பிடம் கவர வந்த கார் அம்பு கொண்டு- இலக்குமியின் மார்பினை இடமாகப் பெற்றுக்கொள்ள வந்த கரிய [விஷ்ணு]என்னும் அம்பினைக் கொண்டு,— இகல் வாட்டி மகிழ்ந்த புங்கவர் - பகையைக் கெடுத்து மகிழ்ந்த கடவுளும்,— அவம் தகார் - கேட்டினைப் பொருந்ாதவரும்,— அம்புலியூரர் - அழகிய புலியூரை உடையவரும் ஆகிய நடராசர்,— மன்னினர்- நிலைபெற்றிருக்கின்றார் [ஆதலின்],— அந்தகா என் தன்மேல் வர இரமியம் இன்று - இயமனே என்மேல் வருதற்குச் சந்தோஷமில்லை,— வரில் உனக்கே அந்தரம் - வருவாயாயின் உனக்கே அந்தரமுண்டாகும் எ-று. மற்று- அசை. (உசு)

அந்தரங் கம்பகர்ந் தாயிழை யார்செய் யதிமயலா
மந்தரங் கம்படு வேலையின் வீழ்ந்திங் கழிகுவனோ
வந்தரங் கம்பயில் மாலயன் போற்றற் கரும்புலியூ
ரந்தரங் கம்பயின் றாடிய பாதவம் மாதங்கனே.

இ-ள். அந்த அரங்கம் பயில் மால் அயன் போற்றற்கு அரு - அந்தச் சிறீரங்கத்திலிருக்கும் விஷ்ணுவும் பிரமதேவரும் துதித்தற்கரிய,— புலியூர் அந்தரம் கம் பயின்று ஆடிய பாத - புலியூரிலுள்ள அழகிய உயர்ந்த ஞானகாசத்திற் பொருந்தி நிருத்தஞ்செய்த திருவடியை உடையவரே,— அ மாது அங்கனே - அந்தப் பார்ப்பதியைத் திருமேனியில் உடையவரே,— அந்தரங்கம் பகர்ந்து ஆயிழையார்செய் - அந்தரங்க வார்த்தைகளைச் சொல்லி பெண்கள் செய்கின்ற,— அதி மயலாம் அம் தரங்கம் படு வேலையில் வீழ்ந்து - மிகுந்த மயக்கமாகிய நீருந் திரையும் பொருந்திய சமுத்திரத்திலே விழுந்து,— இங்கு அழிகுவனோ - இங்கே அழிவேனோ? எ-று ( )

மாதங்கங் கோடுவிற் றேடாச்சி வண்புலி யூரின்மத
மாதங்கங் கோடறப் பாய்ந்தவப் போதிவண் மாழ்குறவிம்
மாதங்கங் கோடு மருவியங் குன்றிடை வந்தவரார்
மாதங்கங் கோடுமுன் வந்தளித் தாளொரு மன்னவனே.

இ—ள். மா தங்கம் கோடு வில் தோடு ஆக்கி - பெரிய பொன் மலையையும் சங்கினையும் [முறையே] வில்லாகவும் குண்டலமாகவு மாக்கிய நடராசருடைய,— வண் புலியூரில் – அழகிய புலியூரில்,— மதம் மாதங்கம் கோடு உற பாய்ந்த அப்போது— மதத்தையுடைய யானையானது கொம்பு உறும்படி பாய்ந்த அப்பொழுது,— இவள் மாழ்குற விம்மாது – இப்பெண்ணானவள் [மனம்] அழிய ஏங்காமல்,— அங்கங்கு ஓடும் அருவி அம் குன்றிடை வந்தவர் ஆர் – அங்கங்கே யோடுகின்ற அருவியையுடைய அழகிய மலையினிடத்தே வந்தவர் யாவர்?— மாது அங்கம் கோடுமுன் ஒரு மன்னவன் வந்து அளித்தான் —பெண்ணினுடைய உடம்பு கோடுதற்கு முன்னே ஒரு தலைவன்வந்து பாதுகாத்துக்கொண்டான் எ-று.

மன்னு வலையுடைத் தோற்றந் தபநின் புகழ்மறவா
மன்னு வலையுரைத் துப்பெறு வேன்கொன் மதிமுடியா
மன்னு வலையுற்ற தீவிற் சிறந்த வளப்புலியூர்
மன்னு வலையுறழ் கண்டவுன் றாண்மலர்த் தாமரையே.

இ—ள். மதிமுடியா - சந்திரனைத் தரித்த முடியையுடையவரே,— மன் நாவலை உற்ற தீவில் சிறந்த வளம் புலியூர் மன்னு – நிலைபெற்ற நாவல் மரத்தைப் பொருந்திய தீவிலே [நாவலந்தீவிலே என்றபடி] சிறந்த வளத்தையுடைய புலியூர்க்குத் தலைவரே,— அலை உறழ்கண்ட – இருளை நிகர்த்த கண்டத்தையுடையவரே,—உன் தாள் தாமரை மலர் - உமது பாதமாகிய தாமரைப்பூவை —மன் ஆவலை யுடை தோற்றம் தப – மிக்க ஆசையையுடைய பிறப்புக் கெடும்வண்ணம்,— நின் புகழ் மறவாமல்- உம்முடைய கீர்த்தியை மறவாமல்,— வலை உரைத்து பெறு வேன்கொல் - வலிமையோடு சொல்லிப் பெறுவேனோ? எ-று. (௨௧)

தாமரைப் பாலரும் புல்லுரி சாத்தினர் தங்குகரத்
தாமரைப் பாலத்தர் தென்புலி யூர்வரைத் தண்டுளவத்
தாமரைப் பாலரை யன்னீ ரிரிவைய டன்னெடிங்கே
தாமரைப் பாலருந் தித்தங்கு மேகத் தடமரிதே.

இ—ள். தாம் அரைப்பால் அரு புல் உரி சாத்தினர் - தாம் அரையினிடத்தே அரிய புலித்தோலைத் தரித்தவரும்,— தங்கு கரம் தாமரை பாலத்தர் - பொருந்திய கையாகிய தாமரைப் பூவிலே மழுப்படையை யுடையவருமாகிய நடராசரு

டைய,— தென் புலியூர் வரை - அழகிய புலியூரிலுள்ள மலையிலே,— தண் துளவம் தாமரை பாலரை அன்னீர் - குளிர்ந்த துளசி மாலையையுடைய விஷ்ணுவின் புதல்வராகிய பிரமசரை ஒத்த தலைவரே,— அரிவையன் தன்னொடு - இந்தத் தலைவியுடனே,— இங்கே தாமரை பால் அருந்தி தங்கும் - இவ்விடத்திலே பாய்கின்ற மரையின் பாலினை உண்டு தங்கக்கடவீர்,— ஏக தடம் அரிது - செல்லுதற்கு வழி அரிதாக இருக்கின்றது எ-று. (௬௦)

தடங்கடி வேங்கை நிழலொரு வித்தவிக் கும்பெரும்பாந்
தடங்கடி வேங்கையுங் காட்டிடில் வேங்கடஞ் சார்ந்தகடி
தடங்கடி வேங்கை யுரியார் புலியூரிற் றையல்கஞ்சத்
தடங்கடி வேங்கை யலர்வய லாக சரிப்புண்கிலே-

இ-ள். பெரும் பாந்தள் தடம் கடி வேங்கை நிழல் ஒருவி தவிக்கும் - பெரிய பாம்புகள் மலைச்சாரலிலுள்ள சோலையிற் பொருந்திய வேங்கைமரத்தின் நிழலை நீங்கி[வெம்மையைப் பொறுக்கமாட்டாது]இளைக்கும்,— தங்கு அடி வேம்-[அந்நிலத்திலே] தங்கினோருடைய கால்களும் வேகும்,— கையும் காட்டிடில் வேம் - கைகளும் [இது அந்நிலம் என்று] சுட்டிக் காண்பித்தால் வேகும்,— கடம் - [இவ்வியல்புடைய] காடானது,— சார்ந்த கடிதடம் கடி வேங்கை உரியார் புலியூரில் தையல் - பொருந்திய அரையிலே கொலைத்தொழிலைச் செய்கின்ற புலியினது தோலினைத்தரித்த நடராசருடைய புலியூரிலுள்ள பெண்ணானவள்,— சரிப்புண்கிலே - சென்றால்,— கஞ்சம் தடம் கடி வேங்கை அலர் வயலாக - தாமரையுடைய வாவிகளில் வாசனையையுடைய பொன்போன்ற பூக்கள் பொருந்திய வயலாகக்கடவது எ-று. (௬க)

புண்டரி கத்தர் புயனிற மாயர் புயங்கர்பதப்
புண்டரி கத்தர் தொழும்புலி யூரர் பொருப்பிணங்காய்
புண்டரி கத்தரத் தார்தினை யுள்கிலர் போறுமனப்
புண்டரி கத்தர வக்குயி லாலென்று போந்தவரே-

இ-ள். புண்டரிகத்தர் - தாமரைமலரை ஆசனமாக வுடைய பிரமதேவரும்,— புயல் நிற மாயர் - மேகத்தை யொத்த [கரிய]நிறத்தையுடைய விட்டுணுவும்,— புயங்கர் — பதஞ்சலிமுனிவரும்,— பதம் புண்டரிகத்தர் - பாதத்தாற் புலி என்

னு வழங்கப்படு முனிவரும் [வியாக்கிரபாதரென்றபடி],— தொழும் புலியூரர் பொருப்பினங்காய் - வணங்குகின்ற புலியூருடைய மலையிற்பெண்ணே,— புண்டரிகம் தரத்தார் — புண்டரிகம் என்னும் பெயரையுடைய [தென்கீழ்த்திசை] யானையை ஒத்தவலர்,— கத்து அரவம் குயிலால் மனம்புண் தரி என்றுபோந்தவர் - கத்துகின்ற ஒலியையுடைய குயிலால் [உண்டாகும்] மனநோவினைத் தரித்திரு என்று சொல்லிச்சென்றவர் [ஆதலால்],— நினை உள்கிலர் போலும் - உன்னை நினையார் போலும் எ-று. (௯௨)

தவராக மாகன கச்சிலை கொண்டவன் றந்தமெழுந்
தவராக மாக வரிதே டரியவன் றண்புலியூர்த்
தவராக மாகர மானே னெமக்கருட் டன்மைதந்து
தவராக மாக வொளியானைப் போற்ற றகுதிநெஞ்சே.

இ-ள்- தவர் ஆக மா கனகம் சிலை கொண்டவன் - வில்லாக மகாமேருமலையை [ஆக்கிக்] கொண்டவரும்,— தந்தம் எழுந்த வராகம் ஆகு அ அரி தேடரியவன் — தந்தந் தோற்றப்பெற்ற பன்றியாகிய அவ்விஷ்ணு தேடுதற் கரியவரும்,— தண் புலியூர் தவர் ஆகம ஆகரமானோன் - குளிர்ச்சிபொருந்திய புலியூரிலிருக்கின்ற தவத்தர்களுடைய இருதயத்தை உறைவிடமாக வுடையவருமாகிய நடராசர்,— எமக்கு அருள் தன்மை தந்து உதவ - நமக்கு அருளின் தன்மையைத்தந்து உதவி செய்யும் பொருட்டு,— ராகம மாகம் ஒளியானை - செக்கர் மேகத்தை ஒத்த ஒளியையுடைய அக்கடவுளை,— நெஞ்சே — மனமே,— போற்றல் தகுதி — துதித்தல், தகுதியாகும் எ-று.

குதிக்கும் புரையற்ற பந்தெறிந்தோவண்கொழுங்கயல்கள்
குதிக்கும் புனல்குடைந் தோவிளநீருடன்கோட்டிணைத்த
குதிக்கும் புகறரு கொங்கையும் மேனியுங் குன்றினைநான்
குதிக்கும் புகழ்புலி யூரன் வரையிடைக் கோமளமே.

இ-ள். நான்கு திக்கும் புகழ் புலியூரன் வரையிடைக் கோமளமே - நான்குதிக்கி லுள்ளவர்களாலும் புகழப்படுகின்ற புலியூருடைய மலையிற் றலைவியே,— குதிக்கும் புரையற்ற பந்து எறிந்தோ - [உனது] காலின் குதிக்கும் ஒப்பற்ற பந்தினை எறிந்து விளையாடியோ,— வண் கொழு கயல்கள் குதிக்கும், புனல் குடைந்தோ - அழகிய கொழுத்த கயல் மீ

ன்கள் குதிக்கின்ற நீரிலே ஸ்நானஞ்செய்தோ,— இளநீருட ன் இணை கோடு தகுதிக்கும் புகல்தரு கொங்கையும் - இளநீ ருக்கும் இரண்டு கொம்பின் தகுதிக்குஞ் சமானஞ் சொல்லு கின்ற முலையும்,— மேனியும் - சரீரமும்,— குன்றினை - கு றைந்தனை? [சொல்லுதி] எ-று. (௬௪)

வரையா வனலிபி வேதாச்செய்யாதன்பர் மாட்டணுவாய்
வரையா வனலிபெண் ணாணன் றுபவன் வண்புலியூர்
வரையா வனலி தரமன்ன வாமெய் வருத்தமுறேல்
வரையா வனலி கரியாநம் மாதை மணந்தருளே.

இ-ள். வரையா அன லிபி வேதா செய்யாது - வரைந்து அந்தத் [தலையில்] எழுத்தினைப் பிரமதேவர் செய்யாமல்,— அன்பர்மாட்டு அணுவாய் வரையாவன் - [தமது] அன்பரி டத்தே அணுவாகியும் மலையாகியும் இருப்பவரும்,— அலி பெண் ஆணாய் அன்று ஆபவன் - அலியாகியும் பெண்ணாகியும் ஆணாகியும் [இவை]அல்லனவாகியு மிருப்பவருமாகிய நடேச ருடைய,— வண் புலியூர் வரை - அழகிய புலியூரினெல்லையி ல்,— மன்னவா ஆவல் நலிதர மெய் வருத்தமுறேல் - தலைவ னே ஆசையானது வருத்தச் சரீர வருத்தத்தை அடையா தே,— நம் மாதை அனலி கரியா வரையா - நமது தலைவியை அக்கினிசாக்ஷியாக விவாகஞ்செய்து,— மணந்தருள் - கூடிய [illegible]வாயாக எ-று. (௬௫)

மணக்குஞ் சரதத் திருமாற் கரியவர் வண்புலியூர்
மணக்குஞ் சரர்நம் மறந்தனர் சேவல் வரும்பெடையை
மணக்குஞ் சரந்தைப் படையது நீத்துறை வான்கழியே
மணக்குஞ்சரமெய்து வேளெதிர்ந்தானெங்ஙன்வாழ்குவமே

இ-ள்- மண் நக்கும் சரதம் திருமாற்கு அரியவர் - பூமி யை உண்ட உண்மையையுடைய விட்டுணுவுக்குமரியவராகிய நடேசருடைய;— வண் புலியூர் - அழகிய புலியூரிலே,— ம ணம் கு[illegible]சரர் நம் மறந்தனர் - [எம்]விவாகத்தையுடைய யா னையை ஒத்த[illegible]த்தார்,— சேவல் வரும் [illegible] டையை மண - சே[illegible] அலங்கரித்துக்கொண்டிரு க்க,— குஞ்சு அரந்தைப்படை அது நீத்து உறை வான் கழி யே - குஞ்சு துன்பப்படுதலை அந்தப்பெடை இரைகொடுத்து நீக்கி இருக்கின்ற பெரிய கழிக்கரையே— வேள் மணக்கும் சரம் எய்து எதிர்ந்தான் - மன்மதன் பரிமளிக்கின்ற [புட்ப

யாணங்களைச் செலுத்தி எதிர்த்தான்,— எங்ஙன் வாழ்குவம் - [ஆதலால் யாம்] எப்படி [உயிர்] வாழ்குவோம் எ-று (௩௬)

குவலயம் போதுவண் டுண்ணு மப் போது குறித்திடுசங்
குவலயம்போது கரத்தன்பர்வேட்டனர்கூட்டமென்சொ
குவலயம்போதுகண்ணைப்சபைவாணரைக்கூடித்தொழக்
குவலயம் போதுறு தென்புலி யூர்வல்லி கூறுகவே.

இ-ள். ஐ அம்பு ஒது கண்ணாய் - அழகிய அம்புக்குச்சமம் என்று சொல்லப்படுங் கண்களையுடையவளே,— சபைவாணரை தொழ குவலயம் கூடி போதுறு தென் புலியூர் வல்லி - கனகசபைவாணரைத் தொழும்படி பூமியிலுள்ளோர் கூடிச் செல்லுகின்ற அழகிய புலியூரிலுள்ளகொடிபோல்வாளே,— குறித்திடு சங்கு வலயம் போது கரத்து அன்பர் - குறிக்கப்பட்ட சங்கரேகையும் சக்கரரேகையும் பொருந்திய கையையுடைய தலைவர்,— குவலயம் போது வண்டு உண்ணும் அப்போது - குவளைப்பூக்களில் வண்டுகள் [தேனை] உண்கின்ற மாலைக் காலத்திலே,— கூட்டம் வேட்டனர் - கூடுதலை விரும்பினார்— என சொல்குவல் - [யான் அவர்க்கு] யாது சொல்வேன்,— கூறுக - நீயே சொல்லுக, எ-று. (௩௭)

வல்லிக் கரம்பயில் வேன்முலை சொல்விழி மானுமந்த
வல்லிக் கரம்பை யுவமையன் றேநண்ப வா[illegible]சனன [illegible]
வல்லிக் கரம்பை யமுதன்பர்க் காம்புலி யூரர்வரை
வல்லிக் கரம்பற்றி நீக்கிலை யங்ஙனென் மாற்கடற்கே.

இ-ள். வல் இக்கு அரம் பயில் வேல்முலை சொல் விழி மானும் - சூதாடுகருவியையும் கருப்பஞ்சாற்றினையும் அரத்தாற் குறைக்கப்பட்ட வேலினையும் முறையே முலையினாலுஞ் சொல்லினாலுங் கண்ணினாலும் ஒத்த,— அந்த வல்லிக்கு அரம்பை உவமை அன்று - அந்தப்பெண்ணுக்குத் தேவப்பெண்ணும் உவமையல்ல,— நண்ப - நண்பனே,— சனனவல்லி [illegible]க்கு வா[illegible] அன்பர்க்கு அரம்பை அ[illegible] புலியூரர்வரை - பிறவியாகிய விலங்கினை அறு[illegible] அன்பர்களுக்கு வாழைப்பழமும் அமுதமும் போன்றிருக்கின்ற புலியூரருடைய மலையிலே,— அங்ஙன் என் மால் கடற்கே - அவ்விடத்தே என்னிடத்திலுண்டாகிய மையலாகிய கடலினின்று [என்னை],— வல் இக் கரம்பற்றி நீக்கிலை - [உன்னுடைய] வலிய இந்தக் கையினாற் பற்றி நீக்கினாயில்லை எ-று. (௩௮)

மாலுக்கு வந்தன செய்யாமற்போற்றிடின்மாயையென்னு
மாலுக்கு வந்தன ராய்வரு வார்மற்றி யானெனதா
மாலுக்கு வந்தனை செய்தத ஞனல் வளையருளி
மாலுக் குவந்த புலியூரர் வேணிவன் கங்கையரே.

இ-ள். யான் எனது ஆம் மால் உக்கு வந்தனை செய்[த]ல் - அகங்காரமும் மமகாரமுமாகிய பெருமை கெட்டு பாடு செய்ததினலே,— நல் வளை அருளி - நல்ல சக்கராயுதத்தைக் கொடுத்து,— மாலுக்கு உவந்த புலியூரர் - விட்டுணுவினிடத்தே யுவப்புக்கொண்ட புலியூரரும்,— வேணி வன் கங்கையர்- சடையினிடத்தே அழகிய கங்கையையுடையவருமாகிய நடேசர்,— மாலுக்கு வந்தன செய்யாமல் போற்றிடில் - மயக்கங்களுக்கு இயைந்து வந்தனவாகிய தீவினைகளைச் செய்யாமல் தம்மைத் துதித்தால்,—மாயை என்னும் மாலுக்கு வந்து அனராய் வருவார் - மாயை என்கின்ற மேகத்தை நீக்கும் பொருட்டுப் பிரசண்டவாயுவை நிகர்த்தவராகி வருவார் எ-று. மற்று அசை. (நக)

கங்கைப் பொருவரு செஞ்சடை யாய்கம லாலயத்தார்
கங்கைப்பொருளெனக்கொண்டிரந்தாய்தமைக்காய்தருமோ
கங்கைப் பொருவின ராகத்துள் ளாய்செங் கயல்வயலிற்
கங்கைப் பொருபுலி யூரவென் பார்க்கில்லை கன்மங்களே.

இ-ள். கங்கை பொருவரு செம் சடையாய் - கங்காநதியைத்தரித்த ஒப்பற்ற செம்மையாகிய சடையையுடையவரே,— கமலாலயத்தார் கம் கை பொருள் என கொண்டு இரந்தாய் - தாமரைப்பூங் கோயிலிலிருக்கின்ற பிரமதேவருடைய தலையோட்டினைக் கைப்பொருளாகக்கொண்டு யாசித்தவரே,— தமை காய்தரும் மோகம் கைப்பு ஒருவினர் ஆகத்துள்ளாய்- தம்மைப் [பொல்லா விடயங்களிலே வீழ்த்திக்] கெடுக்கின்ற காமத்தையுங் குரோதத்தையும் நீங்கினவருடைய இருதயத்தி லிருப்பவரே,— செம் கயல் வயலில் கங்கை பொரு புலியூர - செம்மையாகிய கயல்கள் வயலிலுள்ள வரம்பிலே பொருகின்ற புலியூரரே,— என்பார்க்கு கன்மங்கள் இல்லை - என்றுசொல்லித் துதிப்பார்க்கு கன்மங்கள் இல்லையாகும் எ-று ()

கன்மத்த முந்து புவங்கெட வேண்டிற் கடல்கடையக்
கன்மத்த முங்கொளு மால்விடைப் பாகன் கடுக்கையலங்
கன்மத்த மும்புனை யும்புலி யூரன் கருதுமைம்மு
கன்மத்த மும்மைக் கரியுரி யான்புகழ் கற்றிடுமே.

இ-ள். கன்மத்த முந்து பவங்கெட வேண்டில் - கன்மத்தையுடையவாகி முந்துகின்ற பிறவி கெட விரும்பினால்,— கடல்கடைய கல் மத்தமும் கொளும் மால் விடை பாகன் - திருப்பாற்சமுத்திரத்தைக் கடைதற்கு [மந்தர]மலையாகிய மத்தினையும் [வாசுகிநாண்முதலியவைகளையுங்] கொண்ட விட்டுணுவாகிய இடபத்தினைச் செலுத்துபவரும்,— கடுக்கை அலங்கல் மத்தமும் புனையும் புலியூரன் - கொன்றைமாலையையும் மத்தமாலையையும் புனைகின்ற புலியூரரும்,— கருதும் ஐம்முகன் -[அன்பர்களாலே] தியானிக்கப்படுகின்ற ஐந்து முகங்களை யுடையவரும்,— மும்மை மதம் கரி உரியான - மூன்றாகிய மதத்தினையுடைய யானைத் தோலை யுடையவருமாகிய சிவனுடைய,— புகழ் கற்றிடும் - கீர்த்தியைக் கற்றுங்கொள்ளுங்கள் எ-று. மானுடர்களே என்பது எஞ்சிநின்றது.(௪௧)

கற்கட கத்தளை முக்கனி தூர்க்குங் கவின்புலியூர் [லோங்
கற்கட கத்தரு நெஞ்சினன் காணவுங் காட்டுங்கொல்
கற்கட கத்தணி காசினி போற்றிடக் கைவலம்பு
கற்கட கத்தகு காயுணும் போதர் கருத்தனையே.

இ-ள். கற்கடகத்து அளை முக்கனி தூர்க்கும் கவின் புலியூர்- ஞெண்டுகளுடைய புற்றினை முப்பழங்களும் தூர்க்கின்ற அழகினையுடைய புலியூரானது,— ஓங்கற்கடகத்து அணிகாசினி போற்றிட - சக்கரவாளசைலத்தாற் சூழப்பட்ட அலங்காரத்தையுடைய பூமியிலுள்ளோர் துதிக்கும்படி,— கைவலம்புகற்கு- மோக்ஷத்திலே போதற்கு,— அடகு அ தகு காய் உணும் போதர் கருத்தனை - இலையையும் அந்தத் தக்க காயையும் உண்ணுகின்ற [தவஞ்செய்யும்] அறிஞருடைய இருதயத்தில் எழுந்தருளி இருக்குங் கடவுளை,— கற்கள் தக தரு நெஞ்சினன் காணவும் காட்டுங் கொல் — கற்களைப்போல் வன்மையைதருகின்ற மனத்தினை யுடையேனாகியயான் தரிசனஞ்செய்யவும் காண்பிக்குமோ? எ-று (௪௨)

தனக்கரி யானைச் சசித்துணை வோனைத்தரும்பணியா [ன்
தனக்கரி யானைப் பிரமனை யாள்பவன் றன்னையெண்ணு
தனக்கரி யானை முகன்புலி யூரன் சுதரனென்று
தனக்கரி யானையன் றென்னை யாளுந் தனிமுதலே.

இ-ள். தனம் கரி யானை சசி துணைவோனை - முலையாகி கரி என்று சொல்லப்படும் யானைக் கொம்பினையுடைய இந்திராணிக்கு நாயகனாகிய இந்திரனையும்,— தரும் பணி ஆதனம் கரியானை - தக்க சர்ப்பசயனமாகிய ஆதனத்தையுடை

விட்டுணுவையும்,— பிரமனை - பிரமதேவரையும்,— ஆளபவன் - ஆள்பவரும்,— தன்னை எண்ணான் தனக்கு அரியான் - தம்மை நினையாதவனுக்கு அரியவரும் — ஐமுகன் - ஐந்துமுகங்களையுடையவரும் — புலியூரன் - புலியூரையுடையவரும் — சதுரன் - நாகரிகத்தையுடையவரும்,— என் நாதன் - எனது தலைவரும்,— அக்கு அரியான் - அக்குமணியையுஞ் சர்ப்பாபரணத்தையுமுடையவரும்,— ஐயன் தான் என்னை ஆளும் தனிமுதலே - அநச்சிசகடப்படிவருமாகிய நடராசரே என்னையாளுகின்ற ஒப்பற்ற முதல்வராவார் எ-று

முதலைக் கயவரைக் கன்னலின் மாய்வித்த மொய்ம்புசெழு
முதலைக் கயவரைப் போற்றிய மான்முதற் றேவர்பொரு
முதலைக் கயவரைச் செற்ற பிரானை முதுபுலியூர்
முதலைக் கயவரைப் போதால் வணங்கினர் முத்தர்களே.

இ-ள். முதலை கயவு அரை கன்னலில் மாய்வித்து - முதலையினுடைய மேம்பாட்டை அரைநாழிகையினுள்ளே கெடுத்து,— மொய்ம்பு செழுமு தலை கயம் வரை போற்றிய - வலிமைபொருந்திய முதன்மையாகிய [கஜேந்திரனென்னும்] யானையாகிய மலையைக் காத்த,— மால் முதல் தேவர் பொருமுதலை - விட்டுணுமுதலிய தேவர்களுடைய துன்பங்களையும்,— கயவரை - நீசராகிய அசுரர்களையும்,— செற்ற பிரானை - சங்கரித்த கடவுளும்,— முது புலியூர் முதலை - முதிர்ந்த புலியூரிலிருக்கின்ற முதல்வருமாகிய நடராசரை,— கயம் வரை போதால் வணங்கினர் - வாவியெல்லையிலுள்ள பூக்களைக்கொண்டு வழிபட்டவர்கள்,— முத்தர்களே - முத்தியையுடையவர்களாவார்கள் எ-று (௯௪)

முத்தருக் கும்பயின் மூர்க்கருக் குந்தவ முற்றிருக்கு
முத்தருக் கும்விண் ணதிர்ந்திடித் தோங்கி முழங்குருமு
முத்தருக் கும்ப மலைமகை பங்கர் முதுபுலியூர்
முத்தருக் கும்வைப் பாரிரு தாளென முடிமணியே.

இ-ள் முதருக்கும் பயில் மூர்க்கருக்கும் - மூவகையாகிய தருக்குகளையும் பொருந்திய கீழ்மக்களுக்கும்,— தவம் உற்று இருக்கும் முத்தருக்கும் - தவத்தினையுற்றிருக்கின்ற முத்தான்மாக்களுக்கும்,— விண் அதிர்ந்து இடித்து ஓங்கி முழங்கும் உருமு தரு - (முறையே) ஆகாயத்தில் அதிர்ந்து

இடித்து ஓங்கி முழங்குகின்ற இடியேற்றினையும் (கற்பக) விருக்ஷத்தினையும் போன்றிருப்பவரும்,— கும்பம் முலை மங்கை பங்கர் - குடம்போன்ற முலையையுடைய உமாதேவி பங்கரும்,— மூதா புலியூர் மூதா அருக்கும் வனப்பார் - முதிய புலியூரில் உள்ள முதிரின் ஒளியையுங் குறைக்கின்ற அழகினையுடையவருமாகிய நடராசருடைய,— இரு தாள் என் முடி மணி - இரண்டு திருவடிகளும் எனது சிரத்திற் புனைகிற இரத்தினமாகும் எ-று. (௪௬)

மணியருந் துங்க கயமுகத் தேவு மருவுசுப்ர
மணியருந் தும்புரு நாரத ருமபுகழ் வணைபுலியூர்
மணியருங் தமலிடத் தார்சிவ காமி மருவியர [னே.
மணியரு நுமவிடை யாரெனப் போற்றலென் மாகட

இ-ள். மணி அரு துங்கம் கயமுகம் தேவும் — அழகிய அரிய உயர்ச்சியையுடைய கரிமுகக்கடவுளும்,— மருவு சுப்ரமணியரும் — பொருந்திய சுப்ரமணியக் கடவுளும்,— தும்புரு நாரதரும் — தும்புருவும் நாரதரும்,— புகழ் வண் புலியூர் மணி [என] - கீர்த்திமிக்க அழகிய புலியூரிலுள்ள இரத்தினம் போல்பவரென்றும்,— அருந்தும் விடத்தார் [என] - உண்ட நஞ்சை உடையவரென்றும் — சிவகாமி மருவிய ரமணியர் [என] - சிவகாமி அம்மை ஒருபாகத்திற் பொருந்திய சந்தோஷத்தை உடையவரென்றும் — உந்தும் விடையார் என — செலுத்துகின்ற இடபத்தை உடையவரென்றும்,— போற்றல் என் மா கடன் - துதித்தல் எனக்குப் பெரிய கடனாகும் எ-று. (௪௭)

கடக்கரு மத்தகை மாமகந் தன்னிற் கலந்தசுரர்
கடக்கரு மத்தமிகச் செற்ற கூத்தன் கவின்புலியூர்க்
கடக்கரு மத்தக் கரியுரித் தோனன்பர் காய்கருவி
கடக்கரு மத்தனைக் கட்டறுக் குங்கருச் சேகரமே.

இ-ள். கடக்க அரும் அத்தகை மா மகந்தன்னில் - எவராலும் வென்று கடத்தற்கரிய அந்தத் தகுதி பொருந்திய பெரிய யாகத்தில்,— கலந்த சுரர்கள் தக்கரும் அத்தமிக செற்ற கூத்தன் - கூடிய தேவர்களும் தக்கரும் கெடும்படி கொன்ற நடராஜரும்,— கவின் புலியூர் கடம் கரு மத்தம் கரி உரித்தோன் - அழகிய புலியூரிலிருக்கின்ற மதம்பொருந்

தியகரிய களிப்பையுடைய யானையை உரித்தவருமாகிய சிவனை,— அன்பர் காய் கருவிகடம் கருமம் தளைகட்டு அறுக்கும — அன்பர்களுடைய காய்கின்ற கருவின் வேறுபாட்டை உடைய கன்மபாசக்கட்டினை அறுக்கின்ற,— கதிர் சேரப - ஒளிபொருந்திய வாட்படை போலாவார் எ-று (சஎ)

சேகரிக் குஞ்சரத் தோல்புனைந் தூர்ந்தவன் றேங்கடுக்கை
சேகரிக் குஞ்சடைத் தென்புலி யூரன் சிறுபிறைசேர்
சேகரிக் குஞ்சான விக்குநன் காதலன தீவினைச்
சேகரிக் குஞ்சர மென்போம் கடம்புரி செம்மலையே.

இ-ள். சேகரிக்குஞ்சரத்தோல் புனைந்து ஊர்ந்தவன் - இடபத்தையும் கரியாகிய யானைத்தோலையும் அணிந்து செலுத்தினவரும்,— தேன் கடுக்கை சேகரிக்கும் சடை தென்புலியூரன் - தேன் பொருந்திய கொன்றை மாலையைப் பேணிவைத்திருக்கின்ற சடையையுடைய அழகிய புலியூரனும்,— சிறுபிறை சேர் சேகரிக்கும் சானவிக்கும் நன் காதலன் - சிறிய பிறை சேர்ந்த முடியையுடைய பார்ப்பதிக்கும் கங்காதேவிக்கும் நல்ல நாயகரும [ஆகிய] — கடம்புரி செம்மலை - நடனத்தைச் செய்கின்ற கடவுளை — தீவினை சேத அரிக்கும் சரம் என்போம - தீவினையாகிய வயிரத்தை அரிக்கின்ற அஸ்திரம் போல்பவர் என்று சொல்லித் துதிப்போம் எ-று.

சேகரிக்குஞ்சரத்தோல்புனைந்தூர்ந்தவன் — என்பது எதிர்நிரனிறை. சேவை ஊர்ந்தவரெனவும் தோலைப்புனைந்தவரெனவும் கொள்க (சஅ)

மலையசத் தார்தரு கொங்கைமின் னுரை மகிழ்ந்தொருவா
மலையசத் தாகி விடயத்தின் மூழ்குற்று மாழ்கவனோ
மலையசத் தானங்கை வீட்டியத் தக்கன் மகத்தின்மற்ற
மலையசத் தாகச் செயும்புலி யூருறை வானவனே.

இ-ள். ஐய-சுவாமியே!— மலை அசத்தான் அங்கை வீட்டி - பொருகின்ற ஆட்டினை வாகனமாக உடைய அக்கினிதேவனது அழகிய கையினை வெட்டி,— அத்தக்கன் மகத்தின் அமலை அசத்து ஆக செயும் - அந்தத் தக்கன் செய்த யாகத்தின் மிகுதிகளை அசத்து என்று காணும்படி செய்த - புலியூர் உறை வானவனே - புலியூரில் எழுந்தருளி இருக்குங் கடவுளே — மலை அசத்து ஆர் தரு கொங்கை மின்னுரை மகிழ்ந்

MAHAMAHOPADHYAYA
... SWAMINATHA IYER LIBRARY

து ஒருவாமல் - சந்தனக் குழம்புகளினால் நிறைந்த முலைக
ளை உடைய பெண்களை விரும்பி [அவர்களைவிட்டுப்]பிரியா
மல் — சத்தம் ஆதி விடயத்தினைமூழ்குற்று மாழ்குவனோ- சத்த
ம்முதலிய விடயங்களிலமிழ்ந்தி[யான்] வருந்துவேனோ? எ-று.

வானவன் பாலன்று பாணன்கை யோலை வரைந்தனுப்பும்
வானவன் பாலன்ன பூதியி னானமயி லோன்பயில்க
வானவன் பாலன் றலைக்கறி யுண்டவன் வண்பதஞ்சேர்
வானவன் பாலருள் வாழ்புலி யூரை வணங்குதுமே.

இ-ள். அன்று வானவன் பால் - அந்நாளிலே சேரனிடங்
கொடுக்கும்படி — பாணன் கை ஓலை வரைந்த அனுப்பும் வா
னவன் -[தமது அன்பராகிய]பாணருடைய கையிலே திருமுக
ம் வரைந்து அனுப்பிய கடவுளும், — பால் அன்ன பூதியினன் -
பாலினை நிகர்த்த வெண்மையாகிய விபூதியை உடையவரும்,
— மயிலோன் பயில் கவானவன - மயில் வாகனத்தையுடைய
சுப்பிரமணியக்கடவுள் விளையாடுகின்ற குறங்கினையு
டையவரும் — பாலன் தலைக்கறி உண்டவன - பிள்ளையின்
றலையிற் சமைத்த கறியினை உண்டவருமாகிய நடராஜரு
டைய, — வண் பதம் சேர்வான - அழகிய பதங்களைச் சேரும்
படி, — அ அன்பால் அருள் வாழ் புலியூரை வணங்குதும் -
அந்த அன்பினால் அருள் வாழுகின்ற புலியூரினை வணங்
குவோம் எ-று. [௯௦]

குதலைப் பணின்மொழி மங்கைதன் பங்கனைக் கூர்விடங்
குதலைப் பணியணி யும்புலி யூரனைக் கூடிவணங் [கக்
குதலைப் பணிய தவப்பய னேயம கோட்டியின்மாழ்
குதலைப் பணியறத் தேமனக் கல்லைக் குழைவித்ததே.

இ-ள். குதலை பணின் மொழி மங்கை தன் பங்கனை -
குதலையாகிய பண்ணினை நிகர்த்த வார்த்தையையுடைய வுமா
தேவிபங்கரும், — கூர் விடம் கக்கு தலை பணி அணியும் பு
லியூரனை - மிகுந்த நஞ்சினைக்கக்குகின்ற தலையினையுடைய
பாம்பினை அணிகின்ற புலியூரருமாகிய நடராசரை, — கூ
டி வணங்குதலை பணிய தவப்பயனே - சேர்ந்து வணங்குத
லைச் செய்த தவப்பயனன்றோ, — யம கோட்டியின் மாழ்
குதல் பணி அறுத்து- இயமனுடைய சபையில் வருந்துதல

ஆகிய தொழிலைக்கெடுத்து,—என் மனம் கல்லை குழைவித்தது-என்னுடைய மனமாகிய கல்லைக் குழையச்செய்தது எ-று. ()

வித்தகத் தாலர வம்புலிக் காக விழுப்பொதுமே
வித்தகத் தாவென நிர்த்தம் புரிந்துமெய்ஞ் ஞானமுணர்
வித்தகத் தாபுலி யூரா வினியென் வினைகளென்னும்
வித்தகத் தாற்பவ மங்குரி யாது விலக்குகவே.

இ-ள்• வித்தகத்தால் - சதுரப்பாட்டினால்,—அரவம் புலிக்கு ஆக - பதஞ்சலி முனிவர்க்கும் வியாக்கிரபாத முனிவர்க்குமாக,— விழு பொது மேவி - மேன்மை பொருந்திய சபையில் மேவி,— தகத்தா என நிர்த்தம் புரிந்து - தகத்தா என்னுந்தாளத்துக்கு இசையத்திருநடனஞ் செய்து,—மெய் ஞானம் உணர்வித்த கத்தா- [அவர்களுக்குச்] சத்தியஞானத்தை அறிவித்த கர்த்தரே,—புலியூரா - புலியூரரே,—என் வினைகள் என்னும் வித்தகத்தால் - என்னுடைய வினைகள் என்னும் வித்தினிடத்திருந்து,— பவம் அங்குரியாது விலக்குக-பிறவி என்னும் [முளை] தோன்றாதபடி விலக்கி யருளக் கடவீர் எ-று. (௫உ)

குகரப் பருப்பத மங்கைபங் கர்சொல் கடாந்திறந்து
குகரப் பருப்பதத் தோலுரி யார்குல வும்புலியூர்க்
குகரப் பருப்பதம் வேண்டார்க்கு மன்பர்க்குங் கூசியொ [ங்கு
குகரப் பருப்பத னிற்கதிர் போலமுன் கூடுவரே.

இ-ள். குகரம் பருப்பதம் மங்கை பங்கர் - குகையையுடைய மலையின் மகளாகிய உமாதேவி பங்கரும்,— கொல் கடாம் திறந்து உகு கரம் பரு பதம் தோல் உரியார் - கொல்கின்ற மதத்தினைச் [சுவடு] திறந்து சொரியும் துதிக்கையையும் பெரிய பாதத்தையுமுடைய யானைத்தோலை யுடையவரும்,—குலவும் புலியூர் குகர் அப்பர்- விளங்குகின்ற புலியூரிலுள்ள சுப்பிரமணியக்கடவுளுக்குத் தந்தையாருமாகிய நடராஜர்,— பதம் வேண்டார்க்கும் அன்பர்க்கும் - [தம்முடைய] பாதத்தில் அன்பு செய்யாதவர்களுக்கும் செய்பவர்களுக்கும்,— கூசி ஒருங்கு கரப்பர் உப்பு அதனில் கதிர் போல் முன் கூடுவர் -[முறையே]கூசி முழுமையு மறைவார், கடலினிடத்தே வருஞ் சூரியனைப்போல முன்னாக வந்து சேருவார் எ-று. தம்மிடத்தே அன்பில்லாதவருக்கு மறைவார் எனவும்,அன்புள்ளவருக்கு வெளிப்படுவார் எனவுங்கூட்டுக.(௫௩)

கூடம் புடைத்த வயிற்கண்ணி பாகன் குளிர்புலியூர்
கூடம் புடைத்த மலைமுலை மாதின் குறுமுயலின் [ள்]
கூடம் புடைத்த முகங்கண் ணெனவுண்டு கொல்வண்டுகா
கூடம் புடைத்தடம் வாரிச நீலங் கொளக்கண்டதே.

இ-ள். கூடம் புடைத்த அயில் கண்ணி பாகன்- சம்மட்டியினால் அடித்துச் செய்யப்பட்ட வேற்படையை நிகர்த்த கண்ணையுடைய உமாதேவிபங்கராகிய நடராஜருடைய,—குளிர் புலியூர் - குளிர்ந்த புலியூரிலே,—கூடம் புடைத்த மலை முலை மாதின் - உச்சி புடைத்திருக்கின்ற மலையைநிகர்த்த முலையையுடைய பெண்ணினது,—முயலின்கூடு அம்பு உடைத்த முகம்கண் என - சந்திரனையும் அத்திரத்தையும்[முறையே] வென்ற முகத்தையுங் கண்ணையும்போல,—வண்டுகாள்- வண்டுகளே,—கூடு அம்பு உடை தடம் வாரிசம் நீலம் கொளக் கண்டது - சேர்ந்த நீரையுடைய வாவி தாமரைமலரில் நீலமலரைக் கொண்டிருக்கக்கண்டது,— உண்டு கொல் - உண்டோ [சொல்லுங்கள்] எ-று. (௫௪)

கண்டதுண் டங்கனி யுண்டன சொல்வளை காமர்குமிழ்க்
கண்டதுண் டம்பயிலொண்டொடி வஞ்சியைக் கைதவரை
கண்டதுண் டம்படுத் தும்புலி யூரார் கனவரையிற் [க்
கண்டதுண் டங்கது நண்பவென் னெஞ்சங் கலக்கியதே.

இ-ள். கண்டு அது உண்டு அம் கனி உண்டு அன சொல் - கற்கண்டினையும் உண்டு அழகிய கனியையும் உண்டாற் போன்ற சொல்லினையும்,—வளை காமர் குமிழ் கண்டம் துண்டம் பயில்- சங்கினையும் அழகிய குமிழம்பூவையும்[முறையேஒத்த] கழுத்தினையும் மூக்கினையும்பொருந்திய,— ஒள்தொடி வஞ்சியை- ஒள்ளிய வளையலையுடைய பெண்ணை,— கைதவரை கண்டதுண்டம் படுத்தும் புலியூரர் கனம் வரையில் கண்டது உண்டு - வஞ்சகரைக் கண்டிக்கப்படுந் துண்டமாகச் செய்யும் புலியூரருடைய கனம் பொருந்திய மலையில்[யான்] கண்டதுண்டு,—அங்கது - அக்காட்சியானது,—நண்ப - நண்பனே,—என் நெஞ்சம் கலக்கியது - என்னுடைய மனத்தினைக் கலக்கியது எ-று. (௫௫)

கலகத் தனங்களைச் செற்றவன் பாலரைக் கவின்மலயக்
கலகத் தனந்த தவமுனி யாற்சமங் கண்டொருபக்
கலகத் தனம்பயின் மென்னடை யாளைக் கலந்தவன்ச
கலகத் தனம்புலி யூரனென் றல்வருங் கைவலமே.

இ-ள். கலகத்து அனங்கனை செற்றவன் - கலகஞ்செய்தலை யுடைய மன்மதனைக்கொன்றவரும்,— பாரை கவின் மலயம் கலகத்து அனந்த தவம் முனியால் சமம் கண்டு - பூமியை அழகிய பொதிய மலையில் இருக்கின்ற அளவற்ற தவத்தையுடைய அகத்திய மகாமுனிவராற் சமத்துவங் கண்டு,—ஒரு பக்கல் அகத்து அனம்பயில் மெல் நடையாளை கலந்தவன்- ஒரு பக்கத்தினிடத்தே அன்னம்போன்ற நடையையுடைய உமாதேவியாரைக் கலந்தவரும்,— சகல கத்தன் - சகலத்துக்குங் கர்த்தரும்,— அம் புலியூரன் என்றால் - அழகிய புலியூராகிய நடராசர் என்றுசொல்லித் துதித்தால்,— கைவலம் வரும் - மோக்ஷங் கைகூடும் எ-று. (௫௬)

வலம்புரி யுங்கழு நீருங் குலாவு மதுமலர்ச்சை
வலம்புரி யுங்குழல் பங்கர் தணந்தபின் வண்புலியூர்
வலம்புரி யுந்திய வாழியு மாதர்க்கு வான்பகையாய்
வலம்புரி யுங்குயி லுந்துணை யாகும் வசந்தனுக்கே.

இ-ள். வலம்புரியும் கழுநீரும் குலாவும் மது மலர் - நந்தியாவர்த்தத்திலும் கழுநீரிலும் விளங்குகின்ற தேன் பொருந்திய பூக்களையுடைய,—சைவலம் புரியுங் குழல் பங்கர் தணந்தபின் -பாசியும் விரும்புகின்றகூந்தலையுடைய உமாதேவிபங்கராகிய நடராசர் எம்மைப்பிரிந்தபின்,—வசந்தனுக்கு- மன்மதனுக்கு —வண் புலியூர் வலம்புரி உந்திய ஆழியும் - அழகிய புலியூரிற் சங்குகளைக்கரையில் உந்திய கடலும்,—மாதர்க்கு வான்பகையாய் வலம் புரியும் குயிலும் - [நாயகரைப் பிரிந்த] மகளிர்களுக்குப் பெரிய பகையாய் வெற்றியைச் செய்கின்ற குயிலும்,—துணையாகும் - துணையாகிநிற்கும் எ-று. (௫௭)

சந்தநத் தேவை நிகர்களக் கண்ணினர் தம்வசைகாற்
சந்தனத் தேவைகு வேள்கணை பாறிடத் தாரணிவா
சந்தனத் தேவைத்து வண்புலி யூரரைத் தந்தருளுஞ்
சந்தனத் தேவையல் லாறபணி யேன்றெய்வந் தான்பிறவே

இ-ள். சந்தம் நத்து ஏவை நிகர் களம் கண்ணினார் தம் வசை - அழகியசங்கினையும் அம்பினையும் முறையே யொத்த கழுத்தினையுங் கண்ணினையுமுடைய மடவார் சொல்லுகின்ற வசையும்,—கால் சந்தனத்தே வைகு வேள்கணை - தென்றற் காற்றாகிய தேரினிடத்தே தங்குகின்ற மதன பாணமும்,— பாறிட - இரிந்துபோம்படி,—தார் அணி வாசம் தனத்தே வை

த்து - மாலையின் அழகிய வாசத்தை எனது தனத்திற் பொருந்தும்படி வைத்து,— வண் புலியூரரை தந்து அருளும் - அழகிய புலியூரரைக் கூடும்படிக்குத் தந்தருளிய,— சந்து அனம் தேவை அல்லால் - தூது சென்ற அன்னமாகிய தெய்வத்தை அல்லாமல்,— பிற தெய்வம் பணியேன் - வேறு தெய்வங்களை வணங்கேன் எ-று. [௫௮]

தானங் கடியிட நீள்கரித் தோலினர் தண்புலியூர்த்
தானங் கடியிட மாயுறை நாதர் தணத்தலிற்சந்
தானங் கடியிட ராகவில் வேள்சலத் தைத்தெடுத்
தானங் கடியிட வந்தன மாரன் சதுரங்கமே.

இ-ள். தானம் கடியிட நீள் கரி தோலினர் - மதம் வாசனையைச் செய்கின்ற நீண்ட யானைத்தோலினை யுடையவரும்,— தண் புலியூர் தானம் கடி இடமாய் உறை நாதர் - குளிர்ந்த புலியூர் என்னும் ஸ்தானமே தமக்குரிய இடமாக இருக்கின்ற தலைவருமாகிய நடராசர்,— தணத்தலில் - எம்மைப் பிரிதலினால்,— சந்தானம் கடி இடர் ஆக - [யாம் பூசிய] சந்தனமும் கொல்லுகின்ற இடையூறாக நிற்க,— வில் வேள் சலத்தை எடுத்தான் - விற்படையை யுடைய மன்மதன் முதற்பாணமாகிய தாமரைப்பூவை யெடுத்தான்,— அங்கு அடி இட - அவ்விடத்தே [போரைத்] தொடங்குதற்கு,— மாரன் சதுரங்கமே - அம் மன்மதனுடைய சதுரங்கசேனைகளும்,— வந்தன - வந்து வளைந்து கொண்டன எ-று. (௫௯)

துரங்கமுந் தானையும் யானையுந் தேருமிச் சொல்லிடுஞ்சா
துரங்கமுந் தந்திடு மம்புலி யூரன் றுதித்தவர்க்கோ
துரங்கமுந் துங்கண்ண னுக்கரி யானன்பர் சொல்லருமா
துரங்கமுந் துஞ்சடை யானல்கு முத்திச் சுகந்தனையே.

இ-ள். ஓது ரங்கமுந்தும் கண்ணனுக்கு அரியான் - சொல்லப்படுகின்ற திருவரங்கத்தின் முதன்மை பெற்றிருக்கின்ற விட்டுணுவுக்கு அரியவரும்,— அன்பர் சொல்லரும் மாதுரம் - தமதடியவர்க்குச் சொல்லுதற்கரிய மதுரமாகவிருப்பவரும்,— கம் உந்தும் சடையான் - கங்கையாகிய நீர் அலைகளைத் தள்ளுகின்ற சடையையுடையவரும்,— அம் புலியூரன் - அழகிய புலியூரையுடையவருமாகிய நடராசர்,— துதித்தவர்க்கு - தம்மை வணங்கினவர்களுக்கு,— துரங்கமும்-

குதிரையும்,— தானையும் - காலாளும்,— யானையும் - யானையும்,— தேரும் - இரதமுமாகிய,— இ சொல்லிடும் சாதுரங்கமும் தந்திடும் - இந்தச் சொல்லப்பட்ட சதுரங்கத்தையுங்கொடுப்பார்,— முத்தி சுகந்தனை நல்கும் - [அவையன்றி] மோக்ஷாநந்தத்தையுங் கொடுப்பார் எ-று. (௬௦)

கந்தனை யாகம மெய்ப்பொருள் கேட்ட கடவுளையக்
கந்தனை யாகவந் தாற்கரி யானைக் கறுத்ததக்கன்
கந்தனை யாகத் தடர்புலி யூரனைக் கண்டுகொண்டு
கந்தனை யாகவக் கண்ணார் மயலைக் கடந்தனையே.

இ-ள். கந்தனை ஆகமம் மெய்ப்பொருள் கேட்ட கடவுளை - கந்தசுவாமியை ஆகமத்தின் மெய்ப்பொருள் வினாவிய கடவுளும்,— அ கந்து அனையாக வந்தாற்கு அரியானை - அந்தத்தூணை மாதாவாக வந்துதித்த விட்டுணுவுக்கரியவரும்,— கறுத்த தக்கன் கம் தனை யாகத்து அடர் புலியூரனை - கோபித்த தக்கனுடைய தலையை யாகத்தில்வெட்டிய புலியூருமாகிய நடராசரை,— கண்டுகொண்டு உகந்தனை - [மனமே] தரிசித்துக்கொண்டு களிகூர்ந்தாய்,— ஆகவும் கண்ணார் மயலை கடந்தனை - [ஆதலால்] பாவைச்செய்கின்ற கண்ணினையுடைய பெண்களாலவரும் மயக்கத்தை நீங்கினை எ-று. (௬௧)

தனையா தரிக்கும் பிரமத்தை யோதெனத் தான்முருகன்
றனையா தரிக்கும் புகழ்ப்புலி யூரனைத் தாணுவைநித்
தனையா தரிக்கு நிகரெனப் போற்றிலர் தாழ்பவப்பந்
தனையா தரிக்குமென் றேயிருப் பாரித் தரணியிலே.

இ-ள். தனையா தரிக்கும் பிரமத்தை ஓதென - குமாரனே நீ மனதிற்றரித்திருக்கும் பிரணவப்பொருளைச் சொல்லென்று,— முருகன் தனை ஆதரிக்கும் புகழ் புலியூரனை - முருகக்கடவுளை ஆதரிக்கின்ற கீர்த்தியையுடைய புலியூரரும்,— தாணுவை - நிலையாயுள்ளவரும்,— நித்தனை - என்றுமுள்ளவருமாகிய நடராசரை,— ஆதர் இக்கு நிகரென போற்றிலர் - மூடர்கள் கருப்பஞ்சாற்றுக்குச் சமானமானவரென்று சொல்லித் துதிக்கின்றாரல்லர்,— தாழ் பவம் பந்தனை - தாழ்ந்த பிறவியாலாகிய பந்தத்தை,— யாது அரிக்கும் என்றே - யாது சங்கரிக்குமென்று [எண்ணியோ],— இ தரணியில் இருப்பர் - இப்பூமியில் வீணாக இருப்பார்கள் எ-று. (௬௨)

தரணியி லேகை மகிழ்புலி யூர தருகவரந்
தரணியி லேகைத வத்தழு லாமலுந் தன்மறைவி
தரணியி லேகையைச் செய்யா மலுமச் சமன்படர்வை
தரணியி லேகை யறவா யெனைத்தண்டி யாமலுமே.

இ-ள் தரணியில் ஏகை மகிழ் புலியூர - இமயமலையிற் பிறந்த ஒப்பற்ற உமாதேவியார் மகிழ்கின்ற புலியூரரே;— தரணியிலே கைதவத்து உழலாமலும் - பூமியிலே வஞ்சகத்தில் உழலாமலும்,— தன் மறைவிதரணி இலேகையை செய்யாமலும் - தமக்குரிய வேதத்தின் விதரணத்தையுடைய பிரமதேவர் [பிறவிஉண்டாகும்படி] லிகிதமெழுதாமலும்.— அச் சமன படர் - அந்த யமதூதர்,— வைதரணியிலே கையறவாய் எனை தண்டியாமலும் - வைதரணி என்னும் ஆற்றிலே செலுத்திச் செயலின்மையாக என்னைத் தண்டியாமலும் — வரம் தருக - வரத்தைத் தரக்கடவீர் எ-று. (௩௫)

தண்டா திருக்குஞ் சடைப்புலி யூர தபனியக்கோ
தண்டா திருக்குழைச் சங்கா கராவிச் சகத்தனிலே
தண்டா திருக்கு மொழிந்தருள் வெள்ளித் தடக்கயிலைவே
தண்டா திருக்கு முடித்தா ளெனைப்பொய் தகாமலுக்கே.

இ-ள். தண் தாது இருக்கும் சடை புலியூர - குளிர்ச்சிபொருந்திய பூந்தாது இருக்கப்பெற்ற சடையையுடைய புலியூரரே;— தபனியம் கோதண்டா - பொன்மலையாகிய வில்லையுடையவரே.— திரு குழை சங்கு ஆகரா - அழகிய காதினிற் சங்குக்குண்டலத்திற்கு உறைவிடமாகவுடையவரே — சகத்தனிலே தண்டாது இருக்கு மொழிந்தருள் - பூமியிலே நீங்காத வேதத்தைச் சொல்லியருளிய.— வெள்ளி தடம் கயிலை வேதண்டா - வெள்ளியாகிய விசாலம்பொருந்திய கைலைமலையையுடையவரே,— திருக்கு முடித்து பொய் தகாமல் எனை ஆள் - வஞ்சகமாகிய வினைகளை முடித்துப் பொய்யாகிய பிரபஞ்சத்திற் பொருந்தாமல் என்னை அடிமைகொண்டருளும் எ-று.

காம தகனக் தருவீர செய்க்கணிக் கட்கள்பெரு
காம தகனந் தரம்பாய் கவின்புலி யூரகலந்
காம தகனந் தருகரிச் சன்மகன் மக்கடலம்பீ
காம தகனந் தமையாண் டருளுநன் கதிச்சித்தியே.

இ-ள். காமன் தகனம் தரு வீர - மன்மதனை எரித்த வீரரே,— செய் கணி கட்கள் பெருகா மதகு அனந்தரம் பாய் கவி

ன் புலியூர - வயல்களிற் பழங்களின் தேன்கள் பெருகி மத
கினிடத்துப் பின்னர்ப் பாய்கின்ற அழகினையுடைய புலியூர
ரே,— கலங்கா மதம் கனம் தரு கரி சன்ம - கலங்காமையை
யுடைய மதத்தைச் [சொரிதலால்] மேகத்தையொத்த யானை
த்தோலையுடையவரே,— சன்மம் கடல் மீகாம - [ஆன்மாக்க
ளைக்] - சன்மம் என்னுங் கடலினின்று கடப்பித்தற்கு மாலுமி
போன்றவரே,— தகு நம் தமை ஆண்டு - தகுதிபெற நம்மை
அடிமைக்கொண்டு,— உன் கதி சித்தி அருள் - உமது மோ
க்ஷசித்தியை அருளக்கடவீர் எ-று. (௬௫)

சித்திரைக் குப்பதி போர்க்கிலக் காயசென் மச்சலரா
சித்திரைக் குப்பறைத் தச்சலி யார்சிற் சபைதனிலே
சித்திரைக் கும்மறைக் தென்புலி யூரன திருக்கரம்வீ
சித்திரைக் குண்ணின்று தூக்கிய பாதஞ்சிந் திப்பவரே.

இ-ள். சிற்சபைதனில் - திருச்சிற்றம்பலத்தில்,— மறை நே
சித்து இரைக்கும் தென் புலியூரன் - வேதங்கள் நேசித்து
முழங்குகின்ற அழகிய புலியூரர்,— திருக்கரம் வீசி த்திரைக்கு
ள் நின்று தூக்கிய பாதம் சிந்திப்பவர் - திருக்கரத்தைவீசித் தி
ரைக்குள்ளே நின்று தூக்கியருளிய திருவடியைச் சிந்திப்பவ
ர்கள்,— சித்திரைக்கு பதி போர்க்கு இலக்கு ஆய - சித்திரை
மாசத்திற்குத் தலைவனாகிய மன்மதனுடைய போருக்கு இல
க்காகிய — சென்மம் சலராசி திரைக்கு பறைக்கு அசலியார்
- பிறவியாகிய சமுத்திரத்தினுடைய [தன்மையாகிய] தி
ரையினுற் பறைபறைத்துச் சஞ்சலப்படார்கள் எ-று. (௬௬)

சிந்தூர முங்கிரி யும்பகச் சூரன் சிதைந்துடல
சிந்தூர முமுயி ரும்பிள வாகச்செய் சேயுமைங்கைச்
சிந்தூர முந்தொழு தென்புலி யூரனைத் தீட்டுநுதற்
சிந்தூர முந்திய வந்தரி பங்கனை த்யானித்துமே.

இ-ள். சிந்து உரமும் கிரியும் பக - சமுத்திரத்தின் வலிமை
யும் கிரவுஞ்சகிரியும் பிளக்கும்படியும்,— சூரன் சிதைந்து உ
டல் நசிந்து உரமும் உயிரும் பிளவாக - சூரபன்மன் சிதைந்
து உடம்பு நசிந்து மார்பும் உயிரும் பிளக்கும்படியும்,— செய்
சேயும் - செய்த முருகக்கடவுளும்,— ஐ கை சிந்தூரமும் -
ஐந்து திருக்கரங்களையுடைய யானைமுகக்கடவுளும்,— தொழு
தென் புலியூரனை - வணங்குகின்ற அழகிய புலியூரரும்,— தீ
ட்டும் சிந்தூரம் முந்திய நுதல் அந்தரி பங்கனை - தீட்டிய சி

ந்தூரதிலதம் மூர்ந்திருக்கின்ற நெற்றியையுடைய பார்ப்பதி பங்கருமாகிய நடராசரை,— தியானித்தும் - தியானிப்போம் எ-று. (௬௭)

ஆனித் திருவிழ விற்கண்டு போற்றிடு மப்படித்தி
யானித் திருமெங்க ளம்புலி யூரனை யன்புடைமை
யானித் திருவு முடலுமெல் லாநிலை யன்றுகண்டு
ரானித் திருகற் பவமறுப் பீரரும் பாதகரே.

இ-ள். அரும் பாதகரே - தீருதற்கரிய பாதகத்தையுடையவர்களே,— எங்கள் அம் புலியூரனை அன்புடைமையால் - எங்களுடைய அழகிய புலியூரரை அன்புடைமையோடு — ஆனி திரு விழவில் கண்டு போற்றிடும் - ஆனிமாசத்தில் நடக்கும் மகோற்சவகாலத்திலே தரிசித்துப் போற்றுங்கள்,— அப்படித் தியானித்து இரும்- அப்பொழுது தெரிசித்தபடியே [அத்திருவுருவத்தை எப்பொழுதும்] தியானித்திருங்கள்,— இ திருவும்உடலும் எல்லாம் நிலை அன்று - இந்தச் செல்வமும் உடம்புமுதலியன எல்லாம் நிலையுள்ளன அல்ல,— ஆனி திருகல் பவம் அறுப்பீர் - [இப்படித் தியானித்தால்] கேட்டினையும் திருகலையுமுடைய பிறவித் துன்பத்தை அறுப்பீர்கள் எ-று. கண்டீர்- அசை. (௬௮)

பாதவத் தைக்குறித் தேழெய்த மாற்பன்றி பார்க்கரிய
பாதவத் தைக்குமெய்ப் பங்களித் தாய்புலி யூர்ப்பதியப்
பாதவத் தைக்குறி யேனுயிர போமப் பகலிடைத்தப்
பாதவத் தைக்குத வுற்றிடு வாய்பரிந் தஞ்சலென்றே.

இ-ள். வழ் பாதவத்தை குறித்து எய்த - ஏழுமராமரத்தை [இலக்குக்] குறித்து ஓரம்பாலெய்த — மால் பன்றி பார்க்க அரிய பாத- விஷ்ணுவாகிய பன்றியுங் காணவரிய பாதத்தை யுடையவரே,— அதவைக்கு மெய் பங்கு அளித்தாய்- உமாதேவியாருக்குத் திருமேனியி லொருபங்கைக் கொடுத்தவரே,— புலியூர் பதி அப்பா - புலியூரென்னுந் திருப்பதியிலிருக்கின்ற பிதாப்போல்வாரே,—தவத்தை குறியேன் உயிர் போம் அ பகலிடை - தவத்தைச் செய்யக்கருதாத என்னுடைய உயிர் உடம்பைவிட்டு நீங்குமந்நாளில்,— பரிந்து அஞ்சல் என்று — இரங்கிப் பயப்படாதே என்று,— அவத்தைக்கு தப்பாது உதவுற்றிடுவாய் - ஆபத்துக்குத் தப்பாமல் உதவிசெய்தருளும் எ-று. (௬௯)

சலஞ்சலம் போலற்ற தாபதர் போலவென் றன்னையுமஞ்
சலஞ்சலம் போருகத் தாடந் தனமென்று தானருள்வாய்
சலஞ்சல மென்று வருநீர் வயலிடைச் சஞ்சலமாய்ச்
சலஞ்சல மீற்றுளை தோயுந் தமிழ்ப்புலி யூரவனே.

இ-ள். சலம் சலம் என்று வரும் நீர் வயலிடை - சலம்சல மென்னும் ஓசைபொருந்தி வருகின்ற நீரையுடைய வயலி லே,— சஞ்சலமாய் சலஞ்சலம் ஈற்று உளைந்து ஓடும் தமிழ் புலியூரவனே - சஞ்சலமாகிச் சங்குகள் [முத்துக்களை] ஈனுத ற்கு உளைதோய்கின்ற இனிய புலியூரரே,— சலம் சலம் போல் அற்ற தாபதர்போல - கோபாக்கினியானது தண்ணீர் போலாக நீங்கிய தபோதனர்க் கருளுவதுபோல,— என் த ன்னையும அஞ்சல் அஞ்சல் அம்போருகம் தாள் தந்தனம் எ ன்று அருள்வாய் - [கொடியேனாகிய] என்னையும் பயப்பட தொழி பயப்படாதொழி தாமரைமலர்களை நிகர்த்த பாதங் களைத் தந்தோம் என்று சொல்லி அருளக்கடவீர் எ-று (௭௦)

புலியர வங்கண்டு கொண்டாட வாடும் பராசனனம்
புலியர வங்கிளர் கங்கைச் சடாதரன் பொற்பதத்தைப்
பலியர வங்கண சங்க ரவண்புலி யூரவென்றார்
புலியர வங்கரு திச்திரி வாரிப் புவனியிலே.

இ-ள். இப்புவனியிலே - இந்தப்பூமியிலே.— அவம் கருதி திரிவார் பலியர் - அவமான காரியங்களை விரும்பித் திரிபவ ர்களாகிய இழிந்தோர்கள் — புலி அரவம் கண்டு கொண்டாட ஆடும் பராசனனை - வியாக்கிரபாதமுனிவரும் பதஞ்சலிமுனி வரும் தரிசித்துக் கொண்டாடத் திருநடனஞ்செய்கின்ற பு ராதனரும்.— அம்புலி அரவம் கிளர் கங்கை சடாதரன் - ச ந்திரனையும் ஒலிகிளருகின்ற கங்கையையும் சடையின் மாட் டுத் தரித்தவருமாகிய நடராசருடைய,— பொன் பதத்தை பு[ல்]லி - அழகிய திருவடிகளைமனத்தாற்றழுவி,— அர அ ங்கண சங்கர வண் புலியூர என்றார் - அரனே! அங்கணனே! சங்கரனே! அழகியபுலியூரனே! என்று சொல்லித் துதிக்கின் றார் இல்லை எ-று.; (௭௧)

புவனமுங் காலுங் ககனமு மற்றும் புணர்ந்தமன்றுய்ப்
புவனமுங் காலு மமுதக் கதிரும் புனைந்தகருப்
புவனமுங் காலுந் தாளம் புரள்புலி யூரனைநம்
புவனமுங் காலு மழகுந் தியானித்துப் போற்றுநெஞ்சே

இ-ள். புவனமுங் காலும் ககனமும் மற்றும் புணர்ந்தும் -

பிரிதிவியும் வாயுவும் ஆகாயமும் மற்றைய தேயுவும் அப்புவும் [ஆகிய பஞ்சபூதங்களோடு] பொருந்தியும்,— அன்றிப்- பொருந்தாமலும்,— புவனமும் காலும் அமுதம் கதிரும் புனைந்த -[கங்கையாகிய] நீரினையும் காலுகின்ற அமுதகிரணத்தையுடைய சந்திரனையும் தரித்த,— கருப்புவனமும் காலும் தரளம் புரள் புலியூரனை - கருப்பஞ்சோலையிலும் வாய்க்காலிலும் முத்துக்கள் புரளுகின்ற புலியூரரை,— நெஞ்சே - மனமே,— நம்பு -[எமக்குப் பற்றுக்கோடு என்று] நம்பிக்கை செய்,— வனமும் காலும் அழகும் தியானித்து போற்று - [அவருடைய திருமேனியின்] நிறத்தையும் திருவடிகளையும் அவைகளின் அழகையும் தியானித்துத் துதி எ-று. (௭௨)

சேடனென் றோதியசெவ்வேளைநடுவொற்றுச்சேர்க்குமவன்
சேடனென் றோர்புகழ்த் தென்புலி யூரினன் றெய்வதவி
சேடனென் றோமறுப் பான்பதி மீதுன தேர்செயல்குற்
சேடனென் றேவெற் கருடருங் காணக திகிரிமின்னே.

இ-ள். சேடன் என்று ஓதிய செவ்வேள் - என்றும் இளமையையுடையவரென்று சொல்லப்பட்ட சுப்பிரமணியக் கடவுளும்,— நடு ஒற்று சேர்க்கும் அவன் சேடன் - அவருடைய தமயனாகிய விநாயகக்கடவுளும் — என்று - சூரியனும்,— ஓர் புகழ் தென் புலியூரினன் - ஆராய்கின்ற புகழையுடைய அழகிய புலியூரரும்,— தெய்வத விசேடன் - தெய்வங்களுள் விசேடமானவரும்:— என் தோம் அறுப்பான் - எனது குற்றங்களை அறுப்பவருமாகிய நடராசருடைய,— பதி மீது - ஊரின்கண்ணே,— உனது ஏர்செய் அல்குல் சேடன் - உன்னுடைய அழகைச்செய்கின்ற அல்குலாகிய ஆதிசேடனைத்து,— நம் திகிரி மின்னே - நம்முடைய மலையிற்பெண்ணே,— என்றே எற்கு அருடரும் - எப்பொழுது எனக்குக் கிருபையைச் செய்யும் எ-று. சேடன் - என்பதின் நடுவே ஒற்றைச் சேர்க்கச் சேட்டன் என்றாகும். அவன் சேட்டன் அவருடைய தமயன் என்க. (௭௩)

திகிரிக் கனநிகர் மாலாக மீதுறை செங்கமலத்
திகிரிக் கனமுலை வாணியிந் த்ராணி தினந்தொழுசீர்த்
திகிரிக் கனமொழி மங்கைபங் காளர் திகழ்புலியூர்த்
திகிரிக் கனமுத் தெனவுதித் தாரெங்க டெய்வதமே.

இ-ள். திகிரி கனம் நிகர் மால் ஆகம் மீது உறை செம் கமலத்தி - சக்கிராயுதத்தையுடைய மேகத்தை ஒத்த விஷ்ணுவின்

ன் மார்பிலிருக்கின்ற செந்தாமரைப்பூவை ஆசனமாகவுடைய இலக்குமியும்,— கிரி கனம் முலை வாணி - மலையை ஒத்த வட்டமாகிய முலையையுடைய சரஸ்வதியும்,— இந்திராணி - இந்திரன் மனைவியும்,— தினம் தொழு சீர் - எப்பொழுதும் வணங்குஞ் சிறப்பையுடைய,— கிரி இக்கு அன மொழி மங்கை பங்காளர் - இமயமலையிற் பிறந்த கரும்பைநிகர்த்த வார்த்தையையுடைய உமாதேவிபங்கரும்,— திகழ் புலியூர் கிரி கனம் முத்து என உதித்தார் - விளங்குகின்ற புலியூரிலிருக்கின்ற மூங்கிலினது கனம்பொருந்திய முத்தாக உதித்தவருமாகிய நடராசரே,— எங்கள் தெய்வதம் - எங்களுடைய தெய்வமாகும் எ-று. (௭௪)

வதனங் களையந் துடைப்புலி யூரன் மரபுடைத்தெய்
வதனங் களைகளை மன்னனென் றோர்க்கு வளர்ந்துமிகு
வதனங் களையுறு மோடைசெய் காமனை வண்மைபுகு
வதனங் களைங்கதி மாக்கரி வைய மகுடங்களே.

இ-ள். ஐந்து வதனங்களை உடை புலியூரன் - ஐந்து திருமுகங்களையுடைய புலியூரர்.— மரபு உடை தெய்வதம் - முறைமையையுடைய தெய்வம்.— நம் களை களை மன்னன் - நம்முடைய [மலமாகிய] களையைக் களைகின்ற தலைவர்.— என்றோர்க்கு - என்றுசொல்லித் துதித்தவர்களுக்கு,— அனங்களை உறும் ஓடை செய் கா மனை வண்மை - அன்னங்களைப் பொருந்திய வாவிகளும், வயல்களும், சோலைகளும், மனைகளும், புகழும்,— வளர்ந்து மிகுவது - வளர்ந்து மிகுவதாகும்,— தனங்கள் - திரவியங்களும்.— ஐ கதி மா - பஞ்ச கதியையுடைய குதிரைகளும்.— கரி - யானைகளும்,— வையம் - தேர்களும்,— மகுடங்கள் - முடிகளும்,— புகுவ - வந்துசேருவனவாகும் எ-று. (௭௫)

குடந்தந் திரிமுலைச் சொல்லீ ருலகிற் குளிர்புனற்ச
குடந்தந் திரிவென்ப வர்க்கிகலே குறித் துப்புரிவன்
குடந்தந் திரிகர ணம்முமக் கேசெய்வன் கோன்மதன்ம
குடந்தந் திரித்திடு மாலபுலி யூரர்தங் குன்றிடத்தே.

இ-ள். குடம் தந்திரி முலை சொல்லீர் - குடத்தையும் யாழையும் [முறையே] ஒத்த முலைகளையும் சொற்களையுமுடைய பெண்களே,— உலகில் தம் திரிவு - உலகிலே தங்கள் திரிதல், —குளிர் புனல் சகுடம் என்பவர்க்கு இகலே குறித்து - குளிர்ந்த நீரையுடைய சேம்பிலைபோலப் [பற்றற்றது] என்று சொ

வ்பவர்களுக்குப் பகையைச் செய்து,— குடந்தம் புரிவ
ன - கைகூப்பி மெய்ம்மகாட்டி திறலைச் செய்வேன்,—
திரிகரணம் உமக்கே செய்வன் - மனம் வாக்குக் காயங்களா
ற் செய்யுஞ் செயல்களையும் உமக்கே செய்வேன்,— கொல்
மரன் மகுடம் தந்து - [புட்ப] பாணங்களையுடைய மன்மத
னுடைய மகுடமாகிய தனத்தைத்தந்து,— மால் இரித்திடும் -
எனது மையலை நீக்கும்,— புலியூரர் தம் குன்றிடத்தே - புலி
யூராருடைய மலையினிடத்தே எ-று. (௭௬)

இடந்தால மாவுறை யன்றிலும் பேடு மெழிற்சத்திமார்
பிடந்தாலம்வைத்திடு மூவரும்போன் மின்னுமேந்தலுமன்
ணிடந்தாலம் வாழரி யேற்றுறை யிணர்மேய்ந்தகன்ம
யிடந்தால மேற்றுயி லும்புலி யூர்நகர்க் கேகினரே.

இ-ள். தாலம் இடம் ஆ உறை அன்றிலும் பேடும் - பனையே
இடமாக இருக்கின்ற அன்றிலையும் அதன் பெட்டையையும்,—
எழில் சத்தி மார்பு இடம் தாலம் வைத்திடும் மூவரும்போல் -
[தங்களுடைய] அழகிய சத்திகளை மார்பிலும் வாமபாகத்திலு
ம் நாவிலும் [முறையே] வைத்திருக்கின்ற மும்மூர்த்திகளையும்
போல,— மின்னும் ஏந்தலும் - நாயகியும் நாயகனும்,— ம
ண் இடந்து ஆலம் ஆழ் அரி ஏற்று உறை - பூமியைக்
கிழித்து ஆலிலையில் நித்திரைசெய்கின்ற விட்டுணுவாகிய இ
டபத்தையுடைய சிவபெருமான் தங்கின்ற,— இணர் மேய்ந்
து இகல் மயிடம் தாலம் மேல் துயிலும் - பூங்கொத்துக்களை
மேய்ந்து வலிமைபொருந்திய எருமைகள் பூமியினித்திரை
செய்கின்ற,— புலியூர் நகர்க்கு ஏகினர் - புலியூராகிய நகரத்
திற்குச் சென்றார்கள் எ-று. [௭௭]

ஏகா சலம்ப மியல்திரு மார்ப விரணியமா
மேகா சலம்பயில் விற்புலி யூர வெழில்பெருகு [லா
யேகா சலம்பணி சேர்கொங்கை பங்கவென் றேத்தினல்
லேகா சலம்படி யும்வினை யாய விருட்கடலே.

இ-ள். ஏகாசம் இலம்பம் இயல் திரு மார்ப - உத்தரீயந் தூ
ங்கி அசைகின்ற அழகிய மார்பையுடையவரே,— இரணிய
ம் ஆம் ஏக அசலம் பயில் வில் புலியூர - பொன்னாகிய ஒ
ப்பற்ற மலையாற்பொருந்திய வில்லையுடைய புலியூரரே —
எழில் பெருகு காக அலம்பு அணிசேர் கொங்கை பங்க -

அழகுமிகுந்து முத்துகள் ஒலிக்கின்ற ஆபரணங்கள் சேர்ந்த ஸ்தனங்களையுடைய உமாதேவிபங்கரே,— என்று ஏத்தின் அல்லால் - என்று சொல்லித் துதித்தால் அல்லாமல்,— சலம் படியும் வினை ஆய இருள் கடல் - பொய்பொருந்திய கன்மமாகிய கரியசமுத்திரம்,— ஏகா - போகாவாம் எ-று. (௭௮)

கடநாக மன்னு கயிலையி னான்கரு தார்க்கொருவி
கடனாக மன்புலி யூரன்ப ரோர்கிலர் காண்கவினார்
கடனாக மன்ன கடிதடத் தாயெமைக் காய்வதுவே
கடனாக மன்பிறைப் பன்மாலைக் கூற்றமங் காந்ததுவே.

இ-ள். கவின் ஆர் கடல் நாகம் அன்ன கடி தடத்தாய் - அழகு நிறைந்த கடலையும் சர்ப்பபடத்தையும் ஒத்த நிதம்பத்தையுடைய பெண்ணே,— எமை காய்வதுவே கடனாக - எம்மை முனிவதுவே கடனாக,— மன் பிறை பல் மாலை கூற்றம் அங்காந்தது - பெரியபிறையாகிய பல்லையுடைய சாயங்காலமென்னும் கூற்றானது வாயைத் திறந்தது [அதனை],— கடம் நாகம் மன்னு கயிலையினான் - மதயானைகள் வசிக்கின்ற கைலாச மலையையுடையவரும்,— கருதார்க்கு விகடன் - தம்மை எண்ணாதவர்க்கு விகடராய் இருப்பவரும்,— ஆகமன் - ஆகமத்தையுடையவருமாகிய நடராசருடைய,— புலியூர் அன்பர் ஓர்கிலர் - புலியூரிலுள்ள தலைவர் அறிகின்றாரில்லை எ-று. (௭௯)

காந்தத்தில் வீழு மிரும்பினைப் போற்கனற் கண்ணுதலிற்
காந்தத் திலக நுதலாண் மருங்குறை கத்தனையே
காந்தத்தில் வாழ்த்திற் கவின்புலி யூரன் கமலமதங்
காந்தத்தில் வந்த களிவண்டிற் றோன்றுங் கருத்துறவே.

இ-ள். காந்தத்தில் வீழும் இரும்பினைப்போல் - காந்தத்தில் விழுந்து பற்றுகின்ற இரும்பைப்போல,—கனல் கண்ணுதலில் காந்த - அக்கினிக்கண் நெற்றியில் ஒளியைச்செய்ய,— திலகம் நுதலாள் மருங்கு உறை கத்தனை - திலகமணிந்த நெற்றியையுடைய உமாதேவியின் பக்கத்திலிருக்கின்ற கடவுளை,— ஏகாந்தத்தில் வாழ்த்தில் - தனியிடத்திலிருந்து துதித்தால்,— கவின் புலியூரன் - அழகிய புலியூராகிய அக்கடவுள்,— கமலம் அது அங்காந்தத்தில் வந்த களி வண்டின் - தாமரையினலர்ந்த பூவில் வந்து பொருந்திய களிப்பையுடைய வண்டைப்போல.— கருத்துற தோன்றும் - இருதயத்திலுறுமாறு தோற்றுவார் எ-று. (௮௦)

கருத்தர வல்கு லவர்பா னிறுத்துங் கசட்டுயிர்காள்
கருத்தர வல்ல வினைகெடுப் பீர்கறைக் கண்டரியோ
கருத்தர வல்ல சலச்சிலை யார்புலி யூர்க்கருணைக்
கருத்தர வல்ல மிலரென வேசொல்லுங் கோடவிர்ந்தே.

இ-ள்- அரவு அல்குலவர் பால் கருத்து நிறுத்தும் கசடு உயிர்காள் - சர்ப்பபடத்தை ஒத்த நிதம்பத்தையுடைய பெண்களிடத்தே மனதை நிறுத்துகின்ற குற்றத்தையுடைய ஆன்மாக்களே.— கறைக்கண்டர் [என]- காளகண்டரென்றும்,— யோகர் [என] யோகத்தையுடையவரென்றும்,— உத்தரம் வல் அசலம் சிலையார் [என]- வடக்கேயுள்ள வலிய மேருமலையாகிய வில்லையுடையவரென்றும்,— புலியூர் கருணை கருத்தர் [என]- புலியூரிலிருக்கின்ற கருணையையுடைய தலைவரென்றும்.— அவலம் இலர் என - அவலம் இல்லாதவரென்றும்,— கோள் தவிர்ந்து - குற்றத்தை நீங்கி,— சொல்லும் - சொல்லித் துதியுங்கள்,— [இப்படித்துதித்தால்] கரு தர வல்ல வினைகெடுப்பீர் - பிறவியைத் தரவல்ல வினையைக் கெடுப்பீர்கள் எ-று. (௮௧)

கோக நகத்தைத்த கச்சணி மாமுலைக் கோதைநல்லார்
கோகன கத்தை நிகர்முகத் தாரென்று கூறிமகிழ்
கோகன கத்தை விடீர்புலி யூரனைக் கூடியைய
கோகன கத்தையை பங்கனென் னீர்கும்பிக் காயத்தரே.

இ-ள். கும்பி காயத்தரே - நரகத்திற்கேதுவாகிய சரீரத்தை யுடையவர்களே,— கோகம் நக தைத்த கச்சு அணி மாமுலை கோதை நல்லார் - சக்கரவாகப்புள்ளினை இகழ்ந்து நகைக்கும்படி தைத்த கச்சினை அணிந்த பெரிய முலையையுடைய பெண்களை,— கோகனகத்தை நிகர் முகத்தார் என்று கூறி மகிழ் கோகு அன கத்தை விடீர் - தாமரைப்பூவை ஒத்த முகத்தையுடையவர்கள் என்று சொல்லி மகிழ்ச்சி கொள்ளுகின்ற கழுதை [கத்துதல்]போன்ற கத்துதலை விடுகின்றீர்களில்லை,— புலியூரனை கூடி - புலியூரரைச் சேர்ந்து,— ஐயகோ - ஐயோ,— கனகத்து ஐயை பங்கன் என்னீர் - மலைமகளாகிய உமாதேவி பங்கர் என்று சொல்லித் துதிக்கின்றீர்களுமில்லை எ-று. (௮௨)

[ணைபோற்

காயத்தைக் கும்பியை மெய்யென் றிரேங்கைக் கடுங்க
காயத்தைக் கும்பினைக் கட்டறுப் பேமெய்க் கதிபரமா
காயத்தைக் கும்பிடு மன்பர்க்கன் பான கருணையஞ்ச
காயத்தைக் குஞ்சிச் சடைப்புலி யூரனைக் கைதொழுதே.

இ-ள். மெய் கதி பரம ஆகாயத்தை - மெய்ம்மையாகிய க
தியையுடைய பரமாகாச வடிவமா யிருப்பவரும்,— கும்பிடு
ம் அன்பர்க்கு அனபான கருணை அம் சகாயத்தை - [தம்மை]
வணங்குகின்ற அன்பர்களுக்குப்பிரியமான கிருபையைச் செ
ய்கின்ற அழகிய உதவியாயிருப்பவரும்,— குஞ்சி சடை புலி
யூரனை - குஞ்சியாகிய சடையை யுடையவருமாகிய நடராச
ரை,— கை தொழுது - கைகுவித்து வணங்கி,— கை கடும்
கணை போல் காய நைக்கும் வினை கட்டு அறுப்பேம் - கை
யாற் செலுத்துகின்ற கடுமையாகிய அம்பைப்போல மெலிய
த் தைக்கின்ற வினைக்கட்டை அறுப்பேம்,— காயத்தை கும்
பியை மெய் என்று இரேம் - [ஆதலால்] உடம்பையும் நரகத்
தையும் [எமக்குக்கிடைப்பது] மெய்யென்று நம்பியிருக்கமா
ட்டேம் எ-று. (௮௩)

கைவல மும்மைத் தொழிற்புலி யூர கருதுமது
கைவல மும்மிகு முப்புரந் தீயிட்ட கண்ணுதலே
கைவல மும்மிட மும்மறி யாத கசடனெற்குக்
கைவல முந்தந் தடைப்பாய் வழியைக் கருவதற்கே.

இ-ள் மும்மை தொழில் கைவல புலியூர - முத்தொழிலையு
ஞ் செய்யவல்ல புலியூரரே,— கருதும் மதுகை வலமும் மிகு
ம் முப்புரம் தீ இட்ட கண்ணுதலே - எண்ணப்படுகின்ற வலி
மையும் வெற்றியும் மிகுந்த முப்புரங்களில் அக்கினியை இட்
ட நெற்றிக்கண்ணரே,— கை வலமும் இடமும் அறியாத கச
டனெற்கு- கையின் வலப்பக்க மிதுவென்றும் இடப்பக்க மி
துவென்று மறியாத கசடனாகிய எனக்கு,— கைவலமும்
தந்து - மோக்ஷத்தையுந் தந்து,— கருவதற்கு வழியை அடை
ப்பாய் - பிறவியினது வழியை அடைக்கக் கடவீர் எ-று. (௮௪)

தற்கங்கள் செய்யுஞ் சமயங்க டோறுந் தரித்தபிரான்
றற்கங் கமஞ்செழுத் தாம்புலி யூரன் சகத்தவரோ
தற்கங் கமாகம மாரணந் தந்தவன் சற்புலிப்பா
தற்கங் கருநடங் காட்டியென் னூர்க்கில்லை தார்க்கச்சமே.

இ-ள். தற்கங்கள் செய்யும் சமயங்கள் தோறும் தரித்த பி
ரான் - ஒன்றுக்கொன்று பிரதிவாதிக்கின்ற சமயங்கடோறுந்
தங்கிய கடவுளும்,— தற்கு அங்கம் அஞ்சு எழுத்து ஆம் புலி
யூரன் - தமக்கு உறுப்பு ஸ்ரீபஞ்சாக்ஷரமாகவுடைய புலியூர
ரும்,— சகத்தவர் ஓதற்கு அங்கம் ஆகமம் ஆரணம் தந்தவ
ன் - பூமியிலுள்ளவர்கள் ஓதியுணர்தற்காக ஆறங்கங்களையும்

இ-ள். பாழ் மனமே - கேட்டினையுடைய மனமே! — மிகு பத்தியினால் - மிகுந்த பத்தியோடு, — நம்பர் பால் இந்து முடி புலியூரர் பராம் புயத்தின் பால் நம்பு - நம்பரும் வெண்மையாகிய சந்திரனைத் தரித்த முடியையுடைய புலியூரருமாகிய நடராஜருடைய திருவடித் தாமரைமலர்களை விசுவசி; — நம இன்னலை அரிந்து விடுவார் - [அப்படி விசுவசித்தால் அவர்] நம்முடைய துன்பத்தைக் களைந்து விடுவார்; — உடையார் இல் ஒன் மோழை பானம் பரிந்து - செல்வமுடையவர்கள் வீட்டில் உள்ள கஞ்சியைப் பானமாக விரும்பி, — பயின்ற நல் சோபானம் பரிந்து திரிய விடார் - [அவர்கள் வீட்டிற்] பொருந்திய தாழ்வாரத்தில் வருந்தித் திரியவும் விடார் எ-று. (கூo)

பாணித் திலக மெனுங்கங்கை வேணிய னைப்பதுமப்
பாணித் திலமன்ன துண்டத் தனப்பொற் பரியபொருப்
பாணித் திலநகை சேர்புலி யூரனைப் பாடிநெஞ்சே
பாணித் திலமினி யெவ்வண்ண மோநம் பவஞ்சிந்துமே.

இ-ள். பாணி திலகம் எனும் கங்கை வேணியனை - நீர்களுக்குத் திலதம்போன்றதென்று சொல்லப்படுகின்ற கங்கையைத் தரித்த சடையையுடையவரும், — பதுமம் பாணி - தாமரைப்பூவைநிகர்த்த கையையும், — திலம் அன்ன துண்டம் - எட்பூவை நிகர்த்த மூக்கையும், — தனம் பொன் பரிய பொருப்பாள் - முலையாகிய அழகிய பருத்த மலையையுமுடையவரும், — நித்திலம் நகை - முத்தினையொத்த நகையையுடையவருமாகிய உமாதேவியார், — சேர் புலியூரனை - சேருகின்ற புலியூரருமாகிய நடராசரை, — நெஞ்சே - மனமே, — பாடி பாணித்திலம் - துதித்துப்பாடி நாள்களை நீட்டித்தோமில்லை; — இனி எவ்வண்ணம் நம் பவம் சிந்தும் - இனி எப்படி நம்முடைய பிறவிகெடும்? எ-று. (கூக)

சிந்தா மணிதென்ற லன்றிலு மற்றுமென் சிற்றுயிரைச்
சிந்தா மணியைச் சிதைவிக்கு மாற்செகந் தானிரக்கச்
சிந்தா மணித்துள வத்தோன் பரவுந் திகழ்புலியூர்ச்
சிந்தா மணியை வரக்கண்டி லேனின்னந் தேனினமே.

இ-ள். சிந்து ஆ மணி தென்றல் அன்றிலும் மற்றும் - சமுத்திரமும் பசுவின்கழுத்தின்மணியும் தென்றலும் அன்றிலும் பட்சபாணமுதலிய பிறவும், — என் சிறு உயிரை சிந்தா மணியை சிதைவிக்கும் - என்னுடைய சிறிய உயிரைச் சிந்தும் அழகையுங் கெடுக்கும்; — இரக்க - [மாவலியிடத்தில்

பூமியை] யாசிக்கும்படி,— சிந்து ஆம் அணி துளவத்தோன் பரவும் - குறள் வடிவமான அழகிய துளசிமாலையையுடைய விட்டுணு வணங்குகின்ற,— திகழ் புலியூர் சிந்தாமணியை - விளங்குகின்ற புலியூரிலிருக்கின்ற சிந்தாமணி போன்ற நடேசனை,—தேனினமே இன்னம் வர கண்டிலேன் - வண்டுக் கூட்டங்களே இன்னும் வரக்காணேன் எ-று. (கூ௨)

தேனினம் பார்ந்து தெவிட்டி யுவட்டித் தியங்கிமிகுந்
தேனினம் பாய்கொன்றை யன்புலி யூரனைச் சென்றுபணிந்
தேனினம் பாத செலவாற் புலன்செயுந் தீமைசிதைத்
தேனினம் பாவிநெஞ் சேசெல்வ னோபழிச் சென்மத்திலே

இ-ள். தேன் இன் அம்பு ஆர்ந்து - தேனாகிய இனிய நீரை உண்டு,—தெவிட்டி உவட்டி தியங்கி மிகும் தேன் இனம் பாய - தெவிட்டியும் உவட்டியும் தியங்கியும் மிகுந்த வண்டுக் கூட்டங்கள் பாய்கின்ற,— கொன்றையன புலியூரனை சென்று பணிந்தேன் - கொன்றை மாலையை யுடைய புலியூரரைச் [அங்கே] சென்று வணங்கினேன்,— பாவி நெஞ்சே - பாவியாகிய மனமே — நின் நம்பாத செலவால் புலன் செயும் தீமை சிதைத்தேன் - உன்னுடைய நம்பாத செலவினாற் பஞ்சப் புலன்களுஞ் செய்கின்ற தீவினையையுங் கெடுத்தேன் ;—பழி சென்மத்தில் இனம் செல்வனோ - குற்றத்தையுடைய பிறவியில் இன்னுஞ் செல்லுவேனோ? [செல்லேன்] எ-று. (கூ௩)

மத்தன் பராபரை வல்லவ னெல்லணி மந்தரமா
மத்தன் பராக மலர்த்தா திறைத்து மணத்தபது
மத்தன் பராவிடு தென்புலி யூரன் மனமெனுஞ்சே
மத்தன் பராலறி யப்படு வானெங்கும் வாய்த்திருந்தே.

இ-ள். மத்தன் - களிப்பையுடையவரும்,— பராபரை வல்லவன் - உமாதேவிக்கு நாயகரும்,— எல் அணி மந்தரம் ஆம் மத்தன் - ஒளிபொருந்திய அழகிய மந்தரமலையாகிய மத்தினையுடைய விட்டுணுவும்,— பராகம் மலர்த்தாது இறைத்து மணத்த பதுமத்தன் - தூளியாகிய பூந்தாதினைச் சொரிந்து பரிமளிக்கின்ற தாமரைப் பூவாசனத்தையுடைய பிரமதேவரும்,— பராவிடு தென் புலியூரன் - துதிக்கின்ற அழகிய புலியூரருமாகிய நடராஜர்,— எங்கும் வாய்த்திருந்து - எங்கும் வியாபித்திருந்தாலும், — மனம் எனும் சேமத்து அன்பரால் அறியப்படுவான் - மனம் என்கின்ற சேமத்தையுடைய மெய்யன்பரால் அறியப்படுவார் எ-று. (கூ௪)

இரும்பன நெஞ்சைக் குழைத்தவ ரேயிரங் காதினிதா
யிரும்பன வத்துங்கள் சாரலிற் கேட்கு மிணங்குநெற்ப
யிரும்பன சத்திர ளும்புடை சூழெங்க ளின்புலியூ
ரிரும்பண கத்தணி யான்சிலம் போசை யெனுஞ்செல்வமே

இ-ள். இரும்பு அன நெஞ்சை குழைத்தவரே - இரும்பினை ஒத்த [என்] மனத்தைக் குழைத்த மகளிரே,— இணங்கும் நெற்பயிரும் பனசத் திரளும் புடைசூழ் - பொருந்திய நெற்பயிரும் பலாமரக் கூட்டங்களும் பாங்கரிற் சூழ்ந்த,—எங்கள் இன் புலியூர் இரும் பணகத்து அணியான் -எங்களுடைய இனிய புலியூரிலுள்ள பெரிய பாம்பாலாகிய ஆபரணத்தையுடைய நடராஜருடைய,— சிலம்பு ஓசை எனும் செல்வம் - சிலம்பிலிருந்து எழுகின்ற ஓசையென்னுஞ் செல்வமானது,— பல் நவத்து உங்கள் சாரலில் கேட்கும் - பல புதுமைகளையுடைய உங்கள் சாரலிலே கேட்கும்;— இரங்காது இனிதாய் இரும் - [ஆதலால்] இரங்காமல் இனிதாயிரும் எ - று. (கஎ)

செல்வா ரணக்குழற் கண்டத்தர் மாயையுட் சேர்ந்திடினுஞ்
செல்வா ரணமுதற் சென்மமுற் றாலுமென் செய்திடினுஞ்
செல்வா ரணக்கணிச் சிப்புலி யூர சிறியன்முத்தி
செல்வா ரணவுநின் றாண்மற வாவரஞ் செய்தருளே.

இ-ள் செல் வாரணம் குழல் கண்டத்தர் மாயையுள் சேர்ந்திடினும் — மேகத்தையும் சங்கையும் முறையே யொத்த கூந்தலையுங் கழுத்தையுமுடைய மகளிர் மயக்கத்திற் சேர்ந்தாலும்,— செல் வாரணம் முதல் சென்மம் உற்றாலும் - செல்லுகின்ற யானை முதலிய சென்மத்தையடைந்தாலும்,— என் செய்திடினும் - என்னசெய்தாலும்,— செல்வா - செல்வரே, — ரணம் கணிச்சி புலியூர - போரைச் செய்கின்ற மழுப்படையை யுடைய புலியூரரே,— சிறியன் முத்தி செல்வார் அணவும் நின்றாள் - சிறியேனாகிய யான் முத்தியிற் செல்லும் பக்குவர்கள் அடைகின்ற நுந் திருவடிகளை,— மறவா வரம் செய்தருள் - மறவாத வரத்தினைச் செய்தருளும் எ-று. (கஅ)

செய்யா னனந்தகைச் சேக்கையம் வாரிசத் தேன்பருகிச்
செய்யா னனந்தலை பாய்புலி யூரன் செழுங்கருணை
செய்யா னனந்தமை யைந்துடை யான்றிரு மேனிமிகச்
செய்யா னனந்தருஞ் சேர்வானென் சிந்தையம் பஞ்சரமே.

இ-ள். செய்யான் - நேர்மையை யுடையவரும்,— அனம் தகை சேக்கை அம் வாரிசம் தேன் பெருகி - அன்னங்கள் பொருந்ததலையுடைய சேக்கையாகிய அழகிய தாமரைப்பூ விலுள்ள தேனானது பெருகி,— செய்யால் நனந்தலை பாய் புலியூரான் - வயலில் நடுவே பாய்கின்ற புலியூரரும் ,— செழு கருணை செய் ஆனனம் தமை ஐந்துடையான் - செழுமையாகிய கிருபையைச் செய்கின்ற முகங்களை ஐந்தாகவுடையவரும்,— திரு மேனி மிக செய்யான் - அழகிய சரீரம் மிகவுஞ் செம்மையாகவுடையவருமாகிய நடராசர்,— என் சிந்தை பஞ்சரம் - என் மனமாகிய கூட்டினிடத்தே,— அனந்தரம் சேர்வான் - பிரிவின்மையாகச் சேர்ந்திருப்பார் எ-று. (கள)

பஞ்சரங் கொண்ட கிளிமொழி பாக பகர்வதன
பஞ்சரங் கன்பணி யும்புலி யூரவென் பண்ணியபா
பஞ்சரம் போற்பட வாடுநெஞ் சேநம் பவங்களெனும்
பஞ்சரங் குந்தழல் போலா யருளுமின் பச்சுகமே.

இ - ள் பண்ணிய பாபம் சரம்போல் பட வாடும் நெஞ்சே - செய்த தீவினையானது அம்பினைப்போல ஊறுசெய்ய [அதனால்] வாடுகின்ற மனமே,— பஞ்சரம் கொண்ட கிளி மொழி பாக - கூட்டினை யிடமாகக்கொண்ட கிளியின் மொழியைநிகர்த்த மொழியையுடைய உமாதேவிபாகரே,— பகர் வதன பஞ்ச - சொல்லப்பட்ட முகங்கள் ஐந்தினையுடையவரே,— ரங்கன் பணியும் புலியூர என் - ஸ்ரீரங்கத்திலிருக்கும் விஷ்ணு வணங்குகின்ற புலியூரரே என்று சொல்லித்துதி ;— நம் பவங்கள் எனும் பஞ்சு அரங்கும் தழல் போலா [இப்படிச்செய்தால் அவர்] நம்முடைய பவங்கள் என்கின்ற பஞ்சு கெடுதற்குக் காரணமாகிய அக்கினிபோலத் தோற்றப்பட்டு,— இன்பம் சுகம் அருளும் - இன்பமாகிய சுகத்தைத் தருவார் எ-று. (கஅ)

சுகம்பன் னகஞ்சொ ளிதம்பமம் பாலிகை தூயநற்கிஞ்
சுகம்பன் னகஞ்சசி யின்சின்ன நண்பவத் தோகைக்குவிஞ்
சுகம்பன் னகந்தர மம்புலி யூரர் சுடர்க்கிரிமேற்!
சுகம்பன்னகங்கொள்ளுமோமெய்யெலாமச் சுரர்புத்தமே.

இ - ள். அம் புலியூரர் சுடர் கிரிமேல் - அழகிய புலியூரருடைய ஒளிபொருந்திய மலையில்,— நண்ப - பாங்கனே,— அ தோகைக்கு - அந்தப் பெண்ணுக்கு ,— சொல் நிதம் பம் சுகம் பன்னகம் - வார்த்தையும் அல்குலும் கிளிமொழி

யையுஞ் சர்ப்படத்தையும் போலும்,— அம்பாலிகை ஆய நல் கிஞ்சுகம் - அதரம் பரிசுத்தமாகிய நல்ல முருக்கம் பூவைப் போலும்,— பல் நகம் சசியின் சின்னம் - பல்லும் நகமுஞ் சந்திரனின் துண்டத்தைப் போலும்,— கந்தரம் விஞ்சு கம்பு அன்ன - கழுத்து மிகுந்த சங்கினைப் போல்வன, — மெய் எலாம் அ சுரர் புத்தம் - மேனி முழுவதும் அந்தத் தேவர்களுடைய உணவாகிய அமிர்தத்தைப் போலுமினியன,— சுகம் பன்ன அகம் கொள்ளுமோ - [இவ்வியல்புடைய பெண்ணோடு கூடின] சுகத்தைச் சொல்ல மனங் கொள்ளுமோ? எ-று. (௯௯)

புத்திக் குறுபசுந் தேனமு தாம்புலி யூரனென்றாற்
புத்திக் குடைய கலைமங்கை சேரும் பொருந்துபொருப்
புத்திக் குலவு புகழ்மிக நீடும் புவனியிலே
புத்திக் குரிய பொருடந்து மேவிடும் பூந்திருவே.

இ-ள். புது இக்கு உறு பசு தேன் அமுது ஆம் புலியூரன் என்றால் - புதுமை யாகிய கரும்பும் பொருந்திய பசுமையாகிய தேனும் அமிர்தமும் போல இனிமையாயிருக்கின்ற புலியூரர் என்று சொல்லித்துதித்தால்,— புத்திக்குடைய கலை மங்கை சேரும் - [துதிப்பவர்களிடத்திலே] அறிவுக்குரிய சரஸ்வதியுஞ் சேரும்,— பொருந்து பொருப்பு திக்கு உலவு புகழ் மிக நீடும் - பொருந்திய மலைகளிலும் திக்குகளிலும் உலவுகின்ற கீர்த்தியும் மிக வளரும்;—பூ திரு - தாமரைப்பூவிலிருக்கின்ற இலக்குமியும்,— புவனியிலே புத்திக்கு உரிய பொருள் தந்து மேவிடும் - பூமியிலே அநுபவித்தற்குரிய பொருள்களைத்தந்து தங்கியிருப்பாள் எ-று. (௧௦௦)

புலியூர்யமகவந்தாதி மூலமுமுரையும்

முற்றுப்பெற்றன.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY